padippakam




படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

நூல் : நாற்று

ஆசிரியர் : கவிஞர் கந்தையா இராஜமனோகரன்

பதிப்பு : திருவள்ளுவராண்டு 2034
ஆடவை (ஆனி)த் திங்கள்

அச்சுப்பதிப்பு : வாசன் அச்சகம், இலண்டன்

Title : Naatru

Author/Publishers : Poet Kandiah Rajamanoharan

First Published : June 2003

Language : Tamil

Printed by : Vasan Printers, London

ISBN No : 0 9545296 0 X

---

கவிஞரின் பிற நூல்கள்: தமிழிசைப் பாடல்கள் - 2003
வானொலிக் கவிதைகள் - 2003

padippakam

# நாற்று

கவிஞர் கந்தையா இராஜமனோகரன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# நாற்றை அறிந்தவரின் அணிந்துரை...

பிஞ்சுப் பருவத்திலேயே தமிழன்னை கொஞ்சி வளர்த்த பிள்ளை இராசமனோகரன்.
வாழ்நாளெல்லாம் தமிழ், தமிழ்மண், தமிழினம் என வாழும் அவரைப் பெற்றவள் தாய் – வளர்த்தவள் தமிழ்.

தமிழீழ மண்ணில் அவர் காலடித்தடம் பதியாத இடமில்லை.
கல்லூரிகள் அவர் சொல்மாரிகள் கண்டன.
இலக்கிய விழாக்களைக் கலக்கிய குரல் அது.
தமிழீழ உணர்வாளனாய் எப்போதும் தன்னை அடையாளம் காட்டும் தமிழ் முகம்.
இலக்கியத் தேடல் இராசமனோகரனோடு இணைந்திருப்பது.
வெளிச்சமாய் – மனத்திற் பட்டதை மறைக்காமல் வெளியே சொல்லும் வெள்ளைத்தனம்.

இராசமனோகரனை எனக்குப் பிடிக்கும்.
அவர் எழுதித் தொகுத்துள்ள இத்தமிழ்ப் படைப்புக்கு அணிந்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதுதான் இராசமனோகரனின் இலட்சியம்

**தன்மானம் மிக்குடையோன் தமிழன் என்றுலகுள்ள**
**எந்நாடும் உனைப் போற்ற எழில் பூத்த வாழ்வமைப்பாய்!**
**இந்நாடு உன்னாடு இனிய தமிழ்ப் பொன்னாடு**
**எந்நாளும் இது உனதே எனுங்காலம் உடன் சமைப்பாய்!**

(நாற்று – தன்மானத் தமிழினமே...)

சரி.
எப்படி இந்த இலட்சியத்தை எட்டிப் பிடிப்பது?

இருண்ட தமிழர் நெஞ்சில் ஒளி ஊட்டுகிறார் – பிரிவினைச் சேற்றிலே புரண்ட தமிழனுக்கு வழிகாட்டுகிறார் இராசமனோகரன்.

**ஒன்று நாம் ஆகில் நன்றாகும்**
**ஒற்றுமை ஓரணி என்றாகில்**
**இன்று நம் ஈழம் எமதாகும்!**
**எழிலுருவான நிலம் மீளும்!**

(வானொலிக் கவிதைகள் – நிலத்தின் அழகும் புலத்தின் எழிலும்)

படிப்பகம்

padippakam



ஒன்றுபட்டால் மட்டும் போதுமா? அடிமைத்தனம் ஒழிந்து போகுமா?
வென்று விட்டோம் என்று ஆகுமா?

**நோகாமற் பிள்ளைப் பெற முடியாது**
**நொந்துதான் எல்லோரும் பெற்றுள்ளார்கள்**
**சாகாத தமிழுக்காய் உயிரை விட்டுச்**
**சளைக்காமல்(த்) தமிழ்ப்போரிற் பங்கெடுப்பீர்!**

(நாற்று – மறைமலை அடிகள் பிறந்திலரேல்...)

இடியாய் முழங்குகிறார் இராசமனோகரன்.

வலிமிக்க அவர் குரலுக்கு இலக்கணமாய்ப் புலி நிற்கக் கண்டு களிமிக்க நெஞ்சினராய்க் கூத்திடும் அவர் தமிழ் வரிகள் ஒளிமிக்கவை.

**மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள்– தமிழ்**
**வாழ்தற்காய்ச் சாவுதனை மகிழ்ந்தேற்றோர்கள்!**
**மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள்– தம்**
**மலைத்தோளால் மண் காத்த தமிழ்வேங்கைகள்!**
**மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள்– எம்**
**வரலாற்றில் நாம் கண்ட எரிமலைகள்!**
**மாவீரர் விடுதலையின் மாவித்துக்கள்– தமிழ்**
**மானத்தைக் காத்து நின்ற மாதெய்வங்கள்!**

(வானொலிக் கவிதைகள் – விடுதலை வித்துக்கள்)

இராசமனோகரனை அடையாளம் காண இந்த எட்டு வரிகள் போதும்.

தமிழை – தமிழனை – தமிழ் மண்ணைத் தாங்கும் அவர் தமிழ்...
தழைத்தோங்கும் –
தமிழர் வாழ்வினைச் சூழ்ந்த இருள் நீக்கும் –
என்பதில் ஐயமில்லை.

**காசி ஆனந்தன்** (மட்டக்களப்பு, தமிழீழம்)
சென்னை
25.05.2003

படிப்பகம்

padippakam



# நட்டவின் அறிந்தவரின் அணிந்துரை...

உள்ளத்தில் தமிழின்பால் நீங்காக் காதல் தமிழர்
    உலகில் முன்னேறிச் சிறக்கத்
தெள்ளிய நல்விழைவு எஞ்ஞான்றும் இராச மனோகரர்க்குத்
    தமிழரை நெஞ்சில் எண்ணி
உள்ளத்து எழுந்தவற்றை ஈழமண்ணில் விதைத்து நீரோடு
    உரமிட்டு வளர்த்து நாற்றாக்கிச்
சொல்லின்பம் கூட்டிக் கொணர்ந்திங்கு விளைச்சல் கண்டு
    தொலைவான இந்நாட்டில் ஈந்தார்.

பிள்ளைகட்கு அம்மன் கோயிலில் சைவநெறி புகட்டுவார்
    பழைய நம் கலைகளொடு இலக்கியம்
உள்ளமுவந்து வளர்க்குமிவர் வானநூல் கணியம்
    பயின்றதனால் வரும் நிகழ்வை முன்குறித்தார் தம்நூலில்.

இளமைப் பருவத்தே எழும் பல நினைவுகளைக் காதலுடை
    இனியநற் பாக்களாய் இயற்றிப்பின்
களம்புகுந்து தமிழர்நம் மண்ணுரிமை மொழிநலன் காக்கச்
    சமர்தொடுத்து உரிமை காத்தலை
எழிலொழுக வரலாறாய் எழுதிவைத்தார் பாவடிவில் சிறப்பு
    எல்லாம் எய்தி மீளவும்
தமிழினம் செம்மாந்து திகழ்ந்திடச் செயல்முறை பலவும்
    செப்பினர் வாழ்க! வாழ்க!

நாற்று வழங்கும் கருத்து வளமிக்கச் சுவையான சில
பாக்கள்—

சூட்டினால் முடியை எங்கள் சுந்தரத் தமிழன்னைக்கே
நாட்டிலே பகைமை வீழும் நல்லறம் இனிதே ஓங்கும்
பாட்டிலே புலமை தோயும் பாரிலே நமது பெண்கள்
ஈட்டிய பெருமை ஓங்கும் இல்லறம் இனிதே நிகழும்

(முடிசூட்டுவோம் எங்கள் முத்தமிழ் அன்னைக்கே)

படிப்பகம்

padippakam



உழைக்கும் கரங்கள் உயரட்டும்
உரிமை அனைத்தும் பரவட்டும்
தழைக்கும் இன்பம் அத்தனையும்
தரணியில் எவர்க்கும் பொதுவாகும்
உழைக்கும் மக்கள் அனைவர்க்கும்
உரிமை உண்டு உணர்ந்திடுவீர்
அழைக்கும் மோட்சம் அனைவரையும்
அன்பாலெவரும் சமமென்றால்.

(உழைக்கும் கரங்கள் உயரட்டும்)

அறம்வெல்லும் ஓர்காலம் அன்புடைத் தமிழர் கொண்ட
திறம் மிக்க தீரம் என்றோ தீப்பிழம் பன்ன ஓங்கி
விறன்மிகு வேங்கையன்ன வெஞ்சினம் கொண்டு மாற்றார்
புறன்முது கிட்டோடப் புரிவரே பெரும்போ ரொருகால்.

(முடிசூட்டுவோம் எங்கள் முத்தமிழ் அன்னைக்கே என்ற கவிதை 1971 ஆம் ஆண்டிலேயே வரும் நிகழ்வை முன்னறிந்து எழுதப்பட்டது.)

**விழைவும் வாழ்த்தும் :**

**நிலையில் தமிழர் உயர்ந்திட யாண்டும்**
**பலவும் செய்வோம் முனைந்து.**

**அரங்க முருகையன்**

அறிவகம், ஈலிங்கு, இலண்டன்
திருவள்ளுவராண்டு 2033 சிலை (மார்கழி) 9ம் நாள்
(ஆங்கிலம்: 23. 12. 2002)

படிப்பகம்

padippakam



# வாழ்த்துரை...

**தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்**
**பரவும் வகை செய்தல் வேண்டும்**

சென்ற நூற்றாண்டின் முற்கூறுகளிலே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கண்ட ஆக்கபூர்வமான இனிய கனவுகளில் இதுவுமொன்று. அந்த இனிய கனவை நனவாக்குவதில், பல்வேறு காரணிகளாலே புலம் பெயர்ந்து வாழ்கின்ற ஈழத்தமிழருக்கும் கணிசமான பங்குண்டு. அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, சுவிற்சிலாந்து, பிரான்சு, ஜேர்மனி முதலிய நாடுகளிலே தத்தம் பொருள்வளத்தை வளர்ப்பதை முதன் நோக்கமாகக் கொண்டு இயந்திர கதியில் இயங்கினாலும் கூட நாம் தமிழர் என்னும் இனிய முகத்திரையைக் கிழித்துவிட்டு அந்தந்த நாட்டு அநாசாரங்களை ஆசாரங்களாக எண்ணி மயங்கி வாழ்ந்தாலும்கூட ஒளி படைத்த கண்ணினராயும் உறுதி கொண்ட நெஞ்சினராயும் தெளிவுபெற்ற மதியினராயும் வாழ்ந்து நலம்பல செய்வோரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்கள் ஈழத்தாயகத்தை மறவாதவர்கள். அந்தத்தாயகம் எவர்க்கும் அடிமையாகாத சுதந்திர பூமியாக இருக்க வேண்டும் என்பதை மறவாதவர்கள். தமிழ் மொழியின் உன்னதத்திற்கு உயிர் கொடுக்கும் ஆக்க முயற்சிகளை மறவாதவர்கள். அவர்களில் ஒருவருடைய குரல் கேட்கிறது...

**ஈழம் வடக்கில் இசைந்த யாழ்ப்பாணம்**
**இலங்கும் ஓரூர் இனிய சுதுமலை**
**கோலம் கொள் கவி இராச மனோகரன்**
**கொண்டது வாழ்வின் றிங்கிலாந்து**

பதினான்கு ஆண்டு காலம் இங்கிலாந்தை வாழிடமாகக் கொண்ட கவிஞர் இராசமனோகரன் எல்லா வகையிலும் பண்பாடு மிக்க நல்லதோர் தமிழனாகவே வாழ்கின்றார். தமிழும் சமயமும் அவர்தம் இரு கண்கள். அந்த இரு கண்களும் கூர்மையான பார்வை கொண்டவை.

படிப்பகம்

padippakam



இலண்டன் தமிழ் இலக்கிய மன்றத்தின் தலைவனாக இருந்து, இளம் எழுத்தாளரின் ஆக்கங்களை வெளியிட்டும் இலண்டனிற்குச் செல்லும் புகழ் பூத்த எழுத்தாளரைக் கௌரவித்தும் தமிழோசை பரவும் வகை செய்து வருகின்றார்.

இங்கிலாந்திலே பிறந்து வளரும் தமிழ் தெரியாத தமிழ்க் குழந்தைகளுக்கு முறையாகத் தமிழ் வகுப்புக்கள் நடாத்தி அரிய தொண்டு செய்து வருகின்றார். இதுவே தமிழோசை பரவும் வகை செய்யும் பெருந் தொண்டாகும்.

சைவ முன்னேற்றச் சங்கத்தின் சஞ்சிகையான கலசம் ஊடாகச் சைவ சிந்தாந்தத்தைப் பாடமாகப் படிப்பித்து வரும் இவருடைய சேவை போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

இவற்றைவிட அனைத்துலகக் கூட்டுத்தாபனம் (ஐ.பி.சி.) தமிழ் ஒலிபரப்பிலே முன்னர் பல நிகழ்ச்சிகளை நடத்தி வந்தவர் இப்போது சனிக்கிழமைகளிலே மஞ்சரி என்னும் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றார். அது சமூக மஞ்சரியாக மலர்கின்றது. ஒன்றுவிட்டு ஒரு சனி, வைத்தியக் கலாநிதியும் தமிழ்ப் பற்று மிக்கவருமான தன் துணைவியாரோடு இணைந்து மருத்துவ மஞ்சரியாக நிகழ்ச்சியை நடத்துகின்றார்கள். அவ்வப்போது தமிழ்த் தொலைக்காட்சியிலும் தமிழ் சம்பந்தமான நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றார். இவையெல்லாம் கவிஞர் இராசமனோகரனின் தனி மனித முயற்சிகளே. இம்முயற்சிகள் யாவற்றோடும் இவர் ஒரு முழுநேரப் பொறியியலாளராகக் கடலின் கீழான பெற்றோலியக் கட்டுமானத் துறையிலே பணி புரிந்து வருகின்றார்.

நல்லதோர் குடும்பம் பல்கலைக்கழகம் என்று போற்றுவார்கள். கவிஞர் இராசமனோகரனின் குடும்பமும் அத்தகையதே. கவிஞரது துணைவியார் மனைத்தக்க மாண்புடையவர். சிறந்த வைத்திய கலாநிதி. கணவனைப் போலவே தமிழுணர்வும் தமிழார்வமும் மிக்கவர். மகனான செந்தூரன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலே இயற்கை விஞ்ஞானத்துறை மாணவனாகப் பயில்கின்றார். இவர்

padippakam



வேய்ங்குழல் அரங்கேற்றத்தை முடித்து மிருதங்க அரங்கேற்றத்திற்கு ஆயத்தமாகி வருகின்றார். மூத்த மகளான சிவகாமி வயலின் அரங்கேற்றம் முடித்துள்ளார். இளைய மகள் அபிராமி வீணை பயின்று வருகின்றார். பிள்ளைகள் மூவரும் நான்காண்டுகளுக்கு முன்னரே பரதநாட்டியத்தை அரங்கேற்றி முடித்துள்ளனர். மூவரும் தமிழிசை பயின்று வருகின்றனர். இவை யாவற்றுக்கும் அடிப்படையான தமிழ் மொழியையும் இவர்கள் கற்று வருகின்றனர். இவ்வாறு தமிழுணர்வும் தமிழ்க்கலையார்வமும் சைவநெறிப்பற்றும் நிறைந்த குடும்பம் ஒன்றினை நெறிப்படுத்தி வளர்க்கும் தலைவனாக விளங்கும் இராசமனோகரன், புலம் பெயர்ந்து வாழும் பல்லாயிரம் குடும்பங்களுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாய் வாழ்கின்றார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே சென்ற நூற்றாண்டின் அறுபதுகளிலே தமிழாசிரியனாகப் பணி புரிந்த காலத்தில், இராசமனோகரன் மாணாக்கனாகக் கல்வி கற்று வந்தார். எல்லாப் பாடங்களிலும் திறமையும் குறிப்பாகத் தமிழ் மொழி, இலக்கியம், சமயம் என்பவற்றிலே விசேட திறமையும் காட்டினார். தமிழ் இலக்கியத் துறையில், சிறப்பாகக் கவிதை புனைவதிலே வல்லவராய் விளங்கினார். இவரது படைப்பாற்றலை, புலப் பெயர்ச்சிக்கு முன் புலப்பெயர்ச்சிக்குப் பின் என வகுத்து நோக்கலாம். முன்னையது நாற்று என்னும் கவிதைத் தொகுப்பாய் அமைவது. பின்னையதின் ஒருபகுதி வானொலிக் கவிதைகள், தமிழிசைப்பாடல்கள் என இரண்டாக வெளிவருகின்றன. மற்றப்பகுதி விரைவிலே பிறிதோர் தொகுப்பாக வெளிவரும். இப்போ வெளிவரும் மூன்றும் இராசமனோகரனின் படைப்பாற்றலின் சாட்சியாக விளங்குவன.

ஒரு காலகட்டத்திலே இராசமனோகரனின் தமிழாசிரியனாய் இருந்தமையை எண்ணி உளம் நிறைந்த மகிழ்ச்சியோடு அவரை வாழ்த்துகின்றேன். தமிழோசை உலகெலாம் பரவும்வகை செய்யும் அவரது முயற்சிகள் மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

**பண்டிதர் சு. வேலுப்பிள்ளை**
நாவற்குழி,
தமிழீழம்

padippakam



# புல்லாங்குழலான இளம் மூங்கில்...

தமிழ் அன்னைக்குக் கவிதை என்ற மல்லிகை மலர்களாற் புஷ்பாஞ்சலி செய்த புலவர்களின் வரிசையில் இன்று உங்களைப் பார்க்கிறேன். தென்றலுக்குத் தாயாகி மண்ணுக்கு மலராகிப் பணி என்ற இசைக்கு யாழாகி மக்கள் உள்ளங்களில் மலர்ந்தவர் நீங்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வாலிப மீசை முறுகிக் கறுக்கு முன்பே பல்கலைக்கழகத்தில் உங்கள் சிந்தனை மின்னல்களைத் திரட்டியிருக்கிறீர்கள்.

சிறந்த கவிஞனுக்குத் தேசத்தின் எதிர்காலம் திரையில்(த்) தோன்றுகிறது. உங்கள் கவிதை வரிகளில் அவற்றைக் கண்டு மகிழ்ந்தேன்.

ஞானத் திரியைத் தூண்டும் விரல்களும் சில கவிதைகளில் அடையாளம் காட்டின. எக்காலமும் இடுப்பிலே தேசபற்றின் சாவியைச் சொருகிக் கொண்டே வாழ்ந்து வந்தீர்கள். பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தில் உங்கள் கவிதைகள் பாரிஜாத மலர்களாகப் பூத்தன.

மழை மேகமாக விளங்க வேண்டியவர் நிழல் மேகமாக இந்நாட்டில் வாழ முடியுமா?

உங்கள் கவிதை நூல் இளமையில் உங்கள் நினைவுகளின் வண்ணக்கலவை. இரத்தத்தின் ஈரத்தில் துடிக்கும் நாட்டுப்பற்று 1970 இல் முளைவிட்டுச் சுதந்திர ஒளிக்கு நாவை நீட்டுகிறது.

**சுதந்திர ஒளி பெறாதோர் தூயநல் ஒளி பெறாதோர்**
**பதந்திரு மற்று நல்ல பண்பொடு அறிவு ஆக்கம்**
**இதந்தரு கல்வி கேள்வி இன்பம் நற் பெருமையோடு**
**நிதம்புகழ் காதல் அன்பை நெஞ்சிலே காணாரன்றோ?**

மரணத்தெருக்களிலும் மயானக் குழிகளிலும் தோய்ந்து உருண்டு பிரண்டு எழுந்த ஈழத் தமிழ்ச் சமுதாயம் கவிஞர் இராஜமனோகரனைப் பார்த்துக் காலத்துக்கு

படிப்பகம்

padippakam



முன்பே கண்ணடித்திருக்கிறது. அதன் பூரணகும்பத்தை 'ஏற்றுவோம் எழு ஞாயிற்றை' என்பதிற் கண்டு மூக்கில் விரலை வைத்து ஆச்சரியமடைகின்றோம்.

நெருஞ்சிமுட்களை எடுத்துக் கைகளின் வேதனையைப் பாராது கசக்கிப் பிழிந்து எடுத்த சாறு போலச் சில கவிதைகளில் மன அதிர்வுகளையும் ஆதங்கங்களையும் எழுதித் தன் சுமையையும் இறக்கி வைத்திருக்கின்றார்.

**காட்டிக் கொடுக்கும் கயவர்களால் நாம்**
**போர்த்துக்கீசர் முதற் பொல்லாத இவ்வரசுவரை**
**மாட்டிக் கொண்டு இங்கே....**

என்ற வரிகள் நயமறி புலவர்க்கு நல் விருந்தாகும்.

**பூக்கள் தன்னிற் பலவற்றைப்**
**பொழுது முழுக்க அலைந் தடைந்து**
**ஈக்கள் தேனைச் சேர்த்துவிட**
**என்றோ ஒரு நாள் வரும் கரடி**
**ஆக்கை தன்னால் வருந்தாமல்**
**அரியதேனைப் பருகி விடும்....**

என்று தொழிலாளர்களைச் சுரண்டி வாழ்வோரைக் கரடிக்கு ஒப்பிட்டிருப்பது உயர்ந்த கருத்தாகும்.

வாழ்விற் சிந்தனையின் தாக்கங்கள் வடுக்களாக, அதனாலே பாதிப்படைந்தவர்கள் பலர் அதனைத் துடைத்தெறிந்து விடுகிறார்கள். ஒரு சிலர் அந்தப் பாதிப்புக்களையும் அதிர்வுகளையும் கவிதை வரிகளிலே கரைத்து விடுகிறார்கள். இந்த உண்மைகளைக் கவிஞர் இராஜமனோகரனின் கவிதைகள் விரித்துக் காட்டுகின்றன. நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று என்பன கவிதைகளில் முகாமிட்டிருக்கின்றன. இளமை வேகத்தோடு அவை வெளிப்பட்டிருப்பதாற் கவிதை சுடர்விடுகிறது.

கண்ணாடித் தொட்டியில் அழகிய மீன் குஞ்சுகளாய் ஓடித் திரிவதை விடச் சாக்கடை வாய்க்கால்களிற் சுதந்திரமான தவளைகளாகத் தத்தித் திரிவது வரவேற்கத்தக்கது. கவிஞருடைய சுதந்திர தாகம் பல கவிதை வரிகளில் மூச்சு விடுகிறது.

மறைமலை அடிகளார், சோமசுந்தரப்புலவர், பாரதியார் என்னும் தமிழ் வளர்த்த சான்றோர்களைப் பற்றி எழுதிய கவிதைகள் முன்னோரைப் பொன்னெனப் போற்றும்

படிப்பகம்

padippakam



பண்பினையும் ஆய்வு நலத்தினையும் மணம் வீச வைக்கின்றன.

காதலும் போருமே பண்டைக் கவிதைகளின் கருவூலம். இதற்கு எங்கள் இளங்கவிஞர் விதிவிலக்காகவில்லை. காதலிற் சலவை செய்த சேலைகளைப் பார்க்கும் போது இளைஞனாக மறு பிறப்பு எடுக்கவேண்டும் போலத் தோன்றுகின்றது.

**தெங்கிளங் குரும்பையோ தீஞ்சுவை மாங்கனியோ**
**தங்கநிறச் சிமிழாமோ முந்தானையினால்....**

என்ற தீம் பாடல் கோவைப் பாடல்களை நினைவூட்டுகின்றன.

துளிகள் பல ஒன்று சேரும் போது ஆறுகளும் நதிகளும் பெருக்கெடுக்கின்றன. அலைகள் மலைகள் போல விம்மி மேலெழுகின்றன. கடல் கொந்தளிக்கிறது. கவிஞர் இராஜமனோகரனுடைய எதிர்காலமும் கவிதைகள் பெருக்கெடுக்கும் போது கடல் அலைகளே கைதட்டும். பொறியியல் அறிஞர் ஒருவர்க்குக் கருத்துகளுக்குத் தட்டுப்பாடில்லை. சொல்வளமும் இருந்தால் பேசவும் வேண்டுமா ?

இக்காலத்தில் நம் நாட்டில் பெருந்துன்பக் குறிக்கு அடையாளமான அண்டங் காக்கைகள் கத்தும் குரல் ஓய்ந்து வருகிறது. உயிர்ப்பின் சுவர்கள் கட்டி எழுப்பப்படுகின்றன. அகதிச் சிறைகள் நொருங்குகின்றன. முட்கம்பி வேலிகள் எட்டிப்போகின்றன. வன்முறைகளின் மேள ஒலி தணிந்து இனிய கீதங்களின் ஆரம்ப வரிசை ஒலிக்கிறது. போர்க்களத்தின் செருக்கு மிக்க காலடி ஓசைகள் குறைகின்றன. கண்மூடித்தனமாகச் சரிந்து கிடந்த நீதிக்கான தராசின் முள் மிகவும் மெதுவாக மையத்தை நோக்கி வருகின்றது. உடைந்து சிதைந்த கதவின் ஓரங்களில் யாரோ மெதுவாகத் தட்டுகிறார்கள்.

இவையெல்லாம் கவிஞர் இராஜமனோகரனுக்குக் காவியம் எழுதத்தூண்டும் கைவிரல்களாயிருக்கட்டும்.

புலவர்மணி – மதுரகவி
**இளவாலை – அமுது**
இலண்டன்.

படிப்பகம்

padippakam



# நாற்று மேடை...

**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!**

அன்பான என்தமிழ் உறவுகளே, கவிதைகளைத் தொகுத்துவிட்டு மீண்டும் என் நினைவுகளை அசை போடுகின்றேன். என்னுரையை எழுதவேண்டுமல்லவா.

ஓராண்டா இரண்டாண்டுகளா... முப்பத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முளைத்துவிட்ட நாற்றுகளும் இங்கு நாட்டப்பட்டுள்ளன. அன்று முளைத்துவிட்டன என்றால் எப்போ விதைக்கப்பட்டன?
உள்ளம் இன்னும் பின்னோக்கிச் செல்கின்றது...

உரை நடையிலே எழுதுவது ஏதோ மொழிபெயர்ப்பது போலே இருக்கின்றது. கவிதையாகவே யாவும் வருகின்றன. ஏன் மொழி பெயர்த்துச் சிரமப்படவேண்டும்? அப்படியே தந்துவிடுகின்றேன்!

குப்பி விளக்கிலே குப்புறப் படுத்தன்று
குனிந்து எழுதிய குழந்தைக் கவிபல
அப்பு ஆச்சியின் கொட்டிலில் இருந்து
அப்பா அம்மா தங்கையர் மறந்து
கப்புத் தூணிலே சரிந்தும் நிமிர்ந்தும்
காதல்(த்) தமிழைக் கன்னியாய்க் கண்டு
தப்பு இருந்ததோ இல்லையோ அறியேன்
தாளம் இட்டுமே எழுதிய கவிபல

எப்போ வென்றாலும் படித்தது தமிழே
எழுந்தும் நடந்தும் நினைத்ததும் தமிழே
இப்போ தென்னவாம் இல்லையோ என்றால்
இருந்தும் கிடந்தும் நடந்தும் தமிழே
எப்போ திவ்வுடல் விழவுயிர் நீங்குமோ
அப்போ தித்தமிழ் அவ்வுயிர் பற்றிடும்
இப்பார் தனிலே இன்னொரு முறையும்
இவ்வுயிர் பிறந்திடும் இன் தமிழ் பேசும்!

குப்பி விளக்கொளிக் கவிதைகள் எல்லாம்
கூடவே போரில் அழிந்தன அறிந்தேன்
அப்போ தடைந்த கவலை என்னுயிரே
அவலங் கண்டது போலே எனினும்
தொப்பூழ் உறவுகள் தொடுத்த போரிலே
தோன்றி மடிந்த நிலையிலும் பெரிதா?
இப்போ தென்னுளம் இயல்பினை அடைந்தது
இருப்பினும் இதய மூலையில் வலியே!

படிப்பகம்

padippakam



இப்போ துள்ளவை என்னுடைத் தங்கை
இருப்பவள் சுதுமலை மண்ணிலேயிருந்து
அப்போ தப்போ அஞ்சல் களினூடே
ஐந்தாறாக அனுப்பிய கவிதைகள்
எப்போ தென்னுடல் யாழைவிட்டு
ஏறிப்பல்கலைக் கழகம் சென்றதோ
அப்போ தப்போது அடைந்தவை உளமே
அன்றே எழுதி வைத்தவை காண்பீர்

இடையிலே ஓர்கதை இதனையுங் கேளும்
இனிய காதலி இலங்கையி லிருக்கப்
படையயில் நாட்டிற் பாசத்தின் பெற்றோர்
பார்த்தே இருந்த தங்கையர் ஐவர்
விடைபெற் றாயிரம் வியனுறு நாட்கள்
விரைந்தனன் தொழிலே மத்திய கிழக்கில்
இடைவெளி மறைக்க இருநாளுக் கொரு
இன்முகம் எழுதினேன் இனியவள் தனக்கு

ஒன்றா இரண்டா ஐந்நூற்றிப் பத்து
ஓலைகள் எழுதினேன் ஒருநாள் ஓயேன்
நன்றாய் வடித்த அத்தனை முகத்தில்
நாலே மட்டும் உரை நடை வசனம்
என்றாற் பாரும் எல்லாமே கவிதை
எல்லாந் தொலைந்தன உரும்பராய் மண்ணில்
நின்றாப் பரித்து இந்தியப் படையார்
நிணநீர் குடித்து நின்றிட்ட காலை

இவ்வா றெல்லாம் தொலைந்தவை போக
இருப்பவை தன்னில் ஏற்றவை தொகுத்தே
அவ்வா றங்கு அன்றைய வயதில்
அடியேன் விதைத்தவை அதனால் அவற்றை
இவ்வா றிங்கு **நாற்று** எனக் கொண்டு
இயன்ற வரையிலே இட்டேன் ஏற்பீர்
எவ்வா றெனினும் இன்றுமிவை பொருந்தும்
இதுவே என்னுடை இதய நெருடலே!

மண்ணுக் கான போரும் இருக்க
மதித்துக் காப்பவர் மண் வித்தாகப்
பொன்னுக் காகக் காட்டிடும் கயவர்
புவியில் என்றும் தளைத்துமே வளரப்
பெண்ணுக் கான காதலும் வளரப்
பேதையே என்றே ஏய்ப்பாருங் கவரக்
கண்ணுக் குள்ளே கண்டிடும் உலகே
கவிதைக்குள்ளே கண்டனன் அன்றும்!

படிப்பகம்

padippakam



அன்று அறவழி அது தோற்றதுவே
அடுத்து வந்தது அறஞ்சேர் மறவழி
இன்று இவ்வழி இது தோற்காது
இளையவர் தன்னுயிர் இட்டனர் தீயில்
என்று எம்மவர் தன்னையே அழித்தும்
எம்தாய் வாழ எய்துவோம் நாடென்று
நின்று போரினை நிகழ்த்து கின்றனரோ
நிலத்தில் வெற்றி நிலைத்திடும் உறுதி!

அன்பான உறவுகளே, இதுவரையிலே என்னுடைய உள்ளத்திலே இருந்த கனத்தைக் கவிதையிலே வடித்துவிட்டேன். இனி மீண்டும் உரை நடையிலே சிலவற்றைக் கூறுகின்றேன்.

பழைய நினைவுகளே தொடர்கின்றன... நாற்றான கவிதைகள் விதைக்கப்பட்ட வரலாறல்லவா அவை! கவிஞனாகிய நானுமோர் நாற்றாகி வளர்ந்து முது நாற்றாகப் பெயர்த்து இடப்பட்டேன். இருந்தும் பிழைத்துவிட்டேன். இந் நாற்றினுடைய வரலாற்றின் சில பக்கங்களையும் கூறிவிடுகின்றேன்....

எனக்குள்ளே தமிழையும் சைவத்தையும் தனது பாரம்பரிய உணவு வகைகளோடும் அன்பான அரவணைப்போடும் ஊட்டி வளர்த்தவர் எனது அப்பாச்சி. என் நினைவின்படி, இரண்டு அகவையிலிருந்தே தனது மடியிலே கிடத்தி நிலவொளியின் இன்பத்தை மகிழ்ந்தபடி, ஔவையின் தமிழை அழகுற விதைத்தவர் அவரே. அன்று அவற்றின் அருமைகளைப் புரிந்து கொள்ளாமலே யாவற்றையும் உள்வாங்கிவிட்டேன். மூன்று வயதிலிருந்தே ஆலயங்களுக்குப் புராணப்படிப்பின்போது அழைத்துச் செல்வார். ஒன்றாகவே விரதமும் இருப்போம். ஆச்சி சைவ உணவாளி. அப்பு அசைவ உணவாளி. அவர்களின் ஒரே மகனான அப்பாவும் அசைவ உணவாளி. அவர் துணையான என் அம்மாவும் அப்படியே. நான் மட்டுமே ஆச்சியின் உணவுத் துணை. அறிவின் துணை. மொத்தத்திலே, ஆன்ம துணை. இதனையும் அன்று அறியமுடியவில்லை. இன்று யாவும் புரிகின்றன. ஏழெட்டு வயதிலேயே புராணம் படிக்க, அதுவும் உரத்துத் தெளிவாகப் பாட இச் சிறுவனுக்கு ஓர் இடம் கிடைத்துவிட்டது. அன்று அது ஒரு தகைமை. இதுவே எனது உள்ளத்திலே சைவ நெறியுந் தமிழ் அறிவும் விதைக்கப்பட்ட வரலாறு.

1961 ம் ஆண்டிலே நடைபெற்ற தமிழரசுக்கட்சியினரின் அறவழிப் போராட்டத்திலே எனது பிஞ்சு மனத்தை ஈடுபடுத்தி வைத்தவர் எனது தந்தைவழிப் பேரனார்.

படிப்பகம்

padippakam



நாற்று மேடை...

'தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்தார் எங்களுக்குத் தமிழ் அரசு பெற்றுத் தரப் போகிறார். நாளைக்கு விடிய நீயும் ஊர்வலத்திலை வாடா' என்று அப்பு கூறியதும், அதனைக் கேட்டுத் தலைகால் புரியாதளவு மகிழ்ந்ததும், அம்மா மூலமாக அப்பாவிடம் அனுமதி பெற்றதும் இன்றும் என் கண்களிலே தெரிகின்றன. சிறுவனானாலும் ஐந்தாறு நாட்கள் அப்புவுடன் சென்று யாழ்ப்பாணத் திறைச்சேரிப் பணியகம் (கச்சேரி) முன்னாலே பகல் முழுக்க அடைப்புப் போராட்டத்திலே இருந்தோம். இதுவே என்னுள்ளத்திலே தமிழ் மண்பற்று விதைக்கப்பட்ட வரலாறு.

இவற்றை எல்லாம் எண்ணுகையிலே எனது வாழ்க்கைக்கு – இக் கவி நாற்றுக்குப் – பாத்தி கட்டி விட்டவர்கள் எனது அப்புவும் ஆச்சியுமே. இவ்வளவு தூரம் இங்கு எழுதப்பெற்றவர்களின் பெயர்களையும் இங்கு பதிவு செய்ய வேண்டியது எனது கடமையல்லவா. அப்புவின் பெயர் சதாசிவம். ஆச்சியின் பெயர் முத்துப்பிள்ளை. இருவருமே இறுதிக் காலத்திலே, நான் பல்கலைக் கழகத்திலிருந்து வந்து பார்க்கும்வரை உயிரை வைத்திருந்து, அவ்வாறே என்னைக் கண்டு சில விநாடிகளிலே இவ்வுலக வாழ்வை நீத்தவர்கள். இவையெல்லாம் அன்று புரியவில்லை. இன்று புரிகின்றன. ஆனால் அவர்கள் இல்லை.

ஒழுங்கையாலே பள்ளிக்குச் செல்லும் மாணாக்கரைப் பார்த்துவிட்டு, அப்போதே வீட்டில் இரண்டு தங்கையர் இருந்தும், மூன்று வயதிலேயே பள்ளிக்குச் செல்ல வேண்டுமென்று அழ, என்னை அழைத்துக் கொண்டு சுதுமலை சின்மயபாரதி வித்தியாசாலைக்கு ஆச்சி சென்றதும், வயது குறைவான காரணத்தாலே உள்ளே அனுமதி மறுக்கப்பட்டு வெளியே ஈரப்பலா மரநிழலிலே இருக்க விடப்பட்டதும், மீண்டும் அழ அரிவரி வகுப்பிலே பின் வரிசையிலே இருக்க அனுமதிக்கப்பட்டதும், உள்ளே சென்ற நான் முதல் வாங்கிலேயே அடம்பிடித்து இருந்ததும் இன்றும் பசுமையாக என்னுளம் நிறைந்துள.

மூன்றாம் வகுப்பிலிருந்து என்னை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே இணைத்தனர் என் பெற்றோர். இவ்வாறு செய்யும்படி அடிக்கடி அப்பாவிற்கு எடுத்தியம்பி இயக்கி வைத்தவர் அவருடைய நண்பரும் எனது ஆசிரியருமான அமரர் திரு. மு. பேராயிரவர் ஆவார். மூன்றாம் வகுப்பிலே எனது தமிழ் மொழிப்பாட ஆசிரியை, அன்பிற்குரிய செல்வி இராஜேஸ்வரி அவர்கள் ஆவார். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி போன்றவற்றின் கடவுள்

படிப்பகம்

padippakam



வாழ்த்திலே அவர் தொடங்க, நான் முழுவதையுமே கூறிவிடுவேன். இது எனது திறமையல்லவே. எனது ஆச்சியின் தாளாத முயற்சி. ஆனாலும் எனக்கே பண்டிதர் என்று பட்டமும் இட்டு என் மதிப்பிற்குரிய ஆசிரியை அழைக்கத் தொடங்கினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியிலே பலருக்கும் என் பெயர் தெரியாது. பட்டப் பெயரே தெரியும். இதன் பின்னர் எட்டாம் வகுப்புவரை எனது தமிழ் மொழிப்பாட ஆசிரியர் அமரர் திரு. சரவணபவன் அவர்கள். இவர் எனது தமிழ் வாசிப்பிலே மயங்கி விடுவார். கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தின் சாதாரணதரக் கல்வியின் போது சு.வே. என எழுத்தாளருலகம் நன்கறிந்த தமிழாசிரியர் பண்டிதர் திரு. சு. வேலுப்பிள்ளை அவர்களே எனது குரு. போர் விளைந்த மண்ணிலேயே இடம் பெயர்ந்து வாழும் எண்பத்தியிரண்டு வயதான அவரைக் கண்டு பிடித்து வாழ்த்துரை பெற்றது நான் செய்த புண்ணியமே. இங்கிலாந்திலே, தனது அயராத முயற்சியாக முல்லை அமுதன் அவர்கள் நடாத்திவரும் ஈழத்து நூற்கண்காட்சிகளிலே இருந்த நூல் ஒன்றே இத் தொடர்பை ஏற்படுத்தி வைத்தது. இவ்வளவு வயதிலும் வாழ்த்துரையைத் தன் கைப்பட எழுதி அதனோடு தான் எழுதிய எதனையும் தணிக்கை செய்ய வேண்டாமென்று மடலும் எழுதி அனுப்பியிருந்தார் எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய ஆசிரியர்.

பள்ளி நாட்களிலே எழுதிய கவிதைகள் வீட்டிலேயே முடங்கிவிட்டன. ஒழுங்காகச் சேர்க்கப்படவும் இல்லை. பேச்சுத் துறையிலும் நாடகத்துறையிலுமே கூடுதலாக வளர்ந்தேன்.

பள்ளிக் கல்வி நிறைவுறப் பல்கலைக் கழகம் சென்றேன். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பெத்தை வளாகத்திலே பொறியியல் மாணவனாக இணைந்தேன். அங்கு, புகழ் மிக்க தமிழ்ச்சங்கத்தில் என்னை முற்றாக இணைத்து இயங்கினேன். அதன் தலைவராகவும் இருந்து பணிபல செய்தேன். அங்கு கவிதைத் துறையிலும் பட்டி மண்டபத் துறையிலும் என்னை நன்கு வளர்த்துக் கொண்டேன். நாடகத்துறை ஓரளவுக்கு விருத்தியானது. அக்காலத்திலேயே, தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் செயலராகவும் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புத் தலைமைக் குழுவின் ஐவரிலே ஒருவராகவும் எனது சேவையைத் தமிழீழ



படிப்பகம்

padippakam



விடுதலைக்கும் சமுதாயத்தின் நோய்களான சாதி, சீதனம் என்பவற்றை எதிர்த்தியங்கும் தூய பணிக்கும் தந்து நின்றேன். பின்னர் அறஞ்சார் மறவழிப் போராட்டத்தின் போதும் என்னாலான சேவைகளை இன்றுவரை செய்து வருகின்றேன். என்றுமே ஒற்றுமையை வலியுறுத்தி வருவதே எனது அடிப்படை முயற்சி. ஏனெனில், ஒற்றுமையைத் தவிர ஏனையவை யாவும் எம்மிடையே உள்ளன. தமிழீழ விடுதலை காலந்தாழ்த்துவதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழரிடையேயான ஒற்றுமையின்மை. மற்றையது சிங்களவரிடையேயான தலைமைத்துவமின்மை. இரண்டுமே ஒருபோதுமே ஏற்படாவென்று நம்புமளவிற்கே இன்றுவரை செயல்கள் அமைந்து வருகின்றன.

கொழும்பிலே நடைபெற்ற கவியரங்குகளிலும் வானொலிக் கவிக்களத்திலும் என்னையும் கவிஞனாக இணைத்து ஏற்றஞ் சேர்த்தவர் இன்று ஒஸ்ரேலியாவிலே வாழும் என் மதிப்பிற்குரிய கவிஞர் திரு. அம்பிகைபாகர் அவர்கள். அக்காலத்திலே என்னுடைய நண்பராக மேடைகளிலே முழங்கியவரும் இன்று ஒஸ்ரேலியாவிலே வாழ்பவருமான கவிஞர் திரு. வே. இளங்கோ அவர்களையும் உள்ளம் எண்ணுகின்றது.



தமிழீழத்திலும் சிறிலங்காவிலும் மட்டுமன்றித் தமிழ் நாட்டிலும் எழுபதுகளிலே எமது அரசியல் நிலைமை தொடர்பாகத் திரு ஈழவேந்தன் அவர்களுடனும் தனித்தும் சென்று சொற் பொழி வுகள், கவியரங்குகள் என்பவற்றை நடாத்தினேன். அன்றைய தமிழ் நாட்டுத் தலைவர்களான மக்கள் திலகம் எம். ஜீ. இராமச்சந்திரன், கலைஞர் மு. கருணாநிதி ஆகியோரோடு மேடைகளிலே ஏறிப் பல்லாயிரம் மக்களிடம் இலகுவாகத் தமிழீழப் போரை விளக்க முடிந்தது.

அன்பான தமிழ் உறவுகளே, இதுவரையிலே இங்கு நான் எழுதியவை அடியேன் நாற்றாக வளர்ந்த முறையை விளக்கவே. சொந்த விளம்பரந் தேடவென எண்ணிவிடாதீர்கள். நான் எதனையுமே சாதிக்கவில்லை என்பதைக் கவனித்திருப்பீர்கள். எனவே எதனை விளம்பரஞ் செய்ய முடியும்!

படிப்பகம்

padippakam



இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளவர்களிலே ஒருவர் தமிழீழத்தின் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள். திரு. மாவை சேனாதிராசா, திரு. காசி ஆனந்தன், அமரர் திரு. வண்ணை ஆனந்தன் ஆகிய மூவரும் எழுபதுகளிலே தமிழரசியற் போரை உயர்த்தி நின்றவர்கள். இவ்வகையிலே எனக்கு இவர்கள் நன்கு பழக்கமானவர்கள். கவிஞர் என்ற வகையிலே காசி ஆனந்தன் அவர்களிடம் ஓர் தனியான ஈடுபாடு உண்டு. கடந்த தையிலே தமிழ்நாட்டிலே நேரிலே சந்தித்து எனது கவிதைகளைக் கொடுத்தேன். அன்போடு அணிந்துரையை அனுப்பியிருந்தார். இது எனது நாற்றுக்கு இடப்பட்ட வலிமை மிக்க உரம்.

நிலத்திலே என்னை அறிந்தவரும் இந்நூலின் கவிதைகளை விதைத்த காலத்திலே அறிமுகமானவருமான உணர்ச்சிக் கவிஞரின் அணிந்துரையோடு, அவற்றை நாற்றாக நடமுயலும் புலம்பெயர்ந்த இலண்டன் மண்ணிலே அறிமுகமான பெரியவர் ஒருவரையும் அணிந்துரைக்கென நாடினேன். அப் பெரியவர் பிறப்பாலே தமிழ் நாட்டவரும் மலேசியாவிலே வாழ்ந்து இன்று இலண்டனிலே தன்னாலான தமிழ்ப் பணி செய்துவரும் தமிழ் வித்தகரும் எழுத்தாளரும் கவிஞரும் தமிழாசிரியருமான மதிப்பிற்குரிய தமிழ்மணி அரங்க முருகையன் அவர்கள். இது நாற்றினைப் பிடுங்கி நடுகையிலே இடப்பட்ட உரம்.

இலண்டனிலே வாழும் இளவாலை அமுதுப்புலவர் அவர்களை நான் அறிமுகம் செய்தல் என்பது தேவையற்ற ஒன்று. அன்பு, அறிவு, ஆற்றல் என்பன யாவும் ஒருங்கே அமையப்பெற்ற இனிய உருவமே அவர். தந்தையிலும் மூத்தவரான அவர் நண்பராகவே பழகுவார். அத்தனை பக்குவம். கவிதையின் ஊற்றான அவரிடம் சிறப்புரை பெற்றது எனது நாற்றுக்கு வாய்த்த நீரூற்று.

இந்நூலை அச்சேற்றத் தமிழீழம், தமிழ்நாடு, சிறிலங்கா, கனடா, பிரான்சு எனப் பல நாடுகளிலுமே நண்பர்கள் இருப்பினும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்கும் நலம்நாடி இறுதியிலே இலண்டனே வென்றது. நண்பரான வாசன், அவருடைய அச்சக நண்பர்கள் யாவருமே துணைநின்று நாற்றுக்கு வேலியிட்டார்கள்.

நாற்றுக்களைப் பாதுகாத்து, சுதுமலையிலிருந்து ஒளிப்படி எடுத்து ஐந்தாறு பக்கங்களாக அஞ்சலிலே அனுப்பி வைத்தவள் எனது மூன்றாவது தங்கை திருமதி இந்திராணி சந்திரகௌரீசன் ஆவார். இங்கு மின்னெழுத்திலே பழைய கையெழுத்தை இடுவதனை நானே செய்து வந்தாலும் எனக்குப் பெரிதும் கை கொடுத்தவர் எனது மணவழி மைத்துணரும் இளங் கவிஞருமான திரு. கனக ஈஸ்வரகுமார் அவர்கள்.

படிப்பகம்

padippakam



# நாற்று மேடை ...

எனது ஆசிரியர் திரு சு. வே. அவர்கள் தனது வாழ்த்துரையிலே புலப்பெயர்ச்சிக்கு முன் என்றும் பின் என்றும் இரண்டு காலப் பகுதிகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். அது உண்மையே. அதனோடு கூடவே, காதலுக்கு முன் என்றும் பின் என்றும் பிரிக்கலாம். இந் நூலிலுள்ளவை யாவும் என் இல்லறக் காதலியைக் கண்டுபிடிக்க முன்னர் விதைக்கப்பட்டவை. ஆனால், காதல் நாற்றுக்களோ கற்பனைக் கன்னியோடு துளிர் விட்டிருந்தன.

1978 இலே காதலியைக் கண்டபின்னர்தான் அவை விழுதுவிட்டு வளர்ந்தன. அவள் என் ஆன்ம துணை. எம் சிவசக்தி உறவிலே உதித்த மூன்று நாற்றுக்களும் இன்று வளர்ந்துவரும் என்னினிய நண்பர்களே. அத்தனை நெருக்கம் மட்டுமல்ல. அவர்கள்,

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

என்ற திருக்குறளின்படி இயங்குவர். என் கவிதை நாற்றுகள் என்றும் செம்மையாக வளர்ந்து செழிக்க அவர்களே வரம்பு கட்டுபவர்கள்.



என் இனிய தமிழ் உறவுகளே, அன்றிலிருந்து இன்றுவரை என்னைத் தாங்கி வருபவர்கள் நீங்களே. எனது கவிதைகளை வரவேற்று ஆதரித்து அன்றைய இளைஞனுக்கு மட்டுமன்றி இன்றைய அனுபவமுதிர்ச்சி பெற்ற இளைஞனுக்கும் இதம் நல்கி இதயத்திலே இடந்தந்துள்ளீர்கள் என்றால் அதனை நான் இருகரங்கூப்பி வணங்கி மதிக்கின்றேன்.

கவிதை வளர்வது மொழியாலே.
கவிஞர் வளர்வது அன்பானவர்களின் அரவணைப்பாலே.

எனக்கு என்றுமே அன்பின் நிறைவு தந்தவர்கள் நீங்கள்.

அன்பான உறவுகளே, நாற்று மேடையிலிருந்து அப்படியே பிடுங்கித் தருகின்றேன். எப்போ விதைக்கப்பட்டது? ஏன் விதைக்கப்பட்டது? போன்றவை அந்தந்த நாற்றின் கீழே இடப்பட்டுள்ளன.

படிப்பகம்

padippakam



நாற்றைப் பிடுங்கும்போது மண்ணாவது சிந்தியிருக்கும். ஆனால் எதையுமே சிந்தாது இந்நாற்றுக்களைப் பெயர்த்து நட்டுள்ளேன்.

இனி இவை உங்களுக்குரியவை.

எல்லோருக்கும் எனது நன்றி.

அன்புடன் உங்கள் உறவு

**கந்தையா இராஜமனோகரன்**
(சுதுமலை, தமிழீழம்)

பிரித்தானியா
07931 531 305 அல்லது 0118 932 1279

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# விதைகள்

1. கடவுள் வாழ்த்து 1
2. மனிதம் வாழ்க 2
3. தமிழ் வாழ்த்து 3

## விடுதலை

4. முடி சூட்டுவோம் எங்கள் முத்தமிழ் அன்னைக்கே! 7
5. உழைக்கும் கரங்கள் உயரட்டும்! 8
6. புதியதோர் ஒளியை நோக்கி... 11
7. சாகின்றான் அடிமையாக... 13
8. தமிழெம்பாவை 15
9. என் க(வி)தை 18
10. இன்று நாம் நாயிற் கடையோம் 21
11. ஏற்றுவோம் எழு ஞாயிற்றை! 23

## காதல்

12. கண்ணினால் நீ என் மனதிற்... 29
13. இன்பம் அவள் அளிக்க... 31
14. உந்தன் உடல் நெளிய... 33
15. தமிழரே சற்றே கேளும்! 34
16. தேடேன் இழுக்கதனை! 37
17. சாவை யான் தழுவு முன்னர்! 39
18. பள்ளியிலே கண்டிடுவோம் 40
19. பூட்டினை உடைத்து வந்து... 41

படிப்பகம்

padippakam



## அரங்கம்


| | | |
|---|---|---|
| 20. | பாரதி என்றொரு பாவலன் | 45 |
| 21. | வாடுதல் நன்றோ இன்னும்... | 50 |
| 22. | நல்குவீர் பெயர்கள் தம்மை | 58 |
| 23. | ஆளத்தான் போகின்றோம்... | 59 |
| 24. | நாளை நமதே | 64 |
| 25. | கல்வியா ? செல்வமா ? வீரமா ? ... வீரமே! | 69 |
| 26. | புதுமைகள் செய்வோம் | 73 |
| 27. | தந்தை செல்வா அவர்களின் 79வது பிறந்த நாள் | 77 |
| 28. | சோமசுந்தரப் புலவர், மறைமலை அடிகள் விழா | 82 |
| 29. | மறைமலை அடிகள் பிறந்திலரேல்... | 86 |
| 30. | தன் மானத் தமிழினமே தலை நிமிர்ந்து நில்லாயோ | 89 |
| 31. | தீதும் நன்றும் பிறர்தர வாரா | 92 |


## வேறு


| | | |
|---|---|---|
| 32. | திருமண வாழ்த்து | 99 |
| 33. | கனவுப் பூக்கள் நனவில் மலரட்டும் | 100 |
| 34. | மங்கை சுடர் வாழ்க! | 101 |
| 35. | சுதந்திரன் சுடர் வாழ்க! | 102 |
| 36. | பொங்கல் | 104 |
| 37. | பைந்தமிழ்ச் சுவை தந்தோம்! | 106 |
| 38. | என்றும் என் நினைவகலாய் | 107 |


வரைகள்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



படிப்பகம்

padippakam



# பூமலர்ப் பாதம் நூன்மலர் வைத்தேன்

தன்னையே தந்து காப்பவர் எம்தாய்
தாயோ டிணைந்த காதலின் தந்தை
தம்மிலே இருந்து வந்தவர் தம்மைத்
தாயுந் தந்தையும் காப்பது கடமை.

என்னைக் காக்க இன்னொரு உயிரும்
எங்கோவிருந்து வந்துமே முழுதாய்த்
தன்னை ஈந்தான் அல்லது ஈந்தாள்
தரணியில் என்றால்(த்) தாங்குமா மனமே!

கண்ணை முட்டும் கண்ணீரோடு
கால்களைப் பற்றித் தாள்களில் இந்நூல்
தன்னை வைத்துத் தருவேன் வணக்கம்
தாய்த் தமிழ் பெற்ற தன்மானத் தவரே!

மண்ணைக் காக்க மண்ணி னுள்ளேயே
மந்திர வித்தாய் மறைந் துள்ளவரே
பொன்னை வைத்துப் பூமலர்ப் பாதம்
போற்றிட வேண்டும் நூன்மலர் வைத்தேன்!

படிப்பகம்

padippakam



# விண்ணை அடைந்த இருமுது குரவரே



தன்னை உருக்கித் தலை மகனாகத்
தரணியிற் பெற்று தன்கையி னூடே
என்னை உயர்த்தி வளர்த்தவள் இன்று
இவ்வுலகில்லை இறைபத மடைந்தாள்
என்னைப் பெற்று எழுத்தறி வித்து
ஏழ்மையைப் போக்கக் கல்வியோ டிணைத்துத்
தன்னை விடவுந் தரணியில் உயர்த்திய
தந்தையும் இல்லைத் தாயோடுள்ளார்.

விண்ணை அடைந்த இருமுது குரவரே!
விளங்க வைத்தீர் என்னுடை வாழ்வினைக்
கண்ணை ஈந்தவர் கண்ணாய் ஏற்றவர்
காதல் சொரிந்தவர் வாழ்வை ஈந்தவர்
மண்ணை நீத்தவர் மட்குடம் உடைத்திட
வாய்ப்பிலா மகன்யான் நாடு அன்றப்படி
கண்ணை மூடியென் கட்டை விழும்வரை
கண்ணில் இருப்பதும் கனிந்த முகங்களே!

உலகத்தில் உயிரோடு நீவிர் இருக்க
உள்ளத்தில் உதித்து உதிர்ந்து விளைந்து
கலகத்தில்(த்) தப்பியவை நாற்று இன்று
கண்டெடுத்துப் பதிப்பித்தேன் இங்கிலாந்தில்
உலகத்தில் நீர்பெற்ற நாங்கள் கூட
ஒவ்வொரு திக்காக வாழுகின்றோம்
கலகத்தால் வந்தநிலை எனினும் தமிழர்
கடைகெட்ட வேற்றுமையின் அவலம் பொறுப்பீர்!!

படிப்பகம்

padippakam



# கடவுள் வாழ்த்து

உலகெலாம் தோன்ற வைத்து உயிரெலாம் வாழவைத்து
மலமெலாம் அழிய வைக்கும் மதமிலா இறைவன் பாதம்
தலமெலாம் தேடி அலைந்து தரணியிற் காணாது ஓய்ந்து
நலமெலாம் அழியும் என்று நன் மனம் கலங்கும் வேளை.

மதமிலா உள்ளம் உணர்ந்த மறைபுகழ் இறைவன் வந்து
நிதமுமே நீங்கா துறைந்தான் நீந்தினேன் இன்ப வெள்ளம்
பதமெலாம் அருளும் பாதம் பதிந்திடில்(த்) துன்பம் ஏது
இதமுற வாழ வைக்கும் இறைவனே வாழி வாழி.

உருவம் உனக்கில்லை உலகத்தோடு எமக்களித்தாய்
உள்ளம் அன்பு வெள்ளம் உன்மத்தம் எமக்கென்றாய்
பருவம் உனக்கில்லைப் பழியுணர எமக்களித்தாய்
பற்று உனக்கில்லைப் பற்றிலே மூழ்க வைத்தாய்
அருவம் ஆகிநிற்கும் அழிவில்லா இறையருளே
அகிலம் வாழவேண்டும் அன்பு நிலை எமக்கருள்வாய்
மருவும் துன்பமெல்லாம் மண்ணிலே அகற்றிடுவாய்
மதங்கள் கடந்து நிற்கும் மாந்தரின் கடவுள் வாழி!

ஆழி சூழ் உலகெலாம் அன்பாலே இணையவேண்டும்
அனைவருமே தம்முள்ளே ஆதரவு பெற வேண்டும்
ஊழி காண் வரையும் உன் உதவி பெருக வேண்டும்
உள்ளவரே எல்லோரும் உலகத்தில் ஆக வேண்டும்
நாழி நிறை தானியமாய் நாடோறும் நிரம்ப வேண்டும்
நல்லவராய் உலகத்தோர் நற்செய்கை ஆற்ற வேண்டும்
வாழி உன் நினைவில்லா மாந்தர்களும் நல்லவராய்
வாழ வேண்டும் எவ்வுயிரும் வளமுறுக! நலம் பெறுக!

படிப்பகம்

padippakam



## மனிதம் வாழ்க

மனிதரின் இயற்கையாக மண்ணிலே தோலின் நிறமும்
மனத்துடை இயற்கையாக மதிதரும் உணர்வின் தரமும்
குனியவும் வைக்கும் உயர்ந்தால் குவலயம் வாழ வைக்கும்
குலவிடும் துன்பம் யாவும் குறுகிய மனத்தின் விளைவே
புனிதராய் வேண்டாம் யாரும் புண்ணியம் செய்ய வேண்டாம்
புலன்களை அடக்கிநின்று புகழ்தரும் தேட்டம் வேண்டாம்
மனிதராய் வாழ்வோம் என்றும் மண்ணிலே மற்றை மனிதர்
மனத்தினை மதித்துவாழும் மனிதமே வாழ்க நீயே!

கண்களாற் காண வொண்ணாக் கடவுளைப் பங்கு போட்டுக்
கள்ளத்தாற் சமயம் பிரிக்கும் கயமையை ஒழிப்போம் ஒன்றாய்ப்
பெண்களைச் சமமாய் வைக்கும் பேச்சினைச் செயலாக் கிடுவோம்
பெற்றிடில் மனிதம் உயர்வு பேறெலாம் எவர்க்கும் அன்றோ
எண்களை எழுத்தைக் கற்று எண்ணிலா நூல்கள் அறிந்து
எண்ணத்தில் உயர்ந்து நிற்போம் ஏழ்மையை அகற்றி வாழ்வோம்
பெண்களும் ஆண்களுமாய்ப் பேணி நல் இல்லறத்தைப்
பெரிதுமே வாழ வைக்கும் பேற்றிலே மனிதம் வாழ்க!

எழுத்துக்கள் மொழியின் ஏற்றம்
எவர்க்கும் அவர் தாயின் தோற்றம்
பழித்துத்தன் மொழியைத் திணித்தல்
பாவமே பிறர் தாயைக் கொல்லல்
அழித்துத்தன் தாயை வளர்க்கும்
அந்நிலை எவர்க்கும் இல்லை
விழுத்திப் பிறர் வாழ்வை உயர்தல்
வேண்டாமே, மனிதம் வாழ்க!

படிப்பகம்

padippakam



# தமிழ் வாழ்த்து

*சீரிய செந்தமிழ் வாழியவே*
*சிறப்புட னவள் புகழ் ஓங்குகவே*
*பாரினி லவள் பெயர் நிலைப் பதற்குப்*
*பாங்குட னல் வழிகள் இயற்றிடுவோம்*

*(சீரிய செந்தமிழ்.... )*

*ஒற்றுமை யென்பதுவே உயிரெனவே*
*ஓரணி தனிலே நாம் திகழ்ந்திடுவோம்*
*சற்றுமே யெம் மானம் அழிய விடோம்*
*சாதலினதை நன்றா யேற்றிடுவோம்*

*(சீரிய செந்தமிழ்.... )*

*நந்தமிழன்னைக்கோர் நாடு அமைப்போம்*
*நலிவுறுந் தமிழருக்கோர் வாழ்வு சமைப்போம்*
*செந்தமிழன்னைக்கோர் வீடு சமைப்போம்*
*சீர்பெற வாழ்வதற்கே செயல் புரிவோம்*

*(சீரிய செந்தமிழ்.... )*

*மொழியொன்று வாழ்வதென்றால் நிலந் தேவை*
*முக்கிய மதுவென்றே யுணர்ந்திடுவோம்*
*அழியாமலதைக் காக்க அவனியிலே*
*ஆனநல் வழியெல்லா மாக்கிடுவோம்*

*(சீரிய செந்தமிழ்.... )*

*அந்தகர் போலே நாம் இனி வாழோம்*
*அவனியிலெம் முரிமை கண்டு களிப்போம்*
*அந்தமி லின்பங்கள் அத்தனையும்*
*செந்தமிழன்னை யிற்கும் சேர வைப்போம்*

*(சீரிய செந்தமிழ்.... )*

06.08.1975 அன்று எழுதப்பெற்றது. கொழும்பு வித்தியோதயப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தினரால் 10.08.1975 அன்று இராமகிருஷ்ண மண்டபத்திலே நடாத்தப்பெற்ற கலைவிழாவிலே தமிழ் வாழ்த்தாகப் பாடப் பெற்றது.

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# விடுதலை

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# முடி சூட்டுவோம் எங்கள் முத்தமிழ் அன்னைக்கே !

அறம் வெல்லு மோர் காலம் அன்புடைத் தமிழர் கொண்ட
திறம் மிகு தீரம் என்றோ தீப் பிழம் பன்ன வோங்கி
விறன் மிகு வேங்கை யன்ன வெஞ்சினம் கொண்டு மாற்றார்
புறன் முது கிட்டோடப் புரிவரே பெரும் போர் ஒரு கால்.

எட்டப்பன் முதலாய்க் காக்கை வன்னியன் ஈறா யானோர்
கொட்டங்கள் அடக்கி மாற்றார் கொடுமையை நீக்கிக் கை
விட்டபே ரரசாம் எங்கள் வீரமும் அன்பும் அறமும்
கட்டழ குடன் அறிவும் காதலும் தெளிவும் மிக்க....

தமிழ்ப் பேரரசை நாமும் தாமதம் ஏதும் இன்றிச்
சமைத் திடுவோமே என்ற சங்கற்பம் பூண்டு வள்ளுவன்
அமைத்த அற வழியி னின்றும் அணுவேனும் பிசகாமல்
அமைப்போம் பேரரசை யாம் அடங்கோம் இனியு மிங்கு.

காட்டிக் கொடுத்திடும் கயமை மிக்கோரால் யாம்
போத்துக்கேயர் முதற் பொல்லாத இவ் அரசுவரை
மாட்டிக் கொண்டிங்கு மாக்கள் போல் என்றும்
வாய்ப்பேச்சு ஏதுமின்றி வஞ்சக ராட்சியாலே
ஆட்டிப் படைத்திட அடிமையாய் வாழ் கின்றோம்
மாற்றமொன் றிதற்குண்டு மக்களே யாமென்று
ஈட்டி கொண்டே ஆயினும் வெற்றி ஈட்டியே முடி
சூட்டுவோம் எங்கள் முத்தமிழ் அன்னைக்கே.

சூட்டினால் முடியை எங்கள் சுந்தரத் தமிழன்னைக்கே
நாட்டிலே பகைமை வீழும் நல்லறம் இனிதே ஓங்கும்
பாட்டிலே புலமை தோயும் பாரிலே நமது பெண்கள்
ஈட்டிய பெருமை ஓங்கும் இல்லறம் இனிதே நிகழும்!

---

இக் கவிதை இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலரான **நுட்பம்** இதழின் 1970/1971 ஆம் ஆண்டு மலருக்கெனக் கொடுக்கப்பட்டது. ஆனால், இலங்கை அரசுக்குப் பயந்து வெளியிடப்படவில்லை.

படிப்பகம்

padippakam



## உழைக்கும் கரங்கள் உயரட்டும்!

உழைக்கும் கரங்கள் உயரட்டும்
உரிமை அனைத்தும் பரவட்டும்
தழைக்கும் இன்பம் அத்தனையும்
தரணியில் எவர்க்கும் பொதுவாகும்
உழைக்கும் மக்கள் அனைவர்க்கும்
உரிமை உண்டு உணர்ந்திடுவீர்
அழைக்கும் மோட்சம் அனைவரையும்
அன்பாலெவரும் சமமென்றால்.

இறைவன் படைத்த உலகினிலே
இனிமைமிக்க இயல்பை யெல்லாம்
மறைத்து வைத்துப் பணங்காப்போர்
மனத்தில் இனிமை சிறிது மிலார்
நிறையப் பெற்று வாழ்கின்றார்
நித்தம் உழைக்கும் உழைப்பாளி
குறையப் பெறுவான் ஊதியமாய்க்
குடும்பம் உயர்வது எப்படியோ?

உழைக்கும் மக்கள் என்றிட்டால்
உலையி லிரும்பை உருக்கிடுவோர்
குழைத்துச் சாந்தைக் களிமண்ணைக்
குறைவில் இல்பல கட்டிடுவோர்
மழைக்குள் நின்றே மண்ணிற்கு
மரகத ஆடை அமைத்திடுவோர்
இழையை நூற்று நூலாக்கி
உலகோர் மானம் காத்திடுவோர்.

காட்டி லுள்ள மரங்க ளெல்லாம்
கவினுறு பொருட்க ளாக்கிடுவோர்
நாட்டி லுள்ள இவர் அன்னோர்
மட்டுமல்ல உழைப்பாளர்
பாட்டிற் புலமை மிக்குடையோர்
பரதக்கலையில் வல்லுநராய்க்
காட்டும் இளநகைக் கன்னியரும்
கடல் சூழ் உலகில் உழைப்பவரே.

padippakam



அல்லிக் கொடியின் இடையுடையார்
அலைந்து மலைமேற் கூடையுள்ளே
மெல்லத் தளிரை ஒடித் தெடுத்து
மேனி நடுங்கும் குளிரினிலே
அல்லற் பட்டு அரைவயிறு
ஆயினும் நிரம்பப் பெறமாட்டார்
புல்லத் தனமாய் அவரை யெல்லாம்
போம் நீரென்று அனுப்பிவிட்டு.

நாட்டின் செல்வம் தேயிலையும்
இரப்பர் முதலாம் பொருளும் என்பார்
ஆட்கள் உழைக்கும் உழைப்பின்றி
ஆகிடுமோ செல்வந் தேயிலையில்
நாட்கள் பலவாய் வெளிநாட்டில்
நவீன விடுதி மெத்தையிலே
நாட்டின் தலைவர்கள் அயர்ந்திடவே
நம்மவரின்றி முடிந்திடுமோ?

பாரில் இவ்வகை நிகழுகையிற்
படைக்குங் கரங்கள் உயர்க வென்று
உரக்கச் சொல்லிப் பயன் என்ன
உலகை ஆள்வோர் உள்ளமதில்
இரக்கந் தானும் சிறிதும் இன்றி
இழிவோ ராகிச் சுரண்டு கின்றார்
இரப்போராகி உழைப்பவர்கள்
இல்லே இன்றி இரங்கு கின்றார்.

தேட்ட மின்றி விழிகாணும்
தெய்வமன்னார் உழைப்பவ ரென்று
நாட்டின் மொழியின் நலிந்தோரின்
நலனை எண்ணிய பாரதியும்
பாட்டிற் பகர்ந்துளர் என்றிங்கே
பாரில்(த்) தேர்தல் வரும் முன்பே
கூட்டும் மேடை களி லன்றிக்
கூடும் அவையிலும் சொல்வாரோ?

படிப்பகம்

padippakam



பூக்கள் தன்னிற் பலவற்றைப்
    பொழுது முழுக்க அலைந் தடைந்து
ஈக்கள் தேனைச் சேர்த்திடவே
    என்றோ வொருநாள் வருங் கரடி
ஆக்கை தன்னால் வருந்தாமல்
    அரிய தேனைப் பருகி விடும்
மாக்கள் பலருள ரதுபோலே
    மற்றவர் வியர்வையில் வாழ்ந்திடவே.

உழைக்கும் மக்கள் உயர்வ தென்றால்
    உழைப்பை யெல்லாம் சுரண்டிடுவோர்
இழைக்கும் இன்னல் அத்தனையும்
    இப்புவி நின்று ஒழியட்டும்
உழைப்பவர் வியர்வை தந்த பணம்
    உழைத் தவர்க் கென்றே ஆகட்டும்
இழைப்பவர் இன்னல் உழைப்பவர்க்கு
    இளைஞர் செயலால் ஒழியட்டும்.

உழைக்கும் கைகள் உயர்ந்திட்டால்
    உலக மக்கள் அனைவருமே
தழைக்கும் இனிய தமிழ் மொழிபோல்(த்)
    தாரணி தன்னிற் புகழுடனே
மழைபோல் அலையும் கூந்தலின் நல்
    மங்கையர் மடிமீது இன்பமுடன்
மழலைச் செல்வமும் பெற்றுயர்ந்தே
    மகிழ்வோ டிங்கு வாழ்வாரே!

இக் கவிதை இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் 20.07.1972 நடைபெற்ற கலைவிழாவின் கவியரங்கத்திலே வாசிக்கப்பெற்றது. மேலும், சங்கத்தின் **நுட்பம்** இதழின் 1973 ஆம் ஆண்டிற்கான மலரிலும் வெளியிடப்பட்டது.

படிப்பகம்

padippakam



## புதியதோர் ஒளியை நோக்கி ...

புதியதோர் ஒளியை நோக்கிப் போவீரே நீவிரெல்லாம்
புதுமையாய் அதனைப்பற்றிப் புலவன்யான் கூறவில்லை
அதிகமாய் அதனைப் பற்றி அறிந்துளீர் நீவிரெல்லாம்
ஆதலால் அறியேன் கூறும் அறிவிலே பிழைகள் பொறுப்பீர்.

இங்குயான் கூறவுள்ள இனியநல் ஒளி எதுவென்றால்
கங்கையை முடியில்(த்) தாங்கும் சங்கரன் ஒளியுமல்லத்
திங்களின் ஒளியு மல்லத் தினகரன் ஒளியுமல்லப்
பங்கய வதன நல்லார் பாவையர் ஒளியுமல்ல.

விண்ணிலே கலங்கி நிற்கும் மீன்களின் ஒளியுமல்ல
மண்ணிலே கலங்கி நிற்கும் மங்கையெம் அன்னையான
பண்ணொடு பரதந் தானும் பரந்த நல்லறிவு நூல்கள்
எண்ணறப் பொருந்தி நிற்கும் எழில்மிகு தமிழணங்கின்.

சுதந்திர ஒளியே யாகும் சுந்தரத் தமிழ்த் தாய்பெற்ற
புதல்வரே கேண்மின் நீவிர் புனைந் திடும் முடியை எங்கள்
இதம்மிகு அன்னை தனக்கே இங்ஙனம் நீவிர் செய்தால்
பதந்திரு இரண்டும் உம்மைப் பையவே அடையுமாமே.

சுதந்திர வொளி பெறாதோர் தூயநல் ஒளிபெறாதோர்
பதந்திரு மற்று நல்ல பண்பொடு அறிவு ஆக்கம்
இதந்தரு கல்வி கேள்வி இன்பநற் பெருமையோடு
நிதம்புகழ் காதல் அன்பை நெஞ்சிலே காணாரன்றோ?

சிரந்தனிற் சிந்தா மணியும் செவிகளிற் குண்டல கேசியும்
கரந்தனில் வளையா பதியும் கால்களிற் சிலம்புஞ் சிறிய
நாரியில் மணிமே கலையும் நயமுறப் புனைந்து பயனென்
சீரியநல் உயிரை யொத்த சிறப்பொளி பெறாது விட்டால்.

தன்னுடை மனையை மாற்றான் தாரமாய்க் கவர்ந்திட்டாலும்
பொன்னிலே அணியும் மற்றுப் புதுப்புது ஆடை அணிந்தே
இன்பமாய் உள்ளாள் அதுவே இன்பமாம் என்றனுக்கு என்றே
பண்ணிடும் கணவன் போலே பலருளர் எம்மில் இன்று.

படிப்பகம்

padippakam



கோழையா மந்தக் கணவன் கோதையின் பணைத்த வேயாந்
தோழினைத் தோயுந் தகுதி சொற்பமு மில்லை யந்த
ஏழைக்கு ஏற்ற வேலை எளிய தன் னுயிரை மாய்த்தல்
ஏழையாம் அவன்போல் எம்மில் இழிந்தவர் அழியின் நன்றே.

போவீரே நீவி ரெல்லாம் புதியவவ் வொளியை நோக்கிப்
போவது கல்லும் முள்ளும் பொருந்திய இருளும் கொண்ட
பவவினை அறுப்பான் பூணும் பாம்புகொள் நஞ்சின் மிக்க
பாவியர் மிக்கே உடைய பாதையாம் அதனைக் கடந்து.

வீரர்கள் மான முள்ளோர் அன்றி மற் றெவருங் காணா
வீரமுள் ஒளியாம் அடிமை விலங்கினை ஒளிக்கும் ஒளியாம்
பாரினி லுள்ள மக்கள் யாவரும் விரும்பும் ஒளியாம்
வீர சுதந்திர ஒளியை வீரராய் அடைவீர் ஒருநாள்.

காட்டியே கொடுத்து வாழும் கயமை மிக்கவரி னாலே
மாட்டியே கொடுத்து நிற்க மண்ணிலே முடியும் ஆனால்
ஆட்டியே படைத்து நிற்கும் அடிமையாய் வாழும் வாழ்வில்
நாட்டுடை இளைஞர் என்றும் நாட்களைக் கடத்தி நிற்கார்.

மானமெனுங் கலத்தில் நல்ல தியாகமெனும் நெய்யை ஊற்றி
ஆனதொரு வீரந் தன்னை அரிய தொரு திரியாய் இட்டு
மானமுள்ள மக்கள் கொண்ட மாசறுநல் உழைப்பால் ஏற்ற
கானல்மிகு சுடரேயாகக் காணலாமே அந்த ஒளியை!

---

இக் கவிதை 15.07.1972 ற்கும் 13.11.1972 ற்கும் இடையே எழுதப்பட்டுள்ளது.

படிப்பகம்

padippakam



## சாகின்றான் அடிமையாக ...

நரகமென்று அன்றொன்றை ஞாலமதின் கீழுள்ளதென்றார்
நரகமாவது பொய்யே மூட நம்பிக்கை யாகுமென்றும்
நரரலால் வேறோர் பிறப்பு நமக்கினி யில்லையென்றும்
உரமென வுரைப்பாருலகி லுள்ள நாத்திகரெல்லாம்.

நானொன்று சொல்லக் கேளும் நரகமுண்டு உண்மை ஆனால்
நானிலங் கீழில்லை எங்கள் நாட்டிலே உள்ளது இன்று
வீணிலமாக அன்றெங்கும் வியன் மரங்கள் நிறைந்த
கானில மலையகத்தைக் காசோடவைத் தாரின்று.

வாழ்கின்றார் நரக வாழ்வு வழியேதுங் காணாராகிக்
சூழ்கூடக் குடிப்பதற்குக் குவலயத்தில் வழியேயின்றி
மாள்கின்றார் பசியினாலே மக்கள் அரசாங்கமென்று
ஆள்கின்றார் அவரினுழைப்பு அவ்வளவும் தமக்கேயாக்கி.

தேயிலைச் செடியைத் தானே தீவெலாம் நம்பிவாழப்
போயிலைத் துளிரொடித்துப் போட்டுநற் கூடைநிரப்பி
வாயிடைப் போட்டுடலை வளர்ப்பதற் கொன்றுமின்றித்
தாயினைப் பிரிந்த சேயாய்த் தமக்கென நாடுமின்றி.

நோயிலே சாகின்றார்கள் நொந்துளம் வேகின்றார்கள்
பாயிலே படுக்கக் கூடப் பாரிலே வழியொன்றின்றி
நாயினும் கீழாய் நிலத்தில் நலிந்துமே கிடக்கின்றார்கள்
ஆயிரக் கணக்கிலானோர் அங்கொரு லாயத்துள்ளே.

எத்தனை தம்பதியர் எழில் மணங்கண்ட பின்னும்
முத்தமோ உறவோ இன்றி மூண்டெழுங் காமத்தீயில்
எத்தனை இரவுச் சிறையில் ஏங்கிய உள்ளத்தோடு
நித்திரை யில்லா நிலையில் நெட்டுயிர்த் தலைகின்றார்கள்.

அன்றுதொட்டின்று வரைக்கும் அகிலத்தி லெம்மைக் காக்கும்
தன்னிகரில்லாத் தோட்டத் தகவுறு தொழிலாளரைத் தாக்க
என்னதான் நியாயம் என்றால் எம்மவர் அவர் ஆதலாலே
அன்னவரைத் தட்டிக் கேட்டு அதட்டிட எமக்கோர் நாடு.

padippakam



ஒன்றுலகில்லை யென்ற ஓர் பெருங் காரணத்தால்(த்)
தன்னலங் கருதாதவர்கள் தரணியிற் சிந்தும் குருதி
தன்னையே அருந்தி நாமும் தரமுடன் வாழுகின்றோம்
நன்மையே செய்வாருள்ளம் நலிவுறச் சுரண்டுகின்றோம்.

சிங்கள மக்களிந்தச் சீர்கெட்ட நிலையில் வாழின்
சிந்தை யில்மந்தமாகச் சிரிப்பரோ அவரைப் பார்த்துப்
புந்தியில் அறிவில்லாது பூர்வீகப் பெருமை பேசும்
சந்ததி யாகத் தமிழர் சாகின்றார் அடிமையாக.

நம்மவர் மலையகத்தில் நலிவுறு வுழைக்காவிட்டால்
மண்ணதை ஆளுவோரும் மகிழ்வுற வாழ்தலேது?
பொன்னிலே ஆபரணங்கள் பொலிவுறப் போடலேது?
மண்ணுல கெல்லாஞ் சென்று மங்கையைப் புணர்தலேது?

மந்திரியானவுடன் தம் மக்களை மறந்து போவார்
சுந்தரிபலபேருடனே சுழலுவார் உலகம் எங்கும்
சிந்தையில் மதியே இன்றிச் சிங்களர் ஆட்சி தன்னைக்
குந்தகமில்லா தான குறைவிலா ஆட்சியென்பார்.

என்றிந்த நிலைமை மாறும் என்றிவர் உண்மை உணர்வர்
என்றுநாம் ஒன்றாய் நிற்போம் எதிரியை இனமே காண்போம்
அன்றுதான் நிலைமை மாறும் அடிமையாய் எவரும் இன்றி
மன்றிலே தமிழர் ஆள்வர் மண்ணிலே தமிழர் வாழ்வர்.

இக் கவிதை 08.06.1975 ற்கும் 24.07.1975 ற்கும் இடையே எழுதப்பட்டுள்ளது.

படிப்பகம்

padippakam



# தமிழீழம்பாவை

ஆதியென்று ஒன்றே அறியா அழகொளிர் இளமைத்தமிழாள்
பாதியில் நிலைமை மாறிப் பாரினில் அனைத்தும் இழந்தே
நீதியென்று ஒன்றே அறியா நேர்மையில் ஆட்சியாளர்
பாதமே தஞ்சம் என்று பரிதவித் திடுதல் கண்டும்
ஏதுமே அறியார் போலே ஏந்திழை உறங்கல் நன்றோ?
தீதுசெய் ஆட்சியாளர் தீயிலே வேக வேண்டும்
மாதே உன் மனத்திற் கொள்வாய் மகுடமே சூடவேண்டும்
ஆதலால்(த்) தமிழை நாடுவாயே லோரெம் பாவாய்.

நாசமே உருவமான நஞ்சொத்த குணத்தார், நாம்
பேசிய தமிழை என்றும் பேணியே ஈழந்தன்னில்
வாசஞ்செய் வள நிலத்தில் வஞ்சகர் தம்மவரைப்
பாசமோ டழைத்து வந்து பாங்குறக் குடியும் ஏற்றும்
காசநோய் கண்டபின்னும் கண்களில் உறக்கம் நன்றோ?
காசினி தன்னை மீண்டும் கன்னி அர சாளவேண்டும்
நீசரை அழித்தே எங்கள் நிலத்தினைக் காக்க வாராய்
ஆசறு குணம் மிக்காளே ஆர்த்தெழே லோரெம் பாவாய்.

அடிமையில் அடிமையாக ஆண்டிலே ஒருநா ளேனும்
பிடியள வரிசியாதல் பெற்றிட வழியொன் றின்றி
மடிகிறார் மலையகத்தை வாழ்வுற அமைத்த மக்கள்
கொடி குடை தம்மினோடு குவலயம் அன்று ஆண்டோர்
அடிமையாய் வாழும் போது அணங்கே நீ உறங்கல் நன்றோ?
மடியினும் நன்றேயாகும் மண்ணிலே தமிழுக்காக
நடிகராய் மாறியிங்கு நம்பரைக் காட்டிக் கொடுக்கும்
அடிமைகள் தம்மை யொழிப்பாயே லோரெம் பாவாய்.

கல்வியைக் கண்களாகக் காத்து மேதினியிற் போற்றும்
நல்லியற் றமிழர் தம்மை நலமென வொன்று மறியாப்
புல்லியர் ஈழநாட்டிற் புதுமையாய்க் கண்டு பிடித்த
வல்லமையில்லா வகையால் வதைக்கின்றார் தரப்படுத்தி
செல்வியே இன்னுமுன்றன் செய்ய கண் ணுறங்கல் நன்றோ?
கல்வியே கண்களன்றோ கண்மணி எழுவாய் இன்றே
சொல்லிலே சொன்னதெல்லாம் செயலிலே காட்டவேண்டும்
எல்லோரும் ஒன்றாய் நின்று எதிர்ப்போமே லோரெம் பாவாய்.

படிப்பகம்

padippakam



நற்றமிழ் நாடுதன்னை நாமுமிங் கமைத்து வாழ
ஒற்றுமை வேண்டுமென்ற ஓர்பெரும் உண்மை தன்னைப்
பொற்றொடி உன்றனுள்ளப் போதிலே பதிய வைப்பாய்
சற்றுமே நிலைமை தளராச் சாதனை புரியும் வேளை
நற்றவம் இயற்றல் போலே நங்கைநீ உறங்கல் நன்றோ?
கொற்ற மொன் றமைப்பதற்குக் கொண்டிடு உறுதி யின்று
மற்றவ ரெல்லாம் மதிக்க மகுடமே சூடித் தமிழும்
அற்றநல் லுரிமைகாண ஆர்த்தெழே லோரேம் பாவாய்.

அந்தமிற் பெருமையோடு அன்றுல காண்ட எங்கள்
செந்தமிழன்னை தம்மின் செய்ய சீரடிகள் போற்றிப்
பைந்தமிழ்த் தொண்டு செய்யும் பாவமே அறியாரான
எந்தமிழன்பர் தம்மை இருட்சிறைக் குள்ளே பூட்டி
அந்தமிற் கொடுமைசெய்ய அணங்கே நீ உறங்கல் நன்றோ?
சிந்தனை செய்வாய் நன்றாய் சீறியே எழுவாய் இன்றே
அந்தகராட்சி தன்னை அழித்திட வேண்டு மென்று
எந்திரக் கலத்தைக் கையில் எடுத்திடே லோரெம் பாவாய்.

சித்தரும் சிவனைப் போற்றிச் சீருற அன்று வாழ்ந்த
முத்தரும் முடியைச் சூடி மூவுலகன் றாண்டோரும்
எத்தனை கல்விகேள்வியிற் பெரும் புலவர் தாமும்
பக்தியாய் ஏற்றுநிற்கப் பாங்குற வாழ்ந்த தமிழாள்
இத்துணை இன்னல் கண்டும் இன்னும் நீ உறங்கல் நன்றோ?
நித்திரை இனியும் ஏனோ நித்திலம் எழுவாய் இன்றே
எத்துணைத் துன்பம் வரினும் ஏற்றிட உறுதி பூண்டு
எத்தரை அழிக்கவென் றெழுவாயே லோரெம் பாவாய்.

இந்திர விழாக்களென்ன இன்னருந் தமிழை யன்று
நிந்தனை செய்தார் தலையை நிலத்திலே உருளச் செய்து
தந்தநல் விழாக்களென்ன தாரணி மீதி லுன்றன்
முந்திய நிலைமை என்ன முழுவதும் இழந்து நிற்கும்
அந்தர நிலையிலின்னும் ஆயிழை உறங்கல் நன்றோ?
தந்திறன் மிக்க நங்காய் தாவியே வாராய் இன்றே
மந்திரத்தாலே மாங்காய் மண்ணில் வீழாது கண்ணே
எந்திரக் கலத்தைக் கையில் எடுத்திடே லோரெம் பாவாய்.

படிப்பகம்

padippakam



கந்தனைக் கன்னித் தமிழாற் கடிந்துமே ஏசினாலும்
வந்தனை செய்தாரென்று வரங்களைக் கொடுப்பா னன்றோ
நிந்தனை செய்து தமிழால் நீள்கவி பாடினாலும்
சிந்தனை எதுவுமற்றுச் சிவனாடி நிற்பா னன்றோ
அந்தமில் இன்பத் தமிழும் அழிய நீ உறங்கல் நன்றோ?
மந்தைகளாக இங்கே மாளுதல் ஏனோ கண்ணே
நந்தமிழ் அன்னைக்காக நம்முயிர் போனால் என்ன
வெந்துயர் தீர்ப்பதற்கு வாராயோ லோரெம் பாவாய்.

காட்டியே கொடுத்து நிற்கும் கயவரை மற்றும் எம்மைப்
பூட்டியே சிறையில் வைத்துப் புல்லிய செயல்கள் புரியும்
ஆட்சியின் அடியை வருடும் அந்தகர் தம்மைச் சாய்த்து
நாட்டிலே நாடு கண்டு நந்தமிழ் அன்னை வாழச்
சூட்டியே முடியை இங்கு சுதந்திர ஆட்சி கண்டு
பாட்டிலே பெருமை கண்ட பழந்தமிழ் நிலைமை பெற்றுக்
காட்டவே புதுமையொன்றைக் காசறு பொன்னே வாராய்
ஏட்டிலே பொன்னால் எழுத வேண்டுமே லோரெம் பாவாய்.

இக் கவிதை சுதந்திரன் வாரவிதழின் புத்தகம் 29 இதழ் 20 இல் 14.12.1975 வெளியானது. இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தினரின் ஆண்டுமலரான **நுட்பத்தின்** 1975 ஆம் ஆண்டுக்கான கவிதையாக அனுப்பப்பட்டு முற்றாகத் தணிக்கைக்கு உட்பட்டது.

படிப்பகம்

padippakam



## என் க(வி)தை

இவ்வாண்டு வெளிவர என்றுள்ள
எம்மரும் நுட்பம் இதழுக்கென்று
எவ்வாறும் ஒன்றேனும் படைப்பேயாக
எழுதியேநீவிர் தாருமென்று இறுக்க.

அவ்வாறே எழுதியொரு கவிதை தன்னை
அதற்கான தலைப்பாக நாளைநமதே
இவ்வாறே இட்டுயான் கொடுத்தகாலை
இடமாட்டோம் அச்சென்றார் அழுத்தகத்தார்.

இயம்பினரிதை ஆதலினால் இன்னொன்றென்று
இட்டார் தம் கட்டளையை இயற்றிநின்றேன்
இயற்றியதன் தலைப்பிதுவே தமிழெம்பாவை
இயலாது போடவிட மாட்டாரென்றார்.

விடுவேனா இன்னொன்று தருவேனென்றேன்
வீழ்ந்துபட்ட தமிழர்படு மின்னல் தம்மை
விடுவோமா தமிழர்கள் என்றுள்ளோரை
வீழ்த்தியெமை அழித்து நிற்கும் நீசர் தம்மைப்....

பாடவென்று எழுதிநின்றாற் போடமாட்டார்
பாட்டினிலே சுற்றி வளைத்து எழுதுமென்றார்
ஓடவென்றா வந்தேன் யான் சுற்றிவளைக்க
ஒண்டொடியா ஓடியேயான் வளைத்துப்பிடிக்க.

யாமிங்கு படுமின்னல் சொல்லில் வடித்து
நல்லதொரு புத்தகத்தில் இட்டுவைக்க
யாமடையு மின்னல்கள் இம்மட்டாகில்
நம்முரிமை எவ்வளவு நீரேசொல்வீர்.

முற்போக்கு நற்போக்கென்று மூக்கை அறுப்போர்
முதலாளித் துவத்திற்கு முலாங்கள் இடுவோர்
எப்போக்கு என்றிட்டாலும் எத்தர் ஆகிநின்று
எம்பகைவர் எம்நிலத்துக்கு வந்தகாலை.

படிப்பகம்

padippakam



அப்போக்கில் நின்றவர்க்கு ஆலவட்டம்
ஆனதெல்லாம் பிடித்தவரை அரவணைத்து
எப்போக்கில் நின்றிடினும் எல்லாங்காட்டி
இளித்தவரைப் பாவாடை விரித்தணைத்துப்...

பள்ளிதனிற் பாவையுடன் படுக்கவைத்துப்
பைந்தமிழர் மானமதைப் பாடையேற்றும்
குள்ளநரிக் குணத்தோர்க்கு தீர்ப்பையெழுதக்
குலைநடுங்கி அச்சேறாது என்று விட்டார்.

அடித்தார்க்குக் தமிழர் தாலி அறுத்திட்டார்க்கு
அடித்தார்க்குக் கொள்ளைதனை அனைத்துமாக
இடித்தார்க்கு வீடுகடை நெருப்பில் இட்டு
இடித்தார்க்கு எம்மானக் கற்பாம் அரணை.

இப்படித்தான் ஆக்கவேண்டும் என்றுபாட
இவற்றையெலாம் அச்சேற்றப் பயமாமென்றார்
அப்படித்தான் இங்குள்ள நீதிநியாயம்
அவர் குற்றம் என்றுவிடும் அனைத்துங் குற்றம்.

அடித்திடுவார் அதுவோர் நீதி அடிதாங்காது
ஐயையோ என்றே அலறில் அதுவோர் குற்றம்
இடித்திடுவார் இடுப்பொடிய நோகுதென்றால்
இயம்பவொண்ணாக் குற்றமென்று இடிப்பாரின்னும்.

எடுத்திடுவார் மேடைதன்னிற் பஞ்சசீலம்
எடுத்திடுவார் எமையழிக்கப் பஞ்சசூலம்
தடுத்திடுவார் எமையே யாம் தக்கோர் ஆக்கில்(த்)
தாங்கவொண்ணார் அழுக்காற்றில்(த்) தருக்கரிங்கே.

முடித்திடவே எம்கதையை முயலுகின்றார்
முடியுமுன்னர் மூச்சிறுக்கி முனக முன்னர்
முடித்திடுவோம் எம்செயலை முந்திச் செல்லும்
மூத்த பெரும் தமிழ் மறவீர் விரைவீரின்னும்.

padippakam



அடித்தவர்க்குத் திரும்பியதைக் கொடுத்தல் நீதி
ஆதலினால் அது அநீதி என்ன வில்லை
இடித்தவர்க்கு இடித்திடுதல் கீதை நீதி
இடியிடித்தால் இயலாதது ஒன்றிங்குளதோ?

குள்ள நரி கூடிநின்றாற் சிங்கமாமோ
கூடிநின்று ஊளையிட்டாற் பிளிறலாமோ
அள்ளியள்ளி எம்மீது அனலைக் கொட்ட
அழிகின்றீர் அஞ்சாமல் எதிர்ப்பீராகில்...

ஆவதற்கு வழியொன்று உண்டு எனவே
அஞ்சாமல் ஒன்றாவீர் அதுவேபோதும்
சாவதற்கு என்னபயம் சாகத்தானே
தரணியிலே வந்துற்றோம் தமிழுக்காக.

சிங்கமென்று பெயர் வைத்தால் வீரம்வருமோ
சிந்தித்தாற் பண்புடனே கோழையாமோ
வங்கமன்று ஓட்டி நின்ற தமிழாவின்றும்
வங்கத்தில் ஓடியிடி இடித்தாலென்ன.

குறையோசை வேண்டாமே குவலயத்திற்
குனியாத ஓசை தமிழ் ஓசையாக
நிறையோசை பெரிதாகத் தமிழன்னைக்கு
நிலம்புகழ நீசமைப்பாய் மலர்ந்தவாழ்வு.

---

இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தினரின் ஆண்டுமலரான **நுட்பத்தின்** 1975 ஆம் ஆண்டுக் கவிதைகளிலே ஏற்பட்ட சில கசப்பான உணர்வுகளின் வெளிப்பாடு மேலேயுள்ள கவிதை, அல்ல, கதை.

படிப்பகம்

padippakam



# இன்று நாம் நாயிற் கடையோம்

நாயினுங் கடையோமென்று நம்மத நாயன்மா ரன்று
ஆயிரந் தடவையெமக்கு அன்பினால் இயம்பி யுள்ளார்
வாயினால் மட்டுமவற்றை வணங்கினோ மன்றி யாவர்
ஆயினும் அதனுட்பொருளை அறிந்துமே நடக்கின் றோமா?

நாவிலே சுவைக்கும் வண்ணம் நல்லுணவு இட்டவரைப்
பூவுல குள்ளமட்டும் புரிந்து தன் வாலை ஆட்டும்
ஆவியே பிரியும் போதும் அருகில் வேறு நாய் கண்டால்(த்)
தாவியே வெகுண்டு நிற்கும் தன்னினப் பற்றின் சிறப்பால்!

இவ்வருங் குணத்தில்(த்) தமிழர் என்றுமே சளைத்த தில்லைத்
தெவ்வருக் கடிமை யாகிச் சிறந்த தன் மானம் இழந்து
எவ்வகை யாலு மிங்கே எண்ணுவர் பொருளே சேர்க்க
அவ்விதம் சேர்க்க வேண்டி அன்னையைக் கூட அழிப்பர்.

பகுத்தறி வில்லா அரசார் பாரிலே பண்பு கெட்டு
வகுத்ததே சட்டமென்று வல்வினை ஆற்றி நிற்பத்
தொகுத்தவர் தம்மை எதிர்க்கத் தோன்றுமே எண்ண மிங்கே
வகுத்தனர் சாதி யென்ற வல்லரண் தமக் குள்ளேயே.

வெள்ளையர் மற்றுயாரும் விரைந்து தன் னிடத்தே வந்தால்
அள்ளியே அணைத்து வீட்டில் அருமிடங் கொடுத்தே ஈசன்
உள்ளநற் கோயிலுள்ளே உவகையோ டழைத்தும் செல்வர்
தள்ளியே வெளியே வைப்பர் தன்னுடை இனத்திற் சிலரை.

மற்றுமோர் இனத்திற் பெண்ணை மகன் துணையாகக் கொண்டாற்
பற்றிலே மறைத்து வைப்பர் பண்பிலாச் சீதனத்தை
உற்ற தன் இனத்தாள் தன்னை உயிர் போனாலும் ஏற்கார்
கற்றவர்கூட எம்மிற் கண் இழந்து அலை கின்றாரே.

பட்டங்கள் பதவிக்காகப் பாவிகள் மனையாள் தனையும்
சட்டங்கள் என்ற பெயரிற் சாவோலை எமக்கென் றெழுதும்
துட்டர்கள் தமக்குத் துணையாய்த் துய்க்கவும் அளிப்பாரிங்கு
எட்டப்பர் இவர்கள் வாழ்வு எஞ்சலே எமது வாழ்வு.

padippakam



எம்மில் அநேக ரின்று எதிரிகள் எமக்குச் செய்யும்
இன்னல்கள் உண்மை யென்றும் இதற்குள வழி இஃதென்றும்
எண்ணுவ ரேற்றுக் கொள்வர் ஏற்றவை செயலிற் செய்யார்
எண்ணுவர் குழவி தன்னை ஏதும் நோகாமற் பெறவே.

என்றுதா னிந்த நிலைமை எம்மினின்று அழிந்து தமிழர்
ஒன்றென உணர்ந்து இங்கே ஒளியுறு வாழ்வு காண்போம்
அன்றுதான் நாமெல் லோரும் அவனியில் மனித ராவோம்
இன்றுநாம் நாயிற் கடையோம் இறைவா நீ இதனைப் பாராய்.

எண்ணிய எண்ணி யாங்கு எய்துப எண்ணி நின்றார்
திண்ணிய ராகத் தம்மைத் திறம்பட ஆற்றி நிற்பின்
என்னதான் எதிர்ப்பு வரினும் இறுதியில் நீதி வெல்லும்
அன்னையெம் தமிழாள் வாழ்வு அரியணை ஏறும் அன்று.

நன்றி **நுட்பம்** 1976, ஆண்டு மலர், தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம், கட்டுப்பெத்தை வளாகம்.

படிப்பகம்

padippakam



## ஏற்றுவோம் எழு ஞாயிற்றை !

*அண்மையிற் பேராதனையில் அடக்குமுறை ஆட்சி தன்னால்*
*விண்ணுல கடைந்தார் சிலபேர் விழுப்புண் பெற்றார் பலரும்*
*உண்மையாய் உணருகின்றோம் உள்ளத்தால் இரங்குகின்றோம்*
*சொன்னவிச் செய்திதன்னைத் தொடர்ந்துமே நிகழுகின்ற*
*எண்ணருஞ் செயல்கள்தம்மை எண்ணியே பார்ப்பாய் தமிழா*
*ஏதிவை காட்டி நிற்கும் எத்தனை உண்மை விளங்கும்*
*மண்ணினைக் கொண்டிங் காள்வோர் மாக்களின் கீழா யெம்மை*
*எண்ணியே கருமமாற்றும் எல்லாமே எளிதிற் புரியும்.*

*சிங்களம் மட்டுமென்ற சிறுமதிச் சட்டமிங்கு*
*வந்ததோர் காலையென்ன வருந்துயர் துடைக்க வென்று*
*நங்களம் ஒன்றை அமைத்து நம்மவர் அறுபத் தொன்றில்*
*செங்களம் கண்டுநின்ற சிறப்புறு வேளையென்ன*
*சிங்கள ஆட்சியாளர் சீர்கெட நடந்தார் தங்கள்*
*சொந்தமாய் எம்மை அவர்கள் சிந்தையில்(த்) தானுங்கொண்டு*
*எங்கேனும் ஓரிடத்தில் எப்பொழு தெனினும் செயலொன்று*
*இயற்றியதுண்டா தமிழா இன்னுமேன் மயங்குகின்றாய்?*

*மலையகத் தமிழர் தம்மை மந்தைகள்போலே எண்ணி*
*வலிந்தவர் வாக்குரிமை வன்மையாய்ப் பறித்த காலை*
*நிலையென அவர்கட்காக நிலமென ஒன்றும் இன்றி*
*அலைந்தவர் நாளுமங்கே அழுது கண்ணீரும் வற்றி*
*உலையிலே அரிசி இன்றி உடல்வலி குன்றி வாழ*
*வழியென ஒன்றும் இன்றி வருந்தியே அழியுங்காலை*
*தலைவராய் ஆட்சியாளர் தகவுடன் ஒருகால்(த்) தானும்*
*நிலைமையை எண்ணினாரா நினைத்துப்பார் நீயே தமிழா!*

படிப்பகம்

padippakam



ஐம்பத்தியெட்டில் எங்கள் அருமுயிர் பறித்த காலை
அருந்தமிழ்ப் பெண்கள் மானம் அந்தரத் தழிந்த காலை
கைம்மையே அடைந்து பலரும் கதறியே அழுத காலை
காதலின் மிக்க புதல்வர் கண்ணெதிர் எரிந்த காலை
நைந்துமை நமது தலைவர் நம்பரைக் காக்கச் சொல்லி
நலமென்று ஒன்றுமறியா நரகமே உருவமானோன்
பைந்தமிழ் எதிரியானோன் பண்டாவைக் கேட்ட காலை
பாரிலே நடந்ததென்ன பாவியே தமிழா சிந்தி.

எழுபத்தி ஐந்தில் மேற்கே எம்முடைநிலத்தில் வாழும்
எம்மவரான முஸ்லிம் அறுவரைக் காவல் நாய்கள்
விழுத்திய காலை சுட்டு வெறியுடைப் புத்தபிக்கு
தன்னுடைத் தலைமையின் கீழ் தரங்கெட நடந்த காலை
எழுபத்தினான்கில் எமது எழிலிறு தமிழ்மகள்
ஏற்றத்தைச் சுவையைக் காண எழில் யாழ் வந்து சேர்ந்த
பழுதிலா வகைசேர் தமிழர் பதின்மரின் உயிரை நாய்கள்
பறித்ததுமே எடுத்தகாலை பரராசா என்னும் இளைஞன்....

அருமுயிர் தன்னை அவர்கள் அந்தர வழியில் அழித்து
அடிமையே தமிழா என்று அவைதனில் அழைத்த காலை
ஒருவுட லாகத் தமிழர் ஒன்றுசேர் தலைவர் எல்லாம்
ஒப்புயர் அறத்தின் போரால் ஒளிரவே காலிமுகத்திருக்க
இருந்தலை தன்னைப் படையும் இதமெனப் பார்த்த காலை
இழிவுசேர் காவல்நாய்கள் இப்படி எத்தனையோ
வருபகல் இரவு எல்லாம் வரிசையாய்ச் செய்த காலை
ஒருவர் சிங்களவர் எமக்காய் ஒருகுரல் கொடுத்தாருண்டா?

படிப்பகம்

padippakam



தன்னுடை மக்கள் உயிரைத் தாக்கிய போது மட்டும்
சென்றனர் அமைச்ச ரெல்லாம் சென்றுமே கதறி அழுதார்
மன்றிலே கொண்டு வந்தார் மக்களுக்கு அனுதாபச் செய்தி
வளாகத் தலைவர் பதவி வலிந்துமே இழக்க லுற்றார்
நன்கொடை உதவி செய்தார் நலிந்துள குடும்பங்கட்கு
நடுவர்கொள் சபையொன்றமைத்து நடந்ததை அறியச் சொன்னார்
என்னடா தமிழா சிந்தி ஏன் எமக்கு இவை யிங் கில்லை
எமக்கென அரசொன் றில்லை என்றுமே நாமிங்கு அடிமை.

அண்மையில் அமைச்சர் ஒருவர் அழகுறச் சொன்னார் இதனை
அவரை நான் போற்றுகின்றேன் அவர் எமை நோக்கி இந்த
உண்மையை உரைத்த தற்காய் உணராம லிதனைச் சிலரிங்கு
இன்னமும் சேலைத்தலைப்பில் இழுபடு கின்றார் என்றால்
உண்மையில் அவர்கள் தம்மை உந்தியிற் சுமந்து பெற்ற
அன்னையை ஐயப்படவே அவனியில் வழியொன் றுண்டு
என்னடா தமிழா இங்கு எட்டப்பர் தேவையில்லை
எழுந்துமே வாராய் விரைவில் ஏற்றுவோம் எழு ஞாயிற்றை.

இக் கவிதை 24.11.1976 எழுதப்பட்டுள்ளது.

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# காதல்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



## கண்ணினால் நீ என் மனதிற்
## காதலால் இட்ட கோலம் ...

*காலையிளங் கதிரவனைக் காணமுன்னர் நீயெழுந்து*
*கோலவிள மயிலேபோற் குனிந்தில்முன் வாசலிலே*
*கோலமிடும் அழகு கண்டு கோதகன்ற உள்ளமதைக்*
*காலமெல்லா முனக்கென்றே கன்னியே நானளித்தேன்.*

*இல்லையெனு மிடையொடிய இளங்குரும்பைப் பாரமதில்*
*வில்லேபோல் வளைந்தவுன் வியப்புறும் அழகுபோலே*
*இல்லை இவ்வுலகினிலே எங்கணுமே என்று நற்*
*சொல்லாக வராவிடினும் சுவைத்துளம் மகிழ்ந்திடுவேன்.*

*கார்மேக விளிம்பினுள்ளே கதிரவன் மறைந்துநிற்கக்*
*கூர்மேவு கோலந்தன்னைக் கோதறு மலர்மானைபுனை*
*சீர்மேவு கூந்தல்காட்டும் சீலமிகும் இள மானே*
*யார்மூலம் என்நிலையை யானுனக்குத் தெரிவிப்பேன்.*

*பொன்னிறத்து மேனியிற்குப் பொன்வண்ண மஞ்சள்பூசி*
*மின்னிறத்து ஒளியே தோற்க மேனியினை நீருமாட்டி*
*மென்னிறத்துப் பாவாடை மேலே அரைத்தாவணியும்*
*வெண்ணிறத்தில் அணிவாயுன் மெய்யழகை மேம்படுத்த.*

*தென்னைதன் ஓலையாலே செங்குரும்பை மறைத்திடுமோ*
*தன்னுடலின் கனிகளையே தளிராற் கொடி மூடலுண்டோ*
*கன்னிநீயும் எண்ணிடாதே கவின்மிகும் உனது உடம்பில்*
*மன்னிய அழகு தன்னை மறைக்கலாம் துகிலால் என்று.*

படிப்பகம்

padippakam



அன்றுநான் அந்தி நேரம் அமைந்த இல் வாசலிலே
நின்று நற் காற்று வாங்க நீலவிழி சுழல நீயும்
உன்றன்இல் வாசல் நின்று உடுத்தமென் துகிலொதுக்க
உன்கரம் பட்டபாட்டை உன்னியதால் இஃதுசொன்னேன்.

மண்ணிலேயுன் கை இட்ட மங்கலக் கோலந்தானும்
கண்ணிமைப் பொழுதிற் காற்றாற் கடுமழை தன்னாலழியும்
கண்ணினால் நீஎன் மனதிற் காதலால் இட்ட கோலம்
மண்ணினில் அழியமாட்டாது அழிக்கவும் முடியாதன்றோ.

இக் கவிதை 13.11.1972 அன்று எழுதப்பெற்றது. இலங்கை வானொலியின் தமிழ்ச் சேவையின் ஆடவர் அரங்கு நிகழ்ச்சியிலே 06.12.1973 ஒலிபரப்பப்பட்டது.

படிப்பகம்

padippakam



## இன்பம் அவள் அளிக்க ...

வண்ண மலர் நிரம்பியுள வளப்பமிகு சோலை
பொன்னினொளி போலுமிள வெய்யில்வரு மாலை
தென்னையிளங் கீற்றினிடைத் தென்றல்வருங் காலை
என்னருகில் இருந்ததொரு மின்னலிடை வாலை

கயல்கூடக் கண்டுநாணுங் கண்களுடைத் தையல்
மயில்கண்டு மருண்டுவிடும் மங்கையவள் ஒயில்
குயில்கண்டு குழப்பமுறும் குலவியிசை பயில்
அயலமர்ந்து அன்புருக அவள்கொண்டாள் மையல்

தென்னையி னிளங்குரும்பை செந்திருவின் கொங்கை
காந்தளினம் இயல்புஉடை கன்னியவள் செங்கை
கூந்தலினம் இயல்புகண்டு குன்றிவிடுங் கங்கை
மாந்தளிரின் மேனியுடை வளப்பமிகு மங்கை

கார்குழலும் பாய்விரிக்கக் கன்னிநிலம் நாட
தேர்மருளும் அல்குலினம் தெரிவையுடன் கூட
யார்பெறவும் விழையுமிளம் நங்கையுடல் வாட
வேர்வையுற விளைந்த இன்பம் ஏதுவகை பாட

காலிருந்து தலைவரையும் கன்னியுடல் சேர
பாலிருந்து தேன்வரையும் பாவை இதழ் கோர
வேலெறியும் விழிகளவை சோணநிறஞ் சேர
மாலமிழ்ந்த வகைகூற ஏதுவகை தேர

செவ்வானம் ஒளிமங்கத் திருமதியுந் தோன்ற
செவ்வாயும் நிறம் மங்கிச் சேல்விழியில்(த்) தோன்ற
எவ்வாறும் அவள் உடலை இழக்க மனம் குன்ற
இவ்வாறும் இங்குளதோ இன்பம் எனத் தோன்ற

படிப்பகம்

padippakam



இடையென்று இல்லாவுடல் உடையெல்லாம் இழக்க
உடையென்று தண்ணொளியை உலவுநிலா அளிக்க
நடைபயிலுந் தென்றலுமே நல்லாடை அளிக்க
இடைநெளிய உடலசைய இன்பமவள் அளிக்க

கன்னியவள் மென்னுடலிற் கண்டசுவை சொல்ல
இன்னுலகில் எவையுமுள்ள படிசொல்ல வல்ல
தன்னிகரில்(த்) தமிழினிலும் இனிஎதுவும் இல்லை
மென்னியலாள் தருஞ்சுவையை ஏதுவகை சொல்ல

இக் கவிதை 29.12.1972 எழுதப் பெற்றது. இது கொழும்புவிலிருந்து வெளியான மாணிக்கம் என்னும் திங்களேட்டின் மார்கழி 1972 இதழிலே இடம்பெற்றது.

படிப்பகம்

padippakam



## உந்தன் உடல் நெளிய
## உரிய சுகம் பெற்றிடுவாய் !

கழிக்கவென்று விடுதலையைக் களிப்புடனே இங்குவந்தேன்
அளிக்கவென்று இன்பமதை ஆரணங்கே நீ வருவாய்
அளிக்கவொரு முத்தம் யான் அந்திபகல் ஏங்கிநிற்பேன்
அளிக்க நீ அனுமதித்தால் அனுதினமும் உனக்களிப்பேன்.

உன்முகங் கண்டவுடன் உள்ளமெலாம் உருகுதடி
என்மனம் நீ அறிய இதனை நான் எழுதுகின்றேன்
என்இதழ் தேய நீ இனிய சுவை அளிப்பாயேல்
என் உயிர் உள்ளவரை உனை நான் மறக்கிலேனே.

மாங்குயிலின் மொழியுடையாய் மதிபாதி நுதலுடையாய்
பூங்கொடியின் இடையுடையாய் பூப்போலே மனமுடையாய்
மாங்கனியின் இதழுடையாய் மன்னுமிள முலையிரண்டும்
தாங்கிடவென் நெஞ்சமதைத் தந்திட நீ ஏற்பாயோ.

அந்திநேர மையலிலே அமைந்துள வாசல் நிற்பேன்
எந்தன் உளம் மகிழவென்றோ எழிலரசி நீ வருவாய்
சிந்தைமிகக் குளிரவென்றோ சிறைப்புடைத்தோ தனிமை என்பாய்
எந்தனுக்குச் சோடி இல்லை ஏதுசெய்வேன் என்று நிற்பேன்.

சோடியாய் உனை ஏற்பேன் சுந்தர மனமுடையாய்
ஆடிநீ வருகையிலே ஆடிவிடும் என் மனதும்
கூடிநீ எனைக் கலந்து கொஞ்சி விளை யாடினாயேல்
நாடியுன் உள்ளமதில் நான் இருப்பேன் இனியவளே.

என்றன் உள்ளநிலை இக்கவிதை உனக் குணர்த்தும்
உன்றன் உள்ளமதில் எனை ஏற்று மனமகிழ்ந்து
வந்தென் பசிதீர்ப்பாய் வாய் முத்தம் தந்திடுவாய்
உன்றன் உடல் நெளிய உரிய சுகம் பெற்றிடுவாய்.

வீணான நேரமதாய் விடுதலையோ கழியுதடி
நானாக உனைக் கேட்க நாவியங்க மறுக்குதடி
தேனான தமிழ்போலே தெவிட்டாத உன்சுவையைக்
காணாமல் ஒருவருமே கனிவாக நீ தருவாய்.

---

இக் கவிதை 13.01.1973 எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam



இலக்கியம் உணர்த்தி நின்ற பெண்களில் திலகம் தன்னைத்
துலக்கிய கனகம் ஒத்த தூய நல் உள்ளத்தாளைக்
கலக்கியே கலைத்து விட்டார் கல்லொத்த மனத்தால் அன்று
விலக்கியே அவளை நானும் விரக்தியில் அமிழ்கின்றேனே.

மலர்முல்லை நிரையைக் காட்டும் மறுதவிர் மதியந் தன்னுள்
நிலமதை நோக்கி நாணும் நீலஞ் சேர் விழிகள் தம்மை
வலம்வரும் நினைவின் இடத்து வாழ்வையே அர்ப்பணித்து
இலது எனக்கு இன்பமென்று இதுவரை வாழ்கின்றேனே.

சீதனம் வேண்டாம் எமக்குச் சீரான மருகள் வேண்டும்
சாதியில் என்ன உண்டு சாலநல் அறிவு வேண்டும்
தீதிலை அவளை நீயும் திருமணம் செய்வாய் என்று
ஓதி அன்று இருந்தால் இன்று ஒளிபெற வாழ்குவோமே.

இக் கவிதை 01.06.1973 எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam



# தேடேன் இழுக்கதனை !

மங்கையொருத்தி வளர்நிலவைப் பார்த்தபடி
செங்கையாற்றன் சிறு நுதன்மேற் – கங்கை
ஒழுக்கன்ன கார்குழலை ஒதுக்கியே நின்றாள்
இழுக்காமல் இழுத்தாள் என்நெஞ்சை.

தெங்கினிளங் குரும்பையோ தீஞ்சுவை மாங்கனியோ
தங்கநிறச் சிமிழாமோ முந்தானையினால் – மங்கை
ஒளித்து வைத்திருந்தா ளல்லதோர் கணத்திலெனை
ஒழித்திடுமோ மென் கொங்கை.

சோலையிலே நின்றாளைச் சொல்விழியாற் பேசி
வாலைநீ யாரென்ற காலையவள் – வேலை
எறிந்தா ளென்மீது என்னுடம் பேக்கமுற
அறிந்தா ளென் காதனிலை.

வேலெனைத் தாக்கியே வெங்குருதி புக்கதனால்
ஆலம்பழநிற மாகிற்றே நாணமிக – வாலை
நெஞ்சிலே துவண்டாள் நேர்காத னிலைசொல்லித்
தஞ்ச மென்றா ளெனக்கு.

தஞ்ச மெனக்கென்ற தளிர்க்கொடி தன்னுடலை
நெஞ்சமுறத் தழுவி நேரிழையே யானுமுன் – தஞ்ச
மாகையினால் நாமிருவராகாத வண்ணமதாய்
ஏகமதா யிருப்போ மினி.

தண்டார் குழலியுடன் தரணியி லெம்மின்பத்தைக்
கண்டார் பொறாமையுறக் கழித்தேன் பலநாளைக் – கொண்டேன்
கோதை யவள்தன்னைக் கொண்டதனால் என்மேல்
தாதையுடன் தாயும் கோபம்.

படிப்பகம்

padippakam



கோதையவள் தாதை கொழுநனிடம் கையேந்திப்
பாதையி லொதுங்கி நிற்கும் பாமரனு மாவானே — தாதையவர்
தனக்குநீ மகனாகில்(த்) தவிர்த்திடுவா யவள் காதல்
எனக்கு மொழிந்தா ரெம் தாய்.

நாள்வீத முழைத்திடும் நலமிலா உழைப்பாள
ரால்நீயு மென்ன நலம் பெறுவாயோ — வாலையிற்கும்
சீதனமாயுஞ் சீர்நன் கொடையாயும் பெரு
ஆதனமாயுமவர் அளிப்பாரோ சொல்.

கூறினாரிவ்வாறு தந்தை கோள்பல சொன்னா ரூரார்
மாறுவா யென்றெனக்கு மதியிழந்து — கூறினார்
ஆதலால் ஆரணங்கைக் கைவிட்டுத் தேடேன் யான்
காதலுக் கோரிமுக் கதனை.

---

இக் கவிதை 15.11.1973 எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## சாவை யான் தழுவு முன்னர் ...

பரிசொன்று தருவாயோ பங்கய மலர்க் கண்ணாளே
தரிசாக நிலம் இருந்து தரணிக்கு என்ன பயன்
வருகவென்று ஏற்றிடுவாய் வாய்முத்தம் தந்திடுவாய்
அருகிருந்து என்றனுக்கு அரியசுவை ஊட்டிடுவாய்.

அன்றுயா னுனைக் கண்டேன் அந்தி மஞ்சள் வெய்யிலிலே
நின்றவுன் நிலையினிலே நிலை இழந்தேன் நிலவினிலே
கண்டபொற் சிலையேயாம் கன்னி உன் உருவினிலே
கண்ட உல கழகெல்லாம் கணக்கில்லை இள மயிலே.

பாவையரிற் பலபேரைப் பார்மீதில் நான் கண்டும்
பூவையுனைப் போலொருத்தி பூவுலகி லில்லை என்பேன்
நாவைநீ நம்பிடுவாய் நங்கையுன் மையலிலே
சாவையான் தழுவுமுன்னர் சாய்ந்திடுவாய் என்மடியில்.

மஞ்சமதிற் கொஞ்சிடுவோம் மாந்தோப்பில் ஆடிடுவோம்
கொஞ்சு தமிழ் பாடிடுவோம் குலவி விளை யாடிடுவோம்
அஞ்சுகமே அழியாதே ஆண்டுபல ஆகிடினும்
நெஞ்சமதில் நிலைத்துவிட்ட நிலையான காத லின்பம்.

தென்றல் இடைபுகாவண்ணம் சேர்ந்திருப்போம் கலவியிலே
கண்டவர் பொறாமையுறக் கலந்திருப்போம் அவனியிலே
கொண்டவளே என் மனதைக் கொண்டிடுவாய் என்றனையே
மஞ்சமதில் ஒன்றாகநாம் மகிழ்ந்திருப்போம் இளமயிலே.

---

இக் கவிதை 15.11.1973 எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## பள்ளியிலே கண்டிடுவோம்

நீராட நீ வருவாய் – நீரில்
நீராடி நீ எழுவாய்
போராடும் என் மனதும் – போதை
போராடும் உன் அழகில்.

வானூரும் மென்முகில்மேல் – நல்ல
தேரூரும் வெண்ணிலா போல்
கானூரும் நீரலைமேல் – இரு
சேலூரும் முகம் ஊரும்.

சேலூரும் உன்முகம் மேல் – என்
நாவூர்ந்தால் என்னவடி
பாலூரும் உன்னுடம்பு – என்
மேலூரர்ந்தால் என்னவடி.

போராடும் எந்தனுக்கு – இள
நீராடும் உன்னுடலைப்
போராட நீ அளித்தால் – உடல்
காணாத சுகம் பெறுவாய்.

கார்மேவு கூந்தலினால் – என்
கட்டில் மேல் விரிப்பமைத்துக்
கூர்மேவு மலருடம்பை – என்
கொதியுடலுக்கு அணையாக்கித்...

தார்மேவு கொங்கைகளை – என்
தாகத்திற் கிள நீராக்கிப்
பார்மேவு சுகமெல்லாம் – நாம்
பள்ளியிலே கண்டிடுவோம்.

இக் கவிதை 30.11.1973 எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## பூட்டினை உடைத்து வந்து...

*காட்டிலே நிலவெறித்தாற் கவினை அனுபவிப்பார் யார்*
*பாட்டினைப் பூட்டிவைத்தாற் பாரிலதை அறிவார் யார்*
*ஏட்டிலே காயெழுதி எழும் பசிக்குச் சுவைப்பார் யார்*
*கூட்டிலே வாழ்ந்தால் நீ கூட்டுவிப்பார் இன்பம் யார்*

*நாட்டிலே பலரிருந்தும் நங்கை உனைப்போலே காதல்*
*நாட்டவே வல்லார் யார் நன்றோ நீ என்மேல் மோதல்*
*காட்டினா லினியுங்கோபம் கன்னி என் வழியோ சாதல்*
*ஊட்டினா லுன்றன் சுவையை உலகினி லில்லைச் சாதல்*

*நாட்டிலே பிழையதாமோ நங்கையுனை நானும் நாடல்*
*வீட்டிலே இதற்காய்யாரும் விரைந்தனரோ அளிக்கச் சாடல்*
*வாட்டுதே என்றனுளத்தை வஞ்சி உன் வண்ண ஊடல்*
*கூட்டுதே துயரந்தன்னைக் கோதையுனை இன்னுந் தேடல்*

*ஆட்டுதே அல்லியுன்றன் அணியிடைசேர் கனிகள் ஆடல்*
*ஓட்டவே வாராய் என்றன் உளம் நிறைந் துள்ள வாடல்*
*ஏட்டிலே கவிஞன் எழுதும் எண்ணமே இந்தப் பாடல்*
*பூட்டினை உடைத்து வந்து பூவைநீ தருவாய் கூடல்.*

நன்றி – **நுட்பத்தின்** 1976, ஆண்டு மலர், தமிழ்ச் சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம், கட்டுப்பெத்தை வளாகம்.

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

# அரங்கம்




படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



## பாரதி என்றொரு பாவலன்

பாரதி என்றொரு பாவலன் தனக்குப்
பல்கலைக் கழக மாணவர் இன்று
பாரறி வகையோர் பைந்தமிழ் விழாவைப்
பல்வகைச் சிறப்பொடு நடத்திலம் ஆயினும்
நீரறி வகையில் நடத்துவோம் இதனை
நீரவர் சொற்படி நடந்திடில் அதுவே
பாரறி வகையில் எம் பைந்தமிழ் வாழப்
பண்ணிடில் அதுவே பாரதி விழாவாம்.

பாட்டிற்கொரு புலவன் பாரதி – ஈழ
நாட்டிற்கொரு புலவன் யாரது
கேட்டுத் தெரிந்திட வேண்டுமோ – சிறைக்
கூட்டிற் கிடந்தவன் மெலிகையில்
ஏட்டிலவன் புகழ் பாடலில் – நாம்
கூட்டுவித்திடோம் சுகத்தினை
ஆட்டிப் படைத்திடும் அரக்கரின் – உயிர்
வாட்டி அவன் தனை மீட்கவே.

பாரதி விழாவாம் இன்றிங்கு – ஏதோ
பைந்தமிழ் விழாவாம் அத்துடனே
யாரது வேண்டுவார் இங்கிதனை – யாம்
நலிவது நன்றோ தமிழ் பேசிப்
பாரது உண்டு வாழ்ந்திடவே – நல்ல
பணமது உண்டு பக்கத்துணை
யாரது வேண்டும் இனியெமக்குத் – தமிழ்
நலிந்திடிலென்ன தாழ்வெமக்கு.

படிப்பகம்

padippakam



என்றிங்கு கூறுவோர் பலருண்டு – அவர்
ஏன் பிறந்தார்களோ தமிழர்களாய்
என்றிங்கு உரைத்ததை உளவறியும் – எம்
எத்தர்கள் தமக்கும் சொல்லி எமைச்
சென்றங்கு அவர்க்குக் காட்டி நிற்கும் – சில
சிறுமதி படைத்த செய்கையரைக்
கொன்றிங்கு குவித்தவர் குருதியிலே – தமிழ்க்
கொடியினை நாட்டுவீர் இளைஞர்களே.

அன்றுதான் பாரதிக்கு ஏற்றவகை – நல்
அமைவுறு விழாவினை ஆக்கி நிற்போம்
என்றுநான் சொல்வேன் ஏற்பீர் இதை – என்ற
எண்ணம் எனக்குண்டு உறுதியென
அன்றவன் பாரதி பாடியவை – நல்ல
அணியுறு புதுமைக் கருத்துகளாம்
இன்றவன் இருந்திடில் அழுதிடுவான் – எம்
இழிநிலை கண்டு இறந்திடுவான்.

இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்தரு இரண்டும் மாறிப் பழிமிகுந்து இழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல் விளைந்தெமை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி உன்னைத் தொழுதிடல் மறக்கிலேனே.

என்றனன் பாரதி அன்று எம்மவர் தம்மை நோக்கி
இன்றவர் செய்வ தென்ன இருகையாற் பாதம் அழுத்தி
அன்றலர் மலரின் மாலை அணிந்து தம் அங்கை கூப்பி
மந்திரி ஐயா உமக்கு மதுவொடு மங்கை ஈறாய்த்...

தந்துளன் எனக்கு நீவிர் தந்திடும் உத்தியோகம்
செந்தமிழ் உரிமை வேண்டாம் சிங்களம் படிப்பேன் நன்றாய்
அந்தமில் இன்பத்தோடு அவனியில் வாழ்ந்தாற்போதும்
நந்தமிழ் என்றால் என்ன நமக்கென்ன பணமா சேரும்...

படிப்பகம்

padippakam



என்று தம் உரிமை இழந்து எத்தராய் வாழுகின்றார்
இன்றவன் இதனை நோக்கின் உதிரமாய்க் கண்ணீர் சொரிவான்
என்றுதான் இந்தத் தமிழர் ஏற்புடை வாழ்வு காண
நன்றெனக் கண்டவற்றை நாட்டிலே செய்வோம் அன்பாய்.

எட்டு மறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே
இளைப்பில்லைக் காண் என்று பாடியவை
கட்டு மென்முலை மாதர்கள் இன்று அக்
கருத்தினில் அறிவினை எடுத்துவிட்டு
மட்டு மட்டாக மறைவிடந் தெரிந்திட
மானுடல் அழகினை மலிவெனக் காட்டியே
பட்டு நின்றிடும் பாட்டினைப் பார்த்திடிற்
பாரதி இருப்பனோ பரிதவித்து அழுவனோ.

காதல் ஒருவனைக் கைப் பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்தே
மேதகும் அவனைத் தன்னுயிர்போல்
மேவியே இங்கு வாழ்பவளே
தீதறு புதுமைப் பெண்ணென அன்று
தீட்டினான் பாரதி பாக்களிலே
கோதறு குணத்தைப் பெண் காண்பது இன்று
கொம்பதாய் விட்டது முயலினுடை.

கற்புநிலை என்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் பொதுவில் வைப்போமெனக்
கற்பினைப்போற்றிக் கவி பொழிந்தான் அன்று
காதற் புலவன் பாரதி நன்றாய்
கற்பினைக் காதலிற் காதலர்கட்குக்
காசினியிற் சமமாகாது போனால்
கற்பினை இழந்து காணுவோம் சமமே
கருத்தினில் எதுவும் பிழையென உண்டோ?

படிப்பகம்

padippakam



பூவையர் இவ்வாறு பூணுவர் கொள்கை பின்
பூமியில் எங்ஙனம் புதுமைப் பெண் ஆகலாம்
நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணும் நற்குடிப் பெண்களின் குணங்களாம்
பேசிய பேச்சிவை பாரதி அன்றிங்கு
பூணுவீர் இக்குணம் புதுமையாய் மிளிருவீர்
புதுமைப் பெண்ணினம் பூமியில் ஆக்குவீர்.

சாதிப் பிரிவினை வேண்டாம் என்று
சாடினான் பாரதி அன்றே இங்கு
யாது பாடிலென் யாம் திருந்தி னோமா
நம்மவர்க்கு ஏனோ நாட்டிலே உரிமை
தீது கொண்டவர் குணமதிலே
தெரிந்தவர் ஆயினும் நீர் அவர்க்கு
யாது செய்யினும் செய்திடுவீர்
நமக்கு அவர் இங்கு தேவையில்லை.

## பாரதி அன்று...

காதலினால் மானுடர்க்குக் கலவி உண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினால் மானுடர்க்குக் கவிதை உண்டாம்
கானமுண்டாம் சிற்ப முதற் கலைகள் உண்டாம்
ஆதலினாற் காதல் செய்வீர் உலகத்தீரே
அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்
காதலினாற் சாகாமல் இருத்தல் கூடும்
கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்.

padippakam



## இன்றோ...

காதலினால் மானுடர்க்குக் கவலை உண்டாம்
    ஆதலினால் அரிவையரிற் பலரை இங்கு
காதலென்ற போர்வையிலே கலந்தோமாகில்
    கவலையில்லை அதனாலே கலக்கம் இல்லை
ஆதலினாற் காதலுக்கு ஒருத்தி வேண்டாம்
    அன்றன்று ஒவ்வொருத்தி வருதல் இன்பம்
காதலியை மாற்றி நிற்போம் நாள் ஒன்றாகக்
    கவலைபோம் அதனாலே திருமணமும் பொய்யாம்...

என்றிங்கு எத்தனையோ இளைஞர் சொல்வார்
    ஏன்தானோ பிறந்திட்டார் மானுடராய்
நன்றிங்கு நாயாகப் பிறந்திருந்தால்
    நன்றி என்ற குணமாதல் இருந்திருக்கும்
இன்றிங்கு எழுதிவந்த கவிதை இது
    இள மனது பொறுக்காமல் எழுதி வந்தேன்
சென்றுங்கள் வீட்டிலினிலே ஏசினாலும்
    திருந்திவிட்டால் அதுபோதும் எந்தனுக்கு.

---

இக் கவிதை 11.09.1974 இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கட்டுபெத்தை வளாகத்தின் தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப் பெற்ற பாரதிவிழாவின் போதான கவியரங்கத்திலே வாசிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



# வாடுதல் நன்றோ இன்னும் ...

(இக்கவியரங்கத்தின்போது மேடையிலே வைத்து எழுதப் பெற்ற அத்தனை கவிதைகளும் கையிலே கிடைத்த காரணத்தால் அவை யாவுமே முழுமையாகத் தரப்பட்டுள்ளன. பல்கலைக்கழக நண்பர்களை நினைவிலே மீட்ட இது மிகவும் வசதியாகவிருக்கின்றது.

இவர்களிலே ஒருவர் தவிர்ந்த ஏனையோரைச் சந்திக்கவே இல்லை. ஒருவரைச் சந்தித்துப் பதினொரு ஆண்டுகள் ஆகின்றன. பலரும் எங்கிருக்கின்றார்களென்றே தெரியாத நிலை. ஆனாலும், ஏறத்தாழ முப்பது ஆண்டுகளின் பின்னர், இவ்வாறிங்கிடுவதிலே ஒரு இன்பம், ஒரு வகை ஆறுதல்.)

ஒளிபடைத்த கண்ணினொடும் உறுதிகொண்ட நெஞ்சுடனும்
களிபடைத்த முகத்துடனும் கவிகேட்க வென்றிருக்கும்
நலிவடைந்த தமிழினத்தின் நாடுமுதல் உரிமைவரை
வழிபடைக்க வென்றிருக்கும் வல்லமைசேர் **காளையரே!**

ஞானமும் நல்லறிவும் நல்லழகும் சுதந்திரமும்
மானமும் மனதிற்சூடி மல்லிகை முதலாம் மலரை
ஆனநற் குழலிற்சூடி அணங்கென வீற்றிருந்து
ஆணவம் மனத்தினையே அறிவழிக்கும் **அரிவையரே!**

அனுபவ முதிர்ச்சி கொண்ட அறிவுமிகு **பெரியோரே!**
அனுபவ மெல்லாம் அன்பாய் அனுபவிக்கும் **தாய்மாரே!**
அனுபவ மொன்று மில்லா அழகுமனக் **குழந்தைகளே!**
அனுபவ மெனக் கின்பமான அன்புத் **தமிழ்த் தாயே!**

எல்லோர்க்கும் என் வணக்கம் ஏற்றிடுவீர் அன்புடனே
வல்லோர்க்கும் வல்லவளாய் வாழ்வளிக்கும் வாணிபதம்
சொல்லேற்கும் படிபோற்றிச் சொல்லுவோம் கவிகளையே
எல்லோர்க்கும் இனியதாக ஏற்றிடுவீர் அவையோரே!

எண்மர் வரவிருந்தோம் எழுவர் வந்துள்ளோம்
நண்ணிய உந்தமக்கு நற்றமிழ்க் கவியாத்துப்
பண்ணார் கவிதையல்லப் பண்ணுடனே பாடுவதற்கு
எண்ணீர் வேறெதுவும் எம்முடனே சேர்ந்திருப்பீர்.

படிப்பகம்

padippakam



வாடுதல் நன்றோயின்னும் வருவிப்போம் கவிகள்தம்மை
நாடியே யொவ்வொன்றாக நாமுமே அமைதியுடனே
கூடியே கேட்டிங்கிருப்போம் குறைகளை மன்னித்திடுவோம்
வாடுதல் நன்றோயின்னும் வருவீரோவ் வொருத்தராக.

வியந்து பழம்பெருமை வீணராய்க் கூறிநின்று
பயந்து வாழ்ந்திங்கே பரிதவிக்கும் தமிழருக்கு
நயந்து கூறிடுவாய் நல்வழி யொன்றிங்கு
வியந்து அவர்புகழ **விஜயகுமார்** வந்திடுவாய்!

நாமின்று தமிழராய் ஞாலத்திற் படுமின்னல்
தாமிங்கு மொழிந்திட்டார் தன்னுடைய கவியாலே
நாமிங்கு கேட்டுற்றோம் நல்லவரா யமைதியுடன்
நாமின்றே அவர் கருத்தை நல்லவழி ஆக்கிடுவோம்.

வாழ்ந்து என்ன பயன் மானந் துறந்திங்கே
வீழ்ந்து மடிந்திடுதல் மேலதா மொன்றன்றோ
வீழ்ந்து கொண்டிருக்கும் வீணராந் தமிழருக்கு
ஆழ்ந்த கவியதனை அளி நீ **மயூர நாதா !**

ஆடிப்பாடி ஆனந்தந்தேடிய ஆண்களும் பெண்களுமாய்க்
கூடியிருக்க வழியறியாமற் குலவிமகிழ நெறி புரியாமல்
வாடியிருக்கக் கண்டார் **மயூரன்** வளர்கவி அவரோடு யாரும்
கூடிக்குலவ ஊடிமகிழக் குலமகளிங்கு மனமது கொண்டால்...

வாடுதல் வேண்டா மின்னும் வந்தெனக் கறிவித்திட்டால்
நாடியே யவரை நீரும் நறுமணஞ் செய்யலாமே
வாடியே யிருக்கும் அன்னை வருதுயர் தீர்ப்பேனென்று
பாடியே சென்றார் நீரும் பாரிலே உறுதி பூணும்.

செந்தமிழ்க் கவிதையாத்துச் சிறப்புற மொழிந்தேயிங்கு
எந்தமை மகிழ்வித்திடவே ஏற்றமிகு மனங்கொண்டுற்றோய்
நந்தமிழ் அன்னையின்னும் நலிவுறல் கண்டு வாடி
வந்தெமக் குரைத்தேயிடுவாய் வாராய் நீ **கேதார நாதா!**

படிப்பகம்

padippakam



வாடுதல் நன்றோ இன்னும் வஞ்சியுன் வடிவேல் விழியால்(த்)
தேடுதல் கொண்டென் னுள்ளே தேங்கினாய் நெஞ்சி னுள்ளே
ஆடுதல் கண்டேன் உள்ளம் அணங்கே நீ ஊடல் நன்றோ
ஊடுதல் உணர்வாய் கண்ணே உணர்ந்துமே சேர்வா யென்னை.

என்று நான் வாடிப்பாட எனக்கிங் கொருத்தி இல்லை
என்று நாட் பலவாயேங்கி ஏதுநான் செய்வேன் இதற்கு
என்று என் மனதைநானே இன்பமாய்த் தேற்றி நின்றேன்
இன்று எனக் கொருத்தியுண்டு இக்கதை சொல்வே னிப்போ.

தாமரை மலர்கள் பூத்த தடாகம் ஒன்றின் அருகே
நானரை உறக்கந் தன்னில் நன்மதி ஒளியை அருந்திக்
கானசை கின்ற தென்றற் காற்றினை நுகர்ந்தே யிருக்கத்
தேனிறை கின்ற குரலில்(த்) தேம்புதல் கேட்டு அயர்ந்தேன்.

நாடினேன் நாதம் வந்த நற்றிசை நோக்கிச் சென்று
தேடினேன் தேனுக் குரிய தேன்மலர் யாரோ வென்று
பாடிடும் மீன்க ளுண்டோ பறவைதா னுண்டோ வென்று
வாடிய போதி லருகே வளைகளி னொலியைக் கேட்டேன்.

அருகிருந்தநற் புற்றரையில் அழகே தன்னுடை யுருவாக
இருந்தொருத்தி துடைத்திட்டாள் இளஞ்சிவப்புக் கன்னமதில்
உருண்டோடும் கண்ணீரை உரமாக வளை குலுங்க
அருகணைந்தே னவள்பெயரை அன்புடனே கேட்டு நின்றேன்.

தலைமகள் வாய்திறந்து தமிழ்மகள் என்று சொன்னாள்
சிலையது போலேயானேன் சிந்தையெலாம் பறி கொடுத்தேன்
நிலையில்லா இவ்வுலகில் நிலைத்திடும் அழகு கண்டேன்
அலைகடல் போலேயன்பை அவள் மீது சொரிந்து நின்றேன்.

காலினிற் சிலம்பொலிக்கக் கையினில் வளை குலுங்கப்
போலியாம் இடையின்மேலே பொலிவுற மணிமேகலையும்
பால் நிலா வதனமருங்கிற் பாங்குறக் குண்டலங்கள்
வால் நிற நத்து நிகர்த்த வஞ்சியின் கழுத்தில்மின்னும்...

படிப்பகம்

padippakam



மாலையிற் சிந்தாமணியும் மாண்புறப் பூட்டி நின்று
சேல்விழி நாணங்கொண்டு சிவந்திடத் தரையை நோக்க
வேல்விழி யேங்கலேனோ வெந்துயர் தந்த தென்னோ
பால்மொழி தேம்பலாமோ பாவையே பகர்வாயென்றேன்.

தமிழ்மகள் போலேயந்தத் தலைமகள் இருந்ததாலே
எனதிள மனத்தையங்கு எளிதினிற் பறி கொடுத்தேன்
கனிவுற விழிகள் நான்கும் கருத்தினில் ஒத்ததாலே
தமிழ் மகன் கூற்றின்மிக்க தமிழ்மகள் காதலுணர்ந்தேன்.

காதல் நான் கொண்டதாலே கன்னியவள் தன் துன்பம்
ஓதி நின்றாள் என்றனுக்கு ஓதிடுவேன் அவள் பேரால்
ஏது நீர் செய்திட்டாலும் எட்டப்பர் ஆகிடாதீர்
யாது நான் சொன்னேனென்று நன்றாக எண்ணிப்பாரும்.

சீருடனும் சிறப்புடனும் செங்கோலின் அரசோச்சிப்
பாரினிலே வாழ்ந்தமங்கை பாதியிலே இங்குவந்து
யாருமே அன்று இங்கு யாரடா கள்ளத்தோணி
நீருமே யென்றே கூற நினைத்துமே பார்த்திடாத...

பெருங்குறை தன்னாலின்று பெருகியே சிங்களவர்
பெரும்பான்மை ஆகிவிட்டார் பேதைகள் போலேநாமும்
பெருமிடர்ப் படுகின்றோம் பெண்களும் ஆண்களுமாய்ப்
பெரிதுமறிந் துள்ளோமிதைப் பின்னரும் இங்குநாமும்...

வாடுதல் நன்றோ இன்னும் வண்டமிழ் மக்காள் சொல்வீர்
வாடுதல் வேண்டா மின்னும் வாருங்கள் வீட்டின் வெளியே
தேடுதல் கொண்டு எம்மைத் தேடிடுந் துரோகிகள் தம்மைச்
சாடுதல் வேண்டும் எதிரி சாவினைத் தழுவும் வண்ணம்.

அன்பாலே அவள்மேற்கொண்ட ஆனந்தன் பாடியின்று
துன்பாலே சூழச்சிறையில்(த்) துரோகியர் மத்தியிலே
தன்பாலே அன்பு கொண்ட தாரணிசேர் மக்களையே
துன்பாலே பிரிந்திருந்து துவளுதல் நன்றோயின்னும்.

padippakam



தரப்படுத்தல் என்றிட்ட சதித்திட்டம் தன்னாலே
தரமுள்ள எம்மவர்கள் தகுதிக்கு ஏற்றவொரு
தரமுள்ள கல்வியினைத் தரணியிலே இழந்திங்கே
வரப்படுத்த அவர்துன்பாலே வாடுதல் நன்றோயின்னும்.

செந்தமிழ் நங்கை தன்னைச் சிறப்புறப் பெற்றெடுத்த
செஞ்சடையர் வாழுகின்ற சீர்மிகு கோணேஸ்வரம்
வஞ்சகராற் பறிபோக வாயற்று வக்கற்றெம்
நெஞ்சமதில்(த்) துணிவற்று வாடுதல் நன்றோயின்னும்.

நிலமது போனாலென்ன நீசரெமை வைதாலென்ன
விலகவே மாட்டோமும்மை விலங்குகள் பூட்டினாலும்
நிலவுவோம் அடிமையாக நீள்புவி தன்னிலுமக்கு
மலரினில் மாலை சூட்டி மந்திரி மார்களுக்கு.

மங்கையர் தம்மைத்தருவோம் மனமகிழவென் றுமக்கு
எங்கள் தொகுதியிலே எழுப்பிடுவோம் கட்சிக்கிளை
தங்கள் அருளாலே தந்திடுவீர் உத்தியோகம்
எங்களுக் கென்றெம்முள் ஏத்திடும் கயவர் தம்மை...

வாழவே விட்டுவிட்டு வாளாவிருப் பதனால்(த்)
தாழவே சென்றொதுங்கித் தரணியில்(த்) தமிழ்நங்கை
வாழவே வழியேயின்றி வந்திடும் அதனாலவரை
வாழவே விட்டுவிட்டு வாடுதல் நன்றோயின்னும்?

அன்றவள் நவின்றவற்றை அருந்தமிழ்க் கவியில் யாத்து
நின்றிங்கு உமக்கும் சொன்னேன் நீட்டுவீர் உதவிக்கையைத்
தந்திங்கு கொற்றமொன்று தமிழ் மகள் தன்னை வாழ
வென்றிங்கு நிற்பீர் வீரம் விளைந்தவர் வாடலாமோ?

படிப்பகம்

padippakam



பாவலர் ஆக்கிவந்த பைந்தமிழ்ப் பாக்கள் தம்மை
யாவரும் இனிமையாக நலமுடன் கேட்டே யிருந்தீர்
காவலர் ஆவீர்தமிழின் கரங்களைச் சேர்த்து ஒன்றாய்
யாவரும் உழைப்பீராகில் நமக்கென உரிமையெல்லாம்.

பாரிலே ஒவ்வொன்றாகப் பாய்ந்தோடி வந்து நிற்கும்
சீரிலே மேம்பட்டிங்கு சிறப்போடு வாழ முடியும்
நேரிலே எழுவர் கூற நெஞ்சிலே அமைதி பூண்டு
சீரிலே கேட்டேயிருந்தீர் சிறப்புறும் அவைக்கு நன்றி!

மேற்படி கவிதை 15.08.1974 அன்று கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள இராம கிருஷ்ண மண்டபத்திலே நடைபெற்ற கட்டுப்பெத்தைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கத்தினரின் கலை விழாவின்போதான கவியரங்கத்திலே படிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



# நல்குவீர் பெயர்கள் தம்மை

கவினுற வாண்டு தோறுங் காதலாற் றமிழ் மீதுள்ள
புவியுளோர் மகிழ்வு கொண்டு புகழ்ந்திடுங் கலைவிழாவிற்
கவியரங் கென்றோர் நிகழ்ச்சி கலந்திடும் வழக்கமறிவீர்
கவிஞரா யதனிற் கலக்கக் களிமனங் கொண்டுள்ளோரே!

வாடுதல் நன்றோ இன்னும் வளம்மிகு கலைவிழாவைக்
கூடிய விரைவில் நாங்கள் குறையென வொன்றுமின்றி
நாடிய வண்ணமியற்ற நல்குவீர் பெயர்கள் தம்மை
வாடுதல் நன்றோ இன்னும் வளர்கவிப் பொருளு மீதுவே.

ஒவ்வொரு கவிஞருக்கு மொதுக்கிய நேரவெல்லை
செவ்விய தாகவேழு நிமிடமே யாதலாலே
அவ்வித மானமுறையி லமைத்திடவுள்ளீர் பெயரை
எவ்வித மாகவேனும் என்னிட மன்றி மற்றுத்....

தடக்கை சேர் பொதுச் செய லாளரிட மாகிலென்ன
அடுத்து வர வென்றுள ஆறாந் திகதி யன்றுச்சி
கடந்திடு முன்னரெல்லி கையளித் திடுவீரென்று
அடக்கமாய்க் கேட்டுநிற்கு மன்னை தமிழின்றொண்டன்.

கட்டுப்பெத்தைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தினரின் கலைவிழா 1974 இன் போதான கவியரங்கத்திற்கெனக் கவிஞர்களை அழைக்கும் விளம்பரம் – 06.08.1974

படிப்பகம்

padippakam



# ஆளத்தான் போகின்றோம் வாழத்தான் போகின்றோம்

புகழ்மணம் பரப்பியன்று பூத்திருந்த தமிழரின்று
இகழ்வுற்று இழிவடைந்து இல்லையொரு நாடென்று
உளம்நோக உண்டெமக்கு உரிமையும் நாடுமென்று
களங்கண்டு களிகொள்ளும் கட்டிளங் **காளையரே!**

அங்கை காந்தள் மலர் அனிச்சமே அழகுப்பாதம்
மங்கை எம்மிடையோ மல்லிகை கூந்தல் சூட
மயங்கும் பாரமேறி மன்னிய இவை யார்க்கெனில்
முயங்கும் அன்பருக்கே மூளவுள்ள பெரும் போரில்.

தாங்கியே படைக்கலன்கள் தப்பாமற் பகைவரினை
ஆங்காங்கு வீழ்த்திடுவோம் அரிவையர் நாங்களென்று
மாங்காய் பிளந்தன்ன வடிவம் சுடர் விழியின்சொல்
ஓங்கியே உரைத்து நிற்கும் ஒளியான **மங்கையரே!**

பெற்றது யாம்பிள்ளைகளைப் பெற்றிட எம்நலமன்று
அற்ற வெம்முரிமைகள் அனைத்தையும் உயிர்தந்தும்
பெற்றெம் தமிழ்த் தாய்க்குப் பேறெலாந் தரவேயென்று
முற்றாக மனத்திருத்தி முன்னுள்ள **பெரியோரே!**

கள்ளமிலா வெள்ளைமனக் கனிவுமிகு **குழந்தைகளே!**
தெள்ளு தமிழ்க் கவியாத்துத் தெவிட்டா துரைக்கவென்று
உள்ளியிங் குற்றிட்ட உயர்வு பெற்ற **கவிஞர்களே!**
எல்லோர்க்கும் என் வணக்கம் ஏற்றிடுவீர் அன்புடனே!

அள்ளியள்ளிப் பருகிட அமுதவூற்றாய் வற்றாது
வெள்ளம் போற் பெருகி வேண்டுகவி யாக்கவருள்
நல்கும் **தமிழ்த்தாயே** நற்றமிழ்க் கவியுந்தன்
கள்ளூறு கமலத்தாள் காணிக்கை ஏற்றிடுவாய்.

படிப்பகம்

padippakam



அகவைகள் தோறும் எங்கள் அருந்தமிழ் அன்னைக்குப்
புகழ்பெறு விழா வெடுக்கும் புனிதமிகு நெஞ்சமுடைத்
தகவுறு தொழில் நுட்பத் தமிழ் மன்றம் தனக்கு என்
அகமுறு கவிதை மாலை அடிதொழுது சூட்டிடுவேன்.

ஆளத்தான் போகின்றோம் – நம்மை நாம்
    ஆளத்தான் போகின்றோம்
வாழத்தான் போகின்றோம் – தமிழராய் நாம்
    வாழத்தான் போகின்றோம்
ஆளத்தான் போகின்றோம் – தமிழ்க் கொடியோடு
    ஆளத் தான் போகின்றோம்
வாழத்தான் போகின்றோம் – தமிழ்க் குடைக் கீழ்
    வாழத்தான் போகின்றோம்.

மாளத்தான் போகின்றார் – துரோகிகள்
    மாளத்தான் போகின்றார்
வீழத்தான் போகின்றார் – பகைவரெலாம்
    வீழத்தான் போகின்றார்
ஆளத்தான் போகின்றோம் – நம்மை நாம்
    ஆளத்தான் போகின்றோம்
வாழத்தான் போகின்றோம் – தமிழராய் நாம்
    வாழத்தான் போகின்றோம்.

சேர்ந்து கொண்டுள்ளோம் – பேரவையிற்
    சேர்ந்து கொண்டுள்ளோம்
சோர்ந்து கொண்டிரோம் – இனியும் நாம்
    சோர்வு கொண்டிரோம்
பார்த்துக் கொண்டிரோம் – தமிழின் பகைவரைப்
    பாரில் விட்டிடோம்
ஆர்க்குங் குடியல்லோம் – தமிழர் நாம்
    ஆர்க்குங் குடியல்லோம்.

படிப்பகம்

padippakam



உரிமை பெற்றிட உரியதோர் வழியறம்
நேர்மை யுள்ளவர் நெறிதனில் வாழ்பவர்
யாரும் எதிரியாய் நம்மையெ திர்த்திடில்
எருமை யொத்தவர் எத்தர்கள் உலுத்தர்...

காட்டிக் கொடுத்திடும் கயமை மிக்கவர்
ஆட்பலந் தன்னால் அறிவையே இழந்தெமை
வாட்டி வதைத்திடும் வஞ்சகர் ஆட்சியை
நாட்டிலே புரிந்திடும் நயவஞ் சகர்கட்கும்...

தப்பாமற் சொல்வேன் தவிர்த்து விடும் அறவழியைத்
துப்பாக்கி குண்டாலே துளைத்திடுவோம் அவர்களையே
எப்பாவம் வந்தாலும் எத்துன்பஞ் சூழ்ந்தாலும்
இப்போது நாமிருக்கும் இழிநிலையில் அது நன்றே.

இந்தியா நின்று வந்து – எம்நாடு
இலங்கிட வழி வகுத்தாரை – இன்றோ
அந்நிய ரென்று சொல்லி – இங்கிருந்து
அகன்றிடு மென்று கூறிப் – பற்பல
இன்னல்கள் அவர்க்குச் செய்தார் – சிலரோ
இந்தியக் கப்பலேற – இனுஞ்சிலர்
என்னதான் செய்திட்டாலும் – இதுவே
எம்முடை நாடென் றியம்பி.

தேனாட்டை அடைந்தார்கள் – சிலர்
திரு நாட்டை அடைந்தார்கள் – பலர்
யாழ் நாட்டை அடைந்தார்கள் – அவர்
யார் நாட்டை யடைந்தாலும் – இவர்
தம் நாட்டை விட்டிடென்றார் – தம்
ஒரு மொழிக்கே சொந்தமென்றார் – இங்கு
செந் நாவில்(த்) தமிழ் பேசும் – எம்மை
வந்தேறு குடிகளென்றார்.

padippakam



வந்தேறு குடிகளல்ல – நாமிங்கு
வலிமையற் றிருப்பதற்கு – நீரிங்கு
வந்தேற முன்பிருந்தே – வளமுடன்
வாழ்பவ ரிங்குநாம் – எமக்கென்று
வந்தாக வேண்டியுள்ள – எம்முடை
வாழ்வையே கேட்டுநின்றோம் – இனிநீர்
தந்தாக வேண்டுமன்றி – எமக் கொன்றும்
தரவியலா தென்றுசொன்னால்...

அழிவுக்கு முன் அகந்தை – இதை
அன்றெவனோ சொன்னான் – அதை
அழியாமலற் காப்பாற்ற – நீர்
அகந்தையே கொள்ளுகின்றீர் – என்றும்
அழியாத நம் மொழிக்கும் – உம்
அரசாங்கத் தனிமொழிக்கும் – ஓர்
கலப்பான வரிவடிவம் – நீர்
கண்டாக வேண்டுமென்றீர்.

கலப்பான வரிவடிவம் நீர் காணவும் வேண்டாமே
கன்னித் தமிழரன்று கலந்து நின்ற பௌத்தம்
அள்ளிவந்த மொழி அது பாளி, அன்றே தமிழ்
அணங்கோடு பெற்றதுவே அழகான நும் தாய்
விளைந்துள்ள சிங்களத்தின் வரிவடிவம் எதுவென்றால்
விளங்குந் தமிழ் வடிவம் விரைந்து நம்பாமல்
நுழைந்து தமிழ் படியும் நும் சிங்களம் புரியும்
நும் தாயின் தாய் எம் தாய் நும் பேர்த்தி.

தரப் படுத்திச் சதிகள் செய்தீர் – எம்
தரம் மிக்க நிலை குலைத்தீர் – நான்
உரப் படுத்தி உரைக்கின்றேன் – நீர்
உடன் கொண்டீரும் அழிவை – உம்
சிரந் தன்னிலே சிந்தையற்றீர் – நீர்
சிறுமையே கொண்டீ ரென்றும் – இனி
வரப் படுத்த முடியாதெம்மை – நாம்
வாழவென்று உறுதி பூண்டோம்.

padippakam



தமிழினிமை கேட்கவந்து தமிழ் மண்ணிற் கூடி நிற்கத்
தமிழர்க்கேது உரிமையிங்கு தானென்று கேட்டாற்போலப்
பரிதவிக்கும் படியவரைப் பட்டாளங் கொண்டுதாக்கி
அருமுயிரில் ஒன்பதினை அழித்தெமக் கின்னல்செய்து...

அவர்களுக்கு நாமமைத்த அன்புச் சின்னங்களை
எவர்தானோ அழித்திட்டார் எட்டப்பர் கூட்டத்தார்
இவரிங்கு இனியேனோ இவ்வுலகி லிருந்திவரைக்
கவர்ந்திட்டுச் சென்றிடக் காலனுமே வந்திடுவான்.

மொழிவாழ இனம்வாழ முக்கியம் நிலமேயாகும்
அழியாமல் அதைக்காக்க அறிந்துள வழிகளெல்லாம்
ஒழியாமற் செய்திடுவீர் உரிமையைப் பெறுவதற்கு
வழியாகும் இதுவொன்றே வாழவேறு வழியேயில்லை.

உயிரையே கொடுத்தேனும் உரியவெம் நிலத்தினிலே
அயலினத்தார் குடியேறி அழிவெமக்குச் சேர்ப்பதனை
மயல்கொண்டு ஏற்றிடாமல் மன்னித்து அழிந்திடாமல்
பயமென்று அடங்கிடாமல் பார்த்திருந்து தவித்திடாமல்...

எவ்வழியைக் கையாண்டும் எதிரி உயிர் அழித்தேனும்
எம்நிலத்தைக் காத்திடுவீர் எம்மினம் வாழ்வதற்கு
எவ்வழியும் நல்வழியே எதிர்பார்ப்புப் பிறர்க்கென்றால்
எவ்வழியும் புண்ணியமே எம்தமிழ் வாழுமென்றால்
எவ்வழியுந் தீதல்ல எதிரியாய் எமை அழிப்பவரை
எமன் வழியில் அனுப்பிவிடல் எம்கடமை என்றைக்கும்
எவ்வழியைக் கொண்டோமோ அவ்வழியில் ஒற்றுமையாய்
எய்துவோம் தமிழீழம் என் வணக்கம் அவையோரே!

மேற்படி கவிதை 08.06.1975 அன்று கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில், இலங்கைத் தொழில் **நுட்பக்** கல்லூரித் தமிழ் மன்றத்தினரால் நடத்தப் பெற்ற முத்தமிழ் விழாவிலே காலை நிகழ்ச்சிகளிலொன்றான கவியரங்கில் வாசிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## நாளை நமதே

நாளை நமதே நாளெலாம் நமதே
நம்மினம் வாழும் நாளெலாம் இனிதே
வேளை இதுவே வேலையும் எமதே
வெந்துயர் தீர்க்க வேளையும் இதுவே
காளை வருவீர் கன்னியர் இணைவீர்
காலமிஃதே கவினொளி பெறவே
நாளை நமதே நாமதை வேண்டில்
நன்றே முழங்குக நல்ல போர் முரசம்.

முரசம் முழங்கட்டும் முந்துவது யாரென்றே
முட்டி மோதியே மூளட்டும் பெரும் போர்
சிரசைத் துளைக்கட்டும் சென்னியே பிளந்துதிரம்
சீறிப்பாயட்டும் செங்களம் ஆகட்டும்
இரவும் பகலுமென்ற இடைவெளியொன்றின்றி
ஊனருடலெல்லாம் இன்பசளை ஆகட்டும்
முரசம் முழங்கட்டும் முதலிற் போர் முரசம்
முதலிலஃதென்றால் மூன்றும் இயம்பிடுமே.

இயம்பின் போர்ச் சங்கம் இன்றே எமதாகும்
எம்தமிழன்னை கை இரும் விலங் கொடிந்திடுமே
தயங்கி இருக்காதீர் தாரணி தன்னகத்தே
தங்கத் தமிழ் நாடு தான் காண நீர் வாரீர்
மயங்கிச் சுகபோகம் மட்டும் பெரிதென்று
மந்தை போல் வாழும் மாக்கள் இருக்கட்டும்
இயங்கும் மக்களையே இங்கெடுத்துக் காட்டிவிடும்
ஊனத்துரோகிகள் இன்னுயிர் போகட்டும்.

படிப்பகம்

padippakam



போக்கு முற்போக்குப் பொய்யர் தமக்கிட்ட பெயர்
பொய்யும் புழுகுகளும் பூமியிலே எத்தனை நாள்
ஆக்கும் வகையறியார் அவனியிலே வயிறு நிரப்ப
அன்பு மனையாளின் அருமுடலை விற்பரொப்பர்
நாக்கும் கூசிடாமல் நாளும் பொய் சொல்வர்
நாயாய் அடிமைத்தொழில் நன்றே புரிந்து தம்மைக்
காக்கும் முனைப் பினாலே கட்சிகள் மாற்றி நிற்பார்
காட்டிக் கொடுத்திடுவார் கழுத்தைக் கொய்திடுவீர்.

இடுவீர் வாய்க்கரிசி எம் தமிழ்ப் பகைவருக்கு
இட்டால் இன்றென்ன என்றும் எமதாகும்
சுடுவீர் அவருடலைச் சுட்டுற்ற சாம்பரிலே
துலங்க வைத்திடுவீர் தூய தமிழ் நாட்டை
விடுவீர் இரக்கத்தை வீரருக்கு அழகாக
வீழுந் தலையெல்லாம் விடிவு காண்பதற்கே
நடுவீர் தமிழ்க் கொடியை நம்பகைவர் குருதியிலே
நளின மலர்பூக்கும் நாளும் சேற்றிலினிலே.

இனிதே எம்கொடியும் ஈழத் தமிழ் நாட்டில்
இன்றே பறந்திட்டால் என்றும் எமதாகும்
கனிவா யெம் மவரும் கல்வி கற்றிடலாம்
கல்வித் தரப்படுத்தல் கனவிலும் அங்கில்லை
நனிவா யெங்கணுமே நாடோறும் வேளாண்மை
நன்றே செய்திடலாம் யாரும் தடுக்கமாட்டார்
கனிவள மெங்குமுள்ள கன்னித் தமிழ் நாட்டில்
கைத்தொழில் வளர்த்திடலாம் கைபூட்டயாருமில்லை.

இல்லை யென்ற சொல் இல்லாமலற் போக்கிடுவோம்
இருக்கும் வளமெல்லாம் இன்பமதாய் ஆக்கிடுவோம்
எல்லை யொன்றில்லா எழிலியற்கை முதற் கொண்டு
மண்ணெய் வளம் வரையும் எம்மீழ நாட்டிலுண்டு
தொல்லை யொன்றுமில்லாத் தூயதமிழ் நாட்டைத்
தோன்ற வைத்திடவே தோளை உயர்த்திடுவீர்
எல்லை போட்டிடுவோம் எம் மண்ணை மீட்டிடுவோம்
நம்மை நாமாள்வோம் நாளும் தமிழ் பேசி.

படிப்பகம்

padippakam



பேசாலை மண்ணிலே பெற்றிட்டால் மண்ணெயினைப்
பிலியந்தலையினிலே பிரித்தெடுத்து வடிக்க வாலை
கூசாமல் வைத்திடுவார் கொள் முருங்கன் களி மண்ணைக்
காங்கேசன் மண்ணுடனே கலந்து கப்பலேற்றிக்
காசாலே அதை யோட்டிக் காலி வரை சென்றங்கே
கலந்து ஆக்கிடுவார் கட்டிடத்துச் சாந்துவினை
பேசாமல் இருந்து விட்டாற் பேயரென நினைப்பார்
பேசியேன் என்றிட்டாற் பெறுக கை விலங்கென்பார்.

என்பை நொருக்கிடுவார் எம்மிளைஞர் உடல் புடைக்க
என்று மிறுமாப்பை ஏற்றார் அழிந்தொழிய
அன்பை அருளுகின்ற அருமந்த பௌத்தத்தை
அளிக்கவென்றிவரே அரும்பாடு படுகின்றார்
நன்பை யரவமுடன் நங்கை நிலவுலாவும்
நங்கள் பரமனன்று நன்றே முதன் முதலில்
அன்பை என்பாக்கி அறிவைச் சதையாக்கி
அழகை உடலாக்கி ஆற்றலை நரம்பாக்கி...

ஆக்கை வேறான பண்பும் பாரொத்த
பொறுமைப் பெருங்குணமும் பொருந்த ஓருருவை
ஆக்கி மகிழ்ந்திட்டான் அவ்வுருவே தமிழாகும்
அறிவீர் இவையெல்லாம் ஆர்ப்பரித் தெழுந்திடுவீர்
நீக்கும் அச்சமெல்லாம் நீரேனோ அஞ்சிடுவீர்
யாராலும் அவன்படைத்த நம் தமிழ் அமிழ்தினையே
நீக்க முடியாதே நீறுசேர் இராவணனார்
ஆண்ட நிலத்தினின்று அறிவீர் அஞ்சற்க.

அஞ்சி யஞ்சிக் கஞ்சருக்கு அடிமைத் தொழில் செய்தும்
எஞ்சியது எம்மவர்க்குக் கஞ்சியுமில் பஞ்சம்
வஞ்சி யரும் வாலிபரும் நெஞ்சமது பொறுக்காது
துஞ்சுவது ஒருமுறையே துடைப்போம் துயரமென்று
நஞ்சு நிகர் வஞ்சகரை நல்லவழி எதிர்த்தார்
கெஞ்சி நின்றும் கொஞ்சி நின்றும் குஞ்சங் குடைபிடித்தும்
பஞ்ச மதைப் போக்கவென்று மஞ்சமுடைப் பஞ்சணையில்
தஞ்சமெனக் கொஞ்சி நிற்கும் வஞ்சகரை யொழிப்பீர்.

படிப்பகம்

padippakam



*ஒழிப்பீர் ஒரு முறையில் ஒழியும் தீமையெல்லாம்*
*ஒன்றாய் அணிதிரண்டு ஒற்றுமை காத்திடுவீர்*
*விழிப்பீர் இனி யாதல் வீண்பொழு தாக்கிடாதீர்*
*வீசுவது தென்றலல்ல வெஞ்சினப் புயலாகும்*
*களிப்பீர் களங் கண்டு கயவர் தமை அழிப்பீர்*
*காப்பீர் தமிழ் மானம் கன்னித் தமிழ் மகட்டு*
*அளிப்பீர் திரு மகுடம் அதுவே நீர் பிறந்த*
*அருமைப் பிறப்பினுடை அணிசேர் பணியாகும்.*

*ஆகும் நல் வழியெல்லாம் ஆக்கியெம் மண்ணை*
*அழிவினின்று காத்து அமைப்பீர் தமிழ் நாட்டை*
*வேகும் மனத்துதித்தவற்றை வேதனையாற் கூறிநின்றேன்*
*வேண்டும் பணியெல்லாம் விரைந்தே செய்திடுவீர்*
*போகும் உயிர் பிரிந்து போவதுமோ ஒரு முறை தான்*
*பூமியிலென்ன கண்டோம் போகுமுயிர் தமிழுக்காய்*
*ஆகும் படி செய்தால் அரிய பணி செய்தீரே*
*ஆண்ட தமிழ் மீண்டும் ஆளும் நாள் அந்த நாளே!*

---

மேற்படி கவிதை இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் 1975 ம் ஆண்டிற்கான கலைவிழாவில் நடை பெற்ற கவியரங்கில் வாசிக்கப் பெற்றது.

---

இக் கவியரங்கத்திற் பங்குகொண்ட கவிஞர் ஒருவர் தனது வரிகளிலே,

*சாதி பேசிச் சமயம் பேசிச்*
*சலித்துப் போன இனம் பேசிக் கூறுபோட்டு*
*நாதி யற்ற நாய்கள்*
*இங்கு நடமாடல் இனி ஓடும்*
*பாதியில் நாட்டங் கொண்ட – நாட்டில்*
*பாதியில் நாட்டங் கொண்ட சில*
*பாதகருக் காய்ப் பாடி*
*ஓதி வரும் ஊதல்களும் இடுகாடு இனி நாடும்.*

என்ற அடிகளுக்குக் கொடுக்கப்பட்ட பதிலடிகளாகப் பின்வருபவை முதலிலே மொழியப்பட்டன:

padippakam



நாயகன் கூறக்கேட்ட நாயகி ஒருத்தி வந்து– காதல்
நாயகன் கூறக்கேட்ட நாயகி ஒருத்தி வந்து
நாய்களை வகைபிரித்து நாவினா லுரைக்கக் கேட்டீர்!

நல்லதொரு பதிலினையே நம்தலைவர் நவின்றிட்டாலும்
வல்லவொரு முடிவினையே வழங்கிடவே தவறிவிட்டார்
வல்லவொரு முடிவொன்றை வழங்கிடுவேன் கேளுமிங்கே
சொல்லவுள்ள கவிதையிலும் சொல்லிடுவேன் பின்னருமே!

ஆதியில் இருந்த எங்கள் அருந்தமிழ் நாட்டைக் கேட்டு
ஊதியம் இழந்து தங்கள் உறவினர் ஊரை இழந்து...

சிறையிலே வாடுகின்ற சீர்மிகும் இளைஞர் தம்மைக்
கறையுடை உள்ளத்தாலே காரிகை நாய்களென்றார்.

தன்னலம் ஒன்றே யிந்தத் தரணியில் வேண்டி நின்று
எம்மருந் தமிழர் தம்மை எத்தராய்க் காட்டி நிற்கும்
புல்லிய நாய்கள் தம்மைப் போற்றியே மேலு மிங்கே
பாதியில் நாட்டங் கொண்ட பாதகரென்றும் சொன்னர்.

ஏந்திழை ஒன்று கேளாய் இங்குமே ஐம்பத் தெட்டிற்
செந்தமிழ்ப் பெண்கள் மானம் சிங்கள வெறியர் தம்மால்
அந்தரத் தழிக்கப் பெற்றும் அருந்தமிழ் மக்க ளெல்லாம்
சிந்திய போதுங் குருதி சிதறியே அழிந்த போதும்...

எங்குமே தமிழர் கடைகள் எரியிலே அவிந்த போதும்
தங்கியே இருந்த இல்லம் தணலிலே வெந்த போதும்
எங்கவர் ஓடிச் சென்றார் எந்திரக் கப்பல் ஏறி
எங்கவர் ஓடி நின்றார் இரைத்திடும் மூச்சு வாங்க...

என்பதை எண்ணிப் பாராய் என்னரும் சபையின் நல்லீர்
மன்பதை விளையு மிந்த மண்ணிலே தமிழர் வாழ்வு
அன்பிலே இணைந்து நாளும் அவனியி லுயர்வு எய்த
என்றுமே எமதுநாடு எமக்கென வேண்டும் அன்றோ?

முட்டிய அறிவின் குறைவால் மூட்டிடும் காதல் வழியாற்
கொட்டிய கவிதைக் கருத்தைக் கொட்டிடு மிவர் போன்றோரைக்
கட்டையில் வைத்துக் கொள்ளி கவ்விட வைத்த பின்னர்
எட்டியே வந்து சேரும் எழில் மிகு நாளும் நமதாய்!

படிப்பகம்

padippakam



# கல்வியா? செல்வமா? வீரமா?.... வீரமே!

*அன்பே உருவான அடியார் உள்ளமெனும்*
*இன்பக் கமலத்தில் இனிதே வீற்றிருந்து*
*துன்பம் இல்லாத தூயநல் வாழ்வளிப்பாள்*
*தங்கத் தமிழாலே தன்னை மிகப்பணிந்த*
*அன்பர் தமக்கிங்கே அருளும்* ***கலையரசி***
*ஆய பலகலைகள் அளித்தே காத்தருளும்*
*இன்ப வல்லியவள் ஈடிலிரு தாள் போற்றி*
*இதயம் நிறையரசி இணையடி போற்றி போற்றி.*

*நடுவு நிலைமை என்றால் யாதுமே நவிலாமல்*
*நல்லவராய் ஊமை போல நடிப்பதன்று*
*எடுத்த பொருளினையே உவத்தல் காய்தல் இன்றி*
*ஏற்றே ஆராய்ந்து எதுசரி எது பிழையென*
*விடுக்கத் தயங்காத வீரமுள்ள நடுநிலைமை*
*வியனுலகில் அதுதானே வீரனின் நடுநிலைமை*
*எடுத்தே இக் கருத்தை எமக்கு அரு நடுவராக*
*ஏறுபோல் வீற்றுள்ள எம் நண்பன்* **இளங்கோ***வே!*

*அரிய நற் சிலையுடனே அம்பறாத் தூணியையும்*
*அவளடியில் வைத்தன்று அன்புடனே போற்றி வந்தோம்*
*உரிய தென ஓரிடமும் உலகத்தில் இல்லையாகி*
*ஊமைகளாய் வாழுகின்ற உவகையிலா வேளையிலே*
*உரம் மிகு மனம் என்ற உயரிய நல் ஆயுதத்தை*
*உள்ளன்போடு இங்குவந்து உவந்தே அவளடி வைத்து*
*வரம் பல வேண்டி இங்கு வாணி விழா காண வந்த*
*வலிமைசேர் புயமுடைய வளர் மனத்துக்* ***காளையரே!***

*மாசறு நல் முகம் எல்லாம் மதுவூறு தாமரையாய்*
*மயக்க வைக்கும் விழியெல்லாம் மருதநிலக் குவளைகளாய்*
*வாசம் உறு கூந்தல் இங்கே வளர் தென்றற் சாமரையாய்*
*வளர்குலவு குறங்குகளே வளர்ந்த செவ்வாழைகளாய்*
*காசறு நற் காந்தள் மலர் கைவண்ணம் அதுவேயாய்க்*
*கலைத்தேவி களிகூரும் கனிந்த இள நீர் நகிலாய்*
*நேசம் உறு மனத்துடனே நினக்கு இங்கு யாம் படைத்து*
*நெக்குருகி எம் முன்னோர் நினக்கன்று செய்து வந்த...*

படிப்பகம்

padippakam



ஆயுத பூசையையும் அழியாமற் செய்வதற்காய்
அன்புடனே படைத்துள்ளோம் அருங்கண் வேல் இணைகள்
வாய்த்த புருவம் எனும் வாள் இணைகள் தம்மோடு
வந்திட்டாற் போரிங்கு வந்திடுமே செங்களமென்று
வாயதர நிறங்காட்டி வந்தபின்னர் வெற்றியிங்கு
வன் பகைவர் நெஞ்சினிலே வானுயர நின்று ஊத
ஆயுள்ள வெண்சங்கம் அருங் கழுத்தால் இங்குண்டு
ஆகவுரைத்து நிற்கின்ற அணிமிகு **வனிதையரே!**

பல்கலைக் கழகம் தன்னிற் பாங்குடனே பயிலுகின்ற
வல்ல நற் றமிழரின்று வாணிக்கு விழாவெடுக்க
நல்ல மனக் கமலங் கொண்டு நாமகள் சபைகண்ட
நல்லவர் **யாவருக்கும்** நவிலுவேன் என் வணக்கம்!

கல்வியே பெரிதென்று கவிசமைத்து வந்துள்ள
**மதிசந்திரகுமார்** என்னும் மாசறு கவிஞரே
செல்வமே சிறப்புடைத்து சீர்பெறும் உலகிலென்று
சொல்லார் கவி சமைத்துத் தோகையென வீற்றிருக்கும்
**செல்வராணி** யென்னும் செல்வியே கவிஞர் மானே
செல்வமும் பெரிதிங்கே கல்வியும் பெரிது ஆனால்
வல்லவராய் இவையிரண்டும் வளமுடனே நிலை பெறவே
வீரமொன்று வேண்டுமென்று விளம்பிடுவேன் என் கவிதை.

கண்ணுடையர் என்பவர் கற்றார் கல்வியின் சிறப்பதுவாம்
காசினியில் அதை மறுக்கும் கயவனல்ல நானுமானால்
கண்டவற்றைக் கண்டவாறு கள்ளமின்றிச் சொல்வதற்குக்
கண்ணிருந்து மென்ன பயன் கற்றவனும் கோழையானால்
கண்டவற்றைக் கண்டவாறு கள்ளமின்றிச் சொல்வல்ல
கற்றவரே கண்ணுடையார் மற்றெவரும் புண்ணுடையர்
மண்மீதே இதற்காக மாற்று நல்லுதாரணங்கள்
பன்னூறு பகர்ந்திடலாம் படித்தென்ன வீரமின்றேல்.

படிப்பகம்

padippakam



பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்ற வள்ளுவனும்
பொருளற்றார் பூப்பர் ஒருகால் பூமியிலே என்றிட்டான்
பொருளற்றார் பூமியிலே பூப்பதற்கு என்ன தேவை
பொல்லா தனவற்றைப் பொங்கி எதிர்க்கின்ற
பொருளெதிர் கண்டு மயங்காப் பொதுநல வீரம் மிக்க
அருளுடை நெஞ்சமொன்றே அவனியில்(த்) தேவை யதனால்
பொருள் வந்து சேர்வதற்கும் புவி மீது வீரம் தேவை
பொதிந்தவிப் பொருளையிங்கு பொறுமையுடன் எண்ணிப்பாரும்.

கல்வியைப் பெறுவதற்கும் காசினியில் வீரம் தேவை
கருத்தென்ன இதற்கென்று கருத்தழிந்து போகிடாதீர்
கல்விபெறத் தரப்படுத்தல் கண்ட பின்பும் நீருமிதைக்
கருத்தில்லாச் சொல்லென்று காண்பீரோ சொல்லிடுவீர்
வல்லவராய் வீரம் நிறை மறவர்களாய் நாமிருப்பின்
வஞ்சகரும் இவ்வாறு வதைத்திடவே வகையற்றுச்
சொல்லிழந்து செயலிழந்து சோர்வுடனிங்கு இருப்போமோ
சொல்லிடுவீர் எதுதேவை சோர்வு இல்லா வீரமன்றோ!

பொருளுக்கும் இதுபொருந்தும் பூமியிலே பலவளமும்
பொதிந்திருந்தும் நாமின்று பொல்லாத இனத்தவராற்
சுரண்டப்படும் இனமாகச் சுதந்திர வாழ்வின்றிச்
சுகிக்கின்றோம் அவரடியைச் சுவையென நக்கியிங்கே
வரப்படுத்த அவரெதையும் வாய்புதைத்து வாழ்கின்றோம்
வந்த இழி நிலமையேனோ வளமென்ன இல்லையங்கு
உரப்படுத்தும் வீரநெஞ்சு உள்ள வளம் குறைவாகும்
உள்ளிடுவீர் எதுதேவை உறுதிமிகு வீரமன்றோ!

உலகியல் வாழ்விற் கேற்ற உறுதி மிகு வீரங் கண்டோம்
உய்வதற்குப் பிறப்பறுத்தே ஓரைந்து புலன்களையும்
நிலை நிறுத்தி ஒன்றான நெறிபடைத்த ஆண்டவனை
நினைப்பதுவே வழியாகும் நெறியதற்கும் வீரம் தேவை
புலனைந்தும் அடக்கிய நற் பெருவீரம் தனை விளக்கப்
புராணத்தில் ஒரு கதையும் புனைந்திட்டார் அன்றிங்கே
படைக்கும் பிரமனுக்கும் படைத்ததைக் காத்து நிற்கும்
பச்சை வண்ணனுக்கும் யார்பெரிது என்ற போட்டி.

padippakam



உண்டான போதிலங்கே உலகெலாம் உணர்ந்தோதற்கு
அரியவனும் நின்றிட்டான் அனலாக இடையினிலே
கண்ணான கல்வியையே கனிவான தன் சக்தியெனக்
கொண்டுள்ள பிரமனுமே முடிதேடிப் புறப்பட்டான்
மண்ணூடே துளைத்து அடியை மாலவனும் காண்பதற்காய்
மருவிய திருமகளை மனத்திருத்திப் புறப்பட்டான்
என்னதான் நடந்ததங்கே எவர்தானும் காணவில்லை
எளியபல அடியார்கள் என்றும் காண்கின்ற சோதி.

இதிலிருந்து எவ்வெவற்றை இங்கு நாம் காணலாமே
இறைவனையே காண்பதற்கு இதம் மிகு செல்வம் மற்று
அதிசிறந்த கல்விதானும் அருகிருந்து உதவாவே
ஐந்தாக விரிந்துள்ள அரும்புலனை அடக்கியாளும்
மதிபடைத்த வீரமொன்றே மண்ணுலகில் உதவி நிற்கும்
மறைக்க வொண்ணாக் கருத்தாகும் மன்றுளீர் சொல்லிடுவீர்
எதுசிறப்பு உடைத்து இங்கே எண்ணரும் செல்வமா?
என்றுமுள கல்வியா? இவை எல்லாம் மிகு வீரமா?

இன்னுமொன்று இருக்கின்றது இக்கதையிற் கேட்டிடுவீர்
இதம் மிகு செல்வமங்கே இறைவனையே தேடியன்று
மண்ணையல்லோ துளைத்ததுவே மண்ணினுட் புதையும் செல்வம்
மற்றுள கல்விதானும் மன்னிய எம் பெருமான்
தண்ணீருள்ள முடிதனையே தான்தேடி மேல் நோக்கிச்
சென்றதுவே சென்றென்ன சேரவில்லை அது முடியை
வந்துபொய் சொன்னதுவே வந்திருக்கும் பெரியோரே
வாய்திறந்தே சொல்லிடுவீர் எது பெரிது? வீர மன்றோ!

இதுவரை என்கவிதை இன்தமிழில்(த்) தந்திடவே
மதுபுகு வண்டெனவே வாஞ்சையுடன் கேட்டிருந்தீர்
கதியென ஒன்றிங்கு கன்னித்தமிழ் மகளுக்குக்
காசினியில் உண்டென்றாற் காணவேண்டுந் தமிழீழம்
முதுபதி அதனையாம் முன்னிருந்து வீரமுடன்
முழுப்பேரும் ஒற்றுமையாய் முயன்றிட்டே பெற்றிடலாம்
இதுகவி இவனுரைக்கும் இதயத்தின் தூயசொல்லே
இங்குற்ற அனைவருக்கும் இன்தமிழில் என் நன்றி.

மேற்படி கவிதை 14.10.1975 அன்று கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள இராம கிருஷ்ண மண்டபத்திலே நடைபெற்ற பல்கலைக்கழகத்தினரின் கலைமகள் விழாவின்போதான கவியரங்கத்திலே படிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## புதுமைகள் செய்வோம்

மீன் பாடும் தேனாட்டில் என் பாட்டைக் கேட்கவென்று
தேனாடு மாமன்றத் தெளிந்த நல் அறிவுடையோர்
ஏன் தானோ அழைத்தனரோ என்றே யான் எண்ணுகையில்
ஒன்றைத் தானிங்கு ஓர்ந்துற்றேன் காரணமாய்.

வான் வெளியில்(த்) தினகரனும் மறைந்தவிட்ட வேளையிலே
வைத்திடுவார் விளக்கேற்றி வையத்தில் அதுபோலே
தேன் சிந்தும் தமிழணங்கின் தெவ்வர் அறக் கவிபாடும்
தெள்ளியனும் சிறையினிலே தேனாட்டார் எனையழைத்தார்.

அழைத்த மன்றத்து அன்பு மிகு பெரியோர்க்கு
அளிக்கின்றேன் நன்றி அன்புடனே ஏற்றிடுவீர்
உழைத்த தமிழருக்காய் உயர்வுற்ற தமிழர் முன்
உள்ளிவந்த கவிதை உரைப்பேன் உளத்திருத்தி
இழைத்து இன்புற்று இயற்றினால் இயம்பியவை
ஈழத் தமிழ் நாட்டை இன்றே கண்டிடலாம்
தழைத்து நாமெல்லாம் தாரணி போற்றிடவே
தங்கத் தமிழ் நாட்டில்(த்) தமிழராய் வாழ்ந்திடலாம்.

அண்ணல் ஆனந்தன் அவதரித்த பூமியிலே
அப்படியென்ன புதுமை ஆசையாய் இயற்றவுள்ளோம்
எண்ணம் இவ்வாறே எழுந்தது என்னகத்தே
என்றாலும் இங்கேயான் எழுதி வந்தேனோர் கவிதை
கண்ணின் ஒளியாகக் கற்கண்டின் சுவையாகக்
கன்னி இளமேனி கட்டித் தழுவுகையில்
மண்ணில் அளிக்கின்ற மயக்க வுணர்வாக
மல்லிகை நறுமலரின் மகரந்த மணமாகப்...

பண்ணின் இசையாகப் பாரிலே எனை மயக்கும்
கன்னித் தமிழணங்கின் காதலியின் கரந்தன்னில்
நண்ணி வைத்திடுவேன் நான்புனைந்த கவிதையினை
நாமகள் அருள் கொண்டு நவிலுவேன் அதனையிப்போ
கன்னி மேற் கொண்ட காதற் பித்தினாலே
எண்ணம் பிறழ்ந்திங்கே ஏதேனும் உளறிவிட்டால்
எண்ணிப் பார்த்தவற்றில் ஏற்றவற்றை எடுத்திடுவீர்
எடுத்து என்னபயன் ஏற்றவற்றைச் செய்திடுவீர்!

படிப்பகம்

padippakam



புதுமையாய் ஒன்றுமில்லைப் பூமியிலுள்ள மற்றை
மொழிகளை எண்ணிப் பார்த்தே மொழிவது என்னவென்றாற்
பொதுவிலே எல்லா மொழியும் பொன் முடியாட்சியின் பின்
அடைந்ததே மக்களாட்சி அளவிலா உவகையோடு
இதுவரை தமிழர் கண்டது இருள்மிகு அடிமைவாழ்வு
இணையிலா மன்னராட்சி இருந்ததும் உண்டு முன்னர்
கதியென ஒன்றுமின்றிக் கலங்கிடும் எமக்கு இனிமேல்
வரவெனவுள்ள மக்கள் ஆட்சியோர் புதுமைதானே.

புதுமையைச் செய்வதற்குப் பூமியிற் பலவுந் தேவை
புத்தி இருக்க வேண்டும் பொறுமையும் அறிவும் வேண்டும்
அதிகமாய் வேண்டுமெங்கள் அகத்திலே உறுதி வீரம்
அகிம்சையும் வேண்டும்யாரும் அறிவுளோர் எதிர்ப்பாராகில்
மதிப்பையோ மரியாதையையோ மனத்திலும் அறியாரான
மாக்களே எதிர்ப்போர் ஆகில் மனத்திலே சோர்வுவேண்டாம்
எதிர்ப்பவர் பூமாதேவி என்னும் நன் மங்கை மடியில்
இன்னுயிர் துறந்து வீழ இயற்றுவீர் செயல்கள் தம்மை.

காட்டியேகொடுத்து உமது கையினில் விலங்கைமாட்டிக்
காட்டிலேயுள்ள புதரைக் காட்டிலுங் கொடிய சிறையிற்
பூட்டியே வைக்க யாரும் பூரியர் முயல்வாராகிற்
புதுமையைச் செய்யவுள்ளீர் புண்ணியம் பார்க்கவேண்டாம்
நாட்டிலே நல்லோர் வாழ நஞ்சினை ஒத்த மனத்து
நரிகளை அழித்தல் நீதி நானிலம் உம்மைப் போற்றும்
காட்டினை ஒத்த நாட்டிற் காணவே புதுமை தன்னைக்
கயவரை ஒழிமின் ஒழிமின் காண்பீரே புதுமை எல்லாம்.

தமிழ்மகள் முடியைச்சூடித் தன்னகரில்லா ஆட்சி
தன்னையே புரிவதற்குத் தரணியில் நிலமும்வேண்டும்
அமிழ்தினும் இனிய தமிழை அரியணையேற்றி வைத்து
அனைவரும் வாழ நிலமே அவசியம் ஆகையாலே
தமிழ்நிலம் ஆகவுள்ள தாரணி தன்னில் மாற்றார்
குடியேறி அழிவு செய்யும் கொடுமையை எதிர்ப்பீராகில்
அமிழ்தினுமினிய உயிரே அழியினும் கலங்கிடாதீர்
அரியணை ஏறத் தமிழாள் அவசியம் நிலமேயாகும்.

படிப்பகம்

padippakam



புதுமையாய்ப் பூமி தன்னிற் பூக்கவென்று உள்ள நாட்டிற்
புவியுள நன்மையெல்லாம் பொலிந்துமே இருக்க வேண்டும்
இதுவரை இருந்து வந்த இழிவுறு சாதிக் கொடுமை
இருக்கவே மாட்டாதங்கே இன்னல்கள் பலவும் செய்யும்
மதவெறி அங்கு இல்லை மங்கையர் மணம் முடிக்கப்
பணமெனக் குவித்துநிற்கும் பண்பிலாச் சீதனமில்லை
இதமென இல்லாது எதுவும் இருக்கவே மாட்டாது அங்கே
ஈழத் தமிழ்த் திருநாட்டில் இன்பமே பொலியும் என்றும்.

கல்வியினைப் பெறுவதற்குக் கயவராய் யாரும் உம்மைக்
கனவிலே தானுந் தரப் படுத்தவே மாட்டார் அங்கே
செல்வத்தைச் சுரண்டி வாழும் சீமான்கள் இல்லை இன்னும்
சிறந்தது தமிழே என்றாற் சிறையிலே பூட்டி வதைக்கும்
புல்லியர் இல்லை அதனாற் புகழ் பெற வாழ்வோம் இனிதாய்
பூமியிற் பழைய நிலையைப் பூவையும் அடைவாளன்றோ
நல்லவர் மிக்க நாடாய் நன்மைகள் பொலிந்தவீடாய்
நானிலம் போற்றும் வண்ணம் நாமுமே வாழ்வோம் அங்கே.

செருக்களம் கண்டறியாச் சீருடையணிந்த வீரர்
செருக்கினால் மதியை இழந்து சிறுமையை அடைந்தோரென்று
இரவிலே குண்டு தேடி இல்லினுள் நுழைய மாட்டார்
இன்னல்கள் புரிய மாட்டார் இடிக்கவும் மாட்டார் என்பை
நொருக்கவும் மாட்டார் யாரும் நொந்துளம் வேகும் வண்ணம்
இருக்கவே மாட்டாரென்றும் இன்பமே பொலிய நன்றாய்
இருப்பரே தொழில்கள் செய்து இல்லறம் இனிதே இயற்றி
ஈட்டுவர் பழைய பெருமை ஈழம் வாழ் தமிழர் மண்ணில்.

உழைத்தவர் தம்மை நாடு கடத்தியே களிக்க மாட்டோம்
உழைப்பவர் குருதி உண்ணும் உன்மத்தர் ஆகமாட்டோம்
உழைப்பவர் தமக்குநிலத்தை உரிமையாய் ஆக்கி வைப்போம்
உன்னத நாட்டை இங்கு உடனேயே ஆக்கி வைப்போம்
சளைத்தவர் அல்லத் தமிழர் சாக்காடு வந்துற்றாலும்
சாதித்தே தீருவார்கள் சாவதோ ஒருமுறை தான்
இளைத்தவரல்லத் தமிழர் இன்தமிழ் வாழ்வுக்காக
இன்னுயிர் தன்னை நீத்தும் ஈழத்தமிழ் நாடு காண்போம்.

படிப்பகம்

padippakam



நாளைக்குத் தீபாவளி நரகாசுரன் இறந்த நாளாம்
நல்லனாய் இறந்திட்டான் நரகாசுரன் உயிர் பிரியும்
வேளையில் வரமொன்று வேண்டிநின்றான் அதனாற்றான்
மேதினியில் நன்னாளில் விழா வெடுக்க விடுதலையும்
நாளையுடன் அதுவும் இல்லை நமக்கினித் தீபாவளிக்கு
விழாவெடுக்க இலங்கையிலே விடுதலை என்றுமில்லை
மூளையுடன் எண்ணிடுவீர் முறையாக ஒன்றறிவீர்
முன்னாளில் இருந்திட்ட முதல் நரகாசுரனை விட....

இந்நாளிற் கெட்டவனாய் இருந்தொருவன் மாய்ந்திட்டான்
இறுதிவரை இழிந்தவனாய் இருந்திவனும் இறந்திட்டான்
அந்நாளில் எமையாண்ட ஆங்கிலேயரின் புரட்டாதி
இருபத்தியாறாம் நாளில் இவனிறந்தான் இலங்கையிலே
இந்நாளே சிறந்த நாளாம் இதுவே உமக்கு உவகை ஊட்டும்
இன்பநாள் ஆதலினால் ஈழத்திற் கொண்டாட
இந்நாளே தீபாவளி இயற்றுவீர் விழாக்கள் என்று
தன்னாலே உணர்ந்தே தரப் படுத்தினார் விடுதலையை.

என்னையும் கவிஞனாக ஏற்றுமே இந்த வேளை
எத்தனை வேலை தன்னை எனக்கென வீணே விட்டு
இன்முகங் காட்டியிங்கு இருந்த நற் சபையோருக்கும்
இளைஞர்கள் பலரும் கூடி ஈழத்திலிழந்து விட்ட
எம்மரும் உரிமை தன்னை எய்தவே மன்றம் ஆக்கி
எதனையும் செய்வதற்கு என்றுமே தயங்கா வழியில்
பன்னருஞ் செயல்கள் புரியும் பார் புகழ் மன்றத்தார்க்கும்
என்னுடைய அன்பு நன்றி ஏற்றிடும் அன்பு சேர!

மேற்படி கவிதை ஐப்பசி 1975 அன்று மட்டக்களப்புத் தேனாடு மாமன்றத்தினர் நடாத்திய தீபாவளி விழாக் கவியரங்கத்திலே பாடப் பெற்றது.

படிப்பகம்

padippakam



# தந்தை செல்வா அவர்களின் 79 வது பிறந்த நாள்

*செந்தமி ழீழநாட்டின் சிறப்புறு தலைவா!* ***செல்வா!***
*இன்தமிழ் அணங்கை என்றும் இனிதுறக் காப்போம் என்று*
*சிந்தையில் உறுதி பூண்ட சீர்பெறு மறவர் படையீர்!*
*சுந்தரத் தமிழால் உமக்குச் சொல்லுவேன் வணக்கம் ஏற்பீர்!*

*செல்வாவுன் பிறந்த நாளிற் சீரான கவிதை என்னும்*
*சொல்லாரம் சூட்டியுன்மேற் சொரிந்திட அன்புதன்னை*
*நல்லாரும் நாமகளும் நாம்போற்றுந் தமிழ் மகளும்*
*எல்லோரும் வழிவிட்டார் ஏற்றுள்ளேன் அப் பணியை!*

***கருணாநிதி****யுடனே கல்வியில் மேம்பட்டோர்*
*பலருமுன் விழாவைப் படம் வைத்து எடுக்கையிலே*
*கருணை வடிவுடையோய் கால் நாளும் படுமிடத்தில்*
*கண்கள் முன்னாலே கவின் விழா வெடுப்பதற்கு*
*மருளில் தவ மன்று மாண்புறவே இயற்றினோமோ!*
*மன்னா உன் செவியில் மாண்புடனே நான்புனைந்த*
*தெருளில் கவிதைகளைச் செப்பிடவே என்ன தவம்*
*தேர்ந்து செய்தேனோ? தெய்வமே அதுவறியும்!*

*சூரியன் மறையுங் காலை சுடர் விளக்கேற்றல் போல*
*வீரனாம்* ***காசியண்ணன்*** *வெஞ் சிறை வாடலாலே*
*பாரிலே யெங்கள் தலைவன் பான்மையைப் பாடுகின்ற*
*காரியம் எனக்கேயாகக் கடுந்தவம் எது செய்தேனோ!*

*வெள்ளையர் சீரழித்த வீரங் கொள் தமிழர் வாழ்வு*
*கள்ளமாய்ப் பலருமிட்ட கண்மூடித் தனங்களாலே*
*உள்ளமென் பதுவேயில்லா உலுத்தர்கள் கைகளிலே*
*பள்ளிகொண் டதனையன்று பார்த்திருந்தார் இழிதமிழர்.*

*அன்றந்த வேளையிலே அருந்தமிழர் நிலையுணர்ந்த*
*சிந்தை தனில் அறிவு சேர்ந்துள்ள செல்வா*
*உன்றன் வழிசென்று உன்னத நாடு வேண்டி*
*என்றும் அழியாவகை எக்காளமிட்டு நின்றாய்.*

padippakam



கோப்பாய் பெற்றெடுத்த கோமான் **வன்னியசிங்கம்**
காப்பேன் தமிழையெனக் கடமைசெய் **வரோதயம்**
மூப்பால் இன்றிழைத்த முதல்வா உன் போன்றோர்
காப்பாற்றி வளர்த்திட்ட கட்டுப்பாட்டு இயக்கம் இது.

தமிழர் கூட்டணியின் தாரக மந்திரமாம்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற
நனிசேர் ஒழுக்கத்தை நன்றே கடைப்பிடிக்கத்
தவறுந் தமிழர்கள் தயவுடன் இதை விடுத்து
அமிழ்தாம் தமிழ் மகளை ஆதரிக்கும் நாடகத்தை
இன்றே கைவிடுங்கள் இன்றேல்(த்) திருந்துங்கள்
இனிமேல் என்றாலும் இயக்கம் தூய்மைதனை
முழுதாய்ப் பெறுவதற்கு முன்னின்று உதவிடுங்கள்.

பட்டம் பதவி பெற்றுப் பணத்தோடு வாழ்வதற்காய்ப்
பைந்தமிழை விற்றெம்மிற் பலர் பாவியானார்கள்
திட்டம் போட்டெம்மைச் சிதைக்கச் சிங்களவர்
தீட்டி வருகின்றார் தீயை நிகர்த்த செயல்
சட்டம் அவர் பக்கம் சாட்சிகளும் அவர் பக்கம்
சாவதை எண்ணியஞ்சுந் தமிழர்களுமவர் பக்கம்
கட்டம் எது வரினும் கலங்கோம் கனித்தமிழைக்
கட்டி அரவணைத்துக் காப்போம் எனக் கூறும்...

வீரம் நிறை தமிழர் வேந்தே உன் பக்கம்
விளக்கம் நிறையுலகம் விளங்கும் உன் பக்கம்
தாரம் எனத் தமிழைத் தழுவி மன மகிழும்
தானைத் தளபதிகள் தலைவா உன் பக்கம்
தீரச் செயல் புரிந்து திகழும் **காசி மாவை**
**சேனாதி வண்ணைதந்த ஆனந்தன்** என்போரோடே
வீர ராகச்சிறையில் வெந்துயர் அனுபவங்கள்
வீர இளைஞர் எல்லாம் வேந்தே உன் பக்கம்.

இனியும் ஏனிந்த இன்பமில்லாத் தாமதமே
இயற்றி எம் செயலை இன்றே நாடமைப்போம்
குனியும் வாழ்வல்லக் குவலயத்தில் எம்வாழ்வு
கூனல் சற்றுமில்லாக் குன்றாத பெருவாழ்வு
தணியும் படியெம்மைத் தாக்கலாம் என்றெண்ணித்
தகவொன்றுமில்லாத சண்டாளர் செயல்புரிதல்
கனியுந் தமிழ்நாட்டைக் கடிதிற் காண்பதற்கே
காட்டும் வழியதனைக் காவலனே ஆணையிடு.

padippakam



அன்பு நெறி புகன்ற அறிவு நிகர் புத்தர் தனை
ஆதரித்து வாழுகின்ற அன்பர் சிங்களவரென்று
அன்பேயுருவான அரசே நீ நினைந்து
அகிம்சை வழியென்று அன்பாலே சொல்லுகின்றாய்
அன்பு சிறிது மில்லார் அறிவென்பது என்றுமிலார்
துன்பஞ் செய்வதையே தொழிலாய்க் கொண்டொழுகும்
பண்பில் பகையாளர் பாடையுங் கட்டிவைத்துப்
பைந்தமிழணங்கைத் தேடிப் பாரிலே அலையும் போது...

முழுவதும் அன்பேயான முதல்வா உன் அகிம்சையினை
முன்வைத்து என்ன பயன் மூடரே எதிர்ப்பவர்கள்
கழுதைக்குத் தெரிந்திடுமோ கற்பூர வாசனை தான்
கச்சையே கட்டி நின்றார் கன்னித் தமிழையிங்கு
குழிதோண்டிப் புதைத்திடவே குள்ளர் முயலுகின்றார்
குவலயத்தில் வரலாறு கொள்ளாத தமிழ் மகளின்
அழிவில்லா நிலைகண்டு அதிகாரச் சிங்களவர்
அகிம்சையை உணரமாட்டார் ஆதலால் இம்சை வேண்டும்.

உணர்ந்தே இவற்றையெல்லாம் உண்மைத் தமிழ் மறவன்
களத்தில்(த்) தனை ஈந்தான் காதற் சிவகுமாரன்
பிணந்தான் ஆனாலுமென் பிறழோம் கொள்கையெனப்
பித்துப் பிடித்தலையும் பெரும்படை இருக்கையிலே
கணந்தான் என்றிட்டாலும் களத்திலே தாமதமேன்
கையைக் காட்டிவிடு காவலனே ஆணையிடு
குணந்தான் ஒன்றுமில்லாக் கொடுவெறியர் தம்முடலைக்
குவலயத்துக் குரமாக்கிக் கொள்வோம் தமிழ்நாட்டை.

அன்பு வழிசொன்ன அரச மரப் புத்தரென்ன
அன்பே வாழ்வு என்ற அண்ணலார் காந்தியென்ன
அன்பே இல்லாதோன் அறைந்தால் ஒரு கன்னம்
அன்போடு அவன் தனக்கு அடுத்தே காட்டிடுவாய்
முன்போல் அடியென்று முகத்தின் மறுகன்னம்
என்றே புகன்றிட்ட ஏசு பிரானென்ன
தன்பால் முறைகெட்டுத் தாக்கிக் கற்பழித்த
தகவு சிறிதுமில்லாத் தரங்கெட்டவனிடம் போய்...

படிப்பகம்

padippakam



முன்போல் இன்னொருகால் முறைகேடாய் என் கற்பை
முன்னின்றழிமென்று முறையிடவுஞ் சொல்லுவாரோ
கன்னந் தன்னிலறைந்தாற் காட்டிடலாம் மறு கன்னம்
கற்பே போம் நிலையிற் கயவனிடம் அன்பெதற்கு
என்போல் இக்கருத்தை ஏற்போர் பலருமுண்டு
எட்டப்பராகியவர் எவரெனினும் இரங்கிடாதீர்
முன்போல் அவர் கதையை முடித்திடுவீர் அழகாக
முடித்தால் நரகமல்ல முதற்கயிலை உமக்கேயாம்.

எழுபதோடு ஒன்பதாகும் எல்லையில் வயதையடைந்த
எழில் நிறை நாளாயிற்று என்னதான் பரிசு தருவோம்
வழுவிலா மனத்தின் மிக்க வஞ்சமில் குழந்தை என்றால்
வாங்கியே பொருள்கள்தம்மை வழங்கலாம் அன்புப்பரிசாய்
முழுமதி வதனங் கொண்ட மோகினிக்கு என்றால் இதழில்
முத்த மழையே சிந்தி முடிக்கலாம் காதற் பரிசை
கிழவனே உனக்கு எம்மாற் கிடைக்குமோர் பரிசுண்டாயின்
கடிதினில் இயற்றவுள்ள கன்னித் தமிழ் நாடே!

செல்வா நீ இன்றேற் சீரிய நற்றமிழருக்கு
இல்லாதிருக்கும் இவ்வாழ்வும் ஈழத்தில்
கல்லா முடருக்கும் கற்றறிந்த நல்லவர்க்கும்
எல்லா முணர்த்திநிற்கும் எம்தலைவ செல்வாவே
நில்லா இவ் வுடம்பு நீணிலத்தில்(த்) தமிழருக்கென்று
அல்லாமல் வேறுக்காய் அழித்திடுதல் நன்றாமோ
எல்லாந் தமிழுக்காய் என்றிங்கு வாழ்பவனே
பல்லாயிரமாண்டு பார்புகழ நீ வாழ்க!

ஈழத்தின் காந்தி என இங்குள்ள பகைவர் கூட
இன்பத்தால் அழைக்கின்ற இனியவனே நீ வாழ்க!
தள்ளாத வயதினிலுந் தமிழரெனும் பெரும்படையைத்
தாங்கி வழி நடத்தும் தந்தையே நீ வாழ்க!
தளர்ந்தது உடல் என்றாலும் தளராத ஆண்மை கொண்ட
தானைத் தலைவனே தவக்குன்றே நீ வாழ்க!
விழுந்தது நரையென்றாலும் வீழாமல்(த்) தமிழினத்தை
விதந்து காப்பாற்றும் வீரனே நீ வாழ்க!

படிப்பகம்

padippakam



பழுத்தவை சுவைத்தல் போலப் பாரிலுள்ள எல்லோர்க்கும்
இனித்திடும் தலைவா என்றும் இன்பமே பொலிய வாழ்க!
நிலைத்திடா வாழ்வை எங்கள் நிலை பெறு தமிழுக்காக
நிலத்திலே அர்ப்பணித்து நீள்புகழ் கொண்டோய் வாழ்க!
அலைந்திடும் உள்ளத்தோடு அழிவுற்ற தமிழர் தம்மை
ஆக்கியே ஒன்றாய்நிற்கும் அன்பனே இனிதே வாழ்க!
தலைவனே வாழ்க! எங்கள் தந்தையே என்றும் வாழ்க!
நிலைபெறு தமிழைப்போலே நீயென்றும் வாழ்க! வாழ்க!

மேற்படி கவிதை தந்தை செல்வாவின் 79 வது பிறந்த தினமான 31.3.76 அன்று அவருடைய இல்லமான 16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ், கொழும்பு – 3, இலங்கை என்ற முகவரியில் நடைபெற்ற விழாவில் வாசிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## சோமசுந்தரப் புலவர், மறைமலை அடிகள் விழா

தங்கத் தாத்தாவிற்கும் தனித்தமிழ்த் தந்தை
மங்காத் தமிழ் மறவன் மறைமலை அடிகளுக்கும்
எங்கள் தமிழ்ச் சங்கம் எடுத்த நல் விழாவினிலே
பொங்கு கவி படிக்கப் போகுமுன்னர் முதல் வணக்கம்.

தங்கத் தமிழ் மகளின் தன்மானம் காப்பதற்காய்
எங்கள் உயிர் தனையும் எமனுக்கு அளிப்போம் என்று
தங்கள் சிந்தை தனிலே தன்னம்பிக்கை கொண்டுற்ற
சிங்க ஏறென்ன விருக்கும் சீர்மிகு **காளையரே.**

சேரன் விற்கொடி செவ்வெரிக்கண் புருவம்
கூரம்பான விழி குலவழுதி கயற்கொடி
வீரன் இராவணனின் வீணை மொழியாமே
யாரும் கேட்டிடீவீர் யாது புலிக்கொடி என...

பாரில்(த்) தமிழுக்காய்ப் பாவையர் யாம்பொங்கும்
வீரம்நிறை காட்சி விரைவிற் கண்டிடுவீர்
பாரும் புலிக் கொடியைப் பாரினில் அன்றைக்கென்று
மாறன் விழிக் கணையால் வழங்கிநிற்கும் **மங்கையரே.**

வங்க மக்களுக்கு வாய்த்தார் ஒரு தாத்தா
    வளமான தனிநாடாய் வங்கம் மிளிர்ந்ததுவே
தங்க மக்களுக்குத் தங்கமான இத்தாத்தா
    தமிழீழம் காண்பதற்குத் தானின்னும் தாமதமேன்
உங்கள் மனங்களிலே உரமாக இதைக் கேட்பீர்
    உள்ளிப் பார்த்திடுவீர் உறுதியைப் பெற்றிடுவீர்
பொங்கி எழுந்திடுவீர் பொறுமை எதற்கு மனப்
    போது மலர வேண்டும் பொங்குதய சூரியனில்.

சாதிக் கொடுமை தன்னைச் சாடினார் அன்றைக்கே
    சாதிக்கு என்ன செய்தோம் தாத்தா சொல் மதித்தோமா
பாதி வாழ்க்கையிலே பைய வந்த சாதிக்குப்
    பாடை கட்ட இன்னும் பாரிலே தயக்க மேனோ
நாதியற்ற மக்காள் நன்றே சிந்தியுங்கள்
    நமக்குத் தமிழீழம் நன்றே வேண்டும் என்றால்
ஆதி இருந்த நிலை அருந்தமிழுக்கு ஆகவேண்டில்
    இன்றே சாதி தன்னை இங்கிருந்து அகற்றிடுவீர்.

படிப்பகம்

padippakam



அன்பே உருவான அழகுகவி எம் தாத்தா
ஆழ்ந்த பொருள் செறிந்த அழகுதமிழ்க் கவி யாத்தார்
நன்றே செய்திட்டார் நம் சிறுவர் மனம் மகிழ
நங்கை பவளக் கொடி நம்பி பொரிமாத் தோண்டி
என்றே பாடிவைத்தார் எம் சிறுவர் ஏக்கமுறக்
கன்னல் மொழிதனிலே கத்தரி வெருளியையும்
பின்னர் பாடி வைத்தார் பிள்ளைகள் மகிழ்வு எய்த
பிறந்த பயன் பெற்றார் பிழையில் பயன் எய்தி.

தமிழை ஒரு கண்ணாய்ச் சைவத்தை மறு கண்ணாய்த்
தாங்கி வாழ்ந்தவரே தங்கமான எம் தாத்தா
அமிழ்தை உண்டதனால் அவருடம்பு அழியவில்லை
அழியா ஓவியமாய் அடைந்தார் புகழுடம்பு
தமிழர் மனங்களிலே தங்கியே வாழ்ந்துவரும்
தாத்தா சொல்லேற்றுத் தகர்ப்போம் பகைவர்களை
அமிழ்தாம் தமிழ் மகளை அரியணையில் ஏறவைப்போம்
அடைவோம் தமிழீழம் அழித்தே பகைவர்களை.

மூவர் அரசாண்ட முத்தமிழ்க் கொடி பறந்த
முக்கனிச் சாறென்ன முப்பால் உரைத்திட்ட
தேவர் உறைபதியில்(த்) தெவிட்டாத தமிழ்ப் பதியில்(த்)
தென்னவன் வளர்த்திட்ட தெள்ளுதமிழ்ப்பதியில்
காவலர் துணையுடனே கட்டவிழ்த்த இந்தியினைக்
கடிதே எதிர்த்துடனே கண்டவர் வெற்றியினைக்
காவலர் தாமேயாகிக் கன்னித் தமிழ் மகளைக்
கற்புடன் காத்தவராம் காதல்(த்) தமிழ்க் கிழவன்.

எல்லாந் தமிழாக எதிலும் தமிழாக
என்றும் தமிழாக எதிலும் தமிழாக
வல்லான் அவன் அன்று வாழ்ந்தான் தமிழ் காத்து
வாழ்வை அர்ப்பணித்தான் வல்ல தமிழ் காக்க
நல்லான் நானிலத்தில் நவின்றான் நன்மொழிகள்
நாளும் புகழ் சேர்த்தான் நன்றே தமிழ் வளர்த்தான்
இல்லான் இன்றிங்கு இருந்தாலும் விழாக்களிலே
இன்னும் இருக்கின்றான் இனிய நற்றமிழாக.

படிப்பகம்

padippakam



ஆதி இருந்த தமிழ் அழியாமல் வாழ வேண்டும்
அவளை வேறெதுவும் அணுகாமல் ஆக்க வேண்டும்
பாதியில் இங்கெழுந்த பலவகை மொழிகள் எல்லாம்
பாவை எம்தமிழைப் பாரிலே அழிக்க விடோம்
நீதி அதில் உண்டு நியாயங்கள் எம் பக்கம் உண்டு
நீசர் எதிர்ப்பதனை நின்றெதிர்க்க வேண்டும் இங்கே
காதல்(த்) தமிழ் வாழக் கற்புடனே அவள் வாழக்
கடமை புரிவோமென்ற கன்னித் தமிழ் மறவன்.

அன்னவர் தமக்கு இங்கு அரும் விழா எடுத்தோம் என்று
எண்ணிமட்டும் இருப்பதனால் ஏதும் நன்மை இல்லை
முன்னவர் காட்டிநின்ற முன்னேற்ற வழியை நாமும்
முழுமையாகக் கடைப் பிடித்து முன்னேற்றம் அடையின்
என்னதான் செய்யமுடியும் எத்தர்கள் ஆட்சி எம்மை
எழுந்திடும் எங்கள்கொடி எழில் ஞாயிறென்ன
கன்னலிற் சுவைமேவு கன்னித் தமிழீழம்
காண்போம் இக்கணமே கடிதே எழுந்திடுவீர்.

எழுந்து மட்டும் பயனில்லை எமக்குள் ஒற்றுமையில்லை
ஏன்தானோ வாழுகின்றோம் ஏமாந்த தமிழினமாய்
விழுந்து மண்கல்வியும் வீணர்கள் சிலரிங்கு
விற்றிடுவார் தம்மானம் விற்றே பசி ஆற்றிடுவார்
எழும் துயரம் எமக்கின்று எட்டப்பர் தம்மாலே
ஏனவரை எமனுலகம் எட்ட வைத்தாற் பிழை என்ன
எழுந்திடுவீர் எத்தர்களாம் எட்டப்பர் குருதியிலே
ஏற்றி வைத்திடுவீர் எம்தமிழர் மறக்கொடியை.

முற்போக்கு என்றிடுவீர் முன்னேற்றம் தடை செய்வீர்
முழுப்பூசினிக் காயை முன்னுள சோற்றில் மறைக்க
எப்போக்கை என்றாலும் எட்டப்பர் எளிதிற் கொள்வார்
எதுதான் நடந்தாலும் எவர் வாழ்வு கேடு உற்றாலும்
எப்போதும் உணவிற்காய் எழில் மனையாள் உடல்தனையும்
விற்பதனைக் கூட இவர் விழுமிதாய்க் கொண்டிடுவார்
எப்போக்கும் இவர் போக்கு எதுவும் சந்தர்ப்ப வாதம்
எட்டப்பர் இவர் என்றும் எம்மினின்று அழியவேண்டும்.

படிப்பகம்

padippakam



கன்னித் தமிழ் மீது காளை யான் கொண்ட
கள்ளூறு காதலாலே கண்டபடி ஏதேனும்
என்னை அறியாமல் எடுத்திங்கு இயம்பி நிற்பின்
என்னைப் பொறுத்திங்கு ஏற்றவை ஏற்றிடுவீர்
முன்னை அரசாண்டு முதன்மை பெற்றிங்கு
முழுநிலமும் தன்னிலமாய் முதன்மை கண்ட தமிழ்
பின்னை எம் பிழையாற் பின்னடைதல் நீதியாமோ
பின்னும் உறக்கம் ஏனோ பிழையினியும் செய்தல் நன்றோ.

சோமசுந்தரப் புலவருக்கும் சோர்வில் மறைமலை யடிகளுக்கும்
ஆகவோர் பெரு விழாவதனை அன்புடனெடுத்தார் தமிழரிங்கு
நாமங்கொண்டவர் புலவரென நற்பெயர் கொண்டவர் பலருமிங்கு
நன்றேயிருக்க அவர் விடுத்து நம்பர் என்றனை ஏனழைத்தார்
ஓமென்றவர்க்கு விடையளித்து ஒண் தமிழ்க் கவிதை அது யாத்து
வாவென்றழைக்க வந்திக்கு வடித்தவை தம்மை வழங்கிவிட்டேன்
ஓமென்றதனை வரவேற்று ஒண்தரங்தட்டிக் களிப்புற்ற
ஒண்தமிழ்மறவீர் அனைவருக்கும் ஒள்ளிய செந்தமிழ் இன்வணக்கம்.

இக் கவிதை 07.07.1976 புதன்கிழமை இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டுபெத்தை வளாகத் தமிழ்ச் சங்கம் நடாத்திய சோமசுந்தரப் புலவருக்கும் மறைமலையடிகளுக்கும் எடுக்கப் பெற்ற நூற்றாண்டு விழாவின் போது வாசிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## மறைமலை அடிகள் பிறந்திலரேல் ...

மறைமலை அடிகள் பிறந்திலரேல்
மறைவாகத் தமிழுக்கு இங்கு ஏது விழா
கறையென ஒன்றும் கனித் தமிழைக்
கலக்காமற் காத்த தமிழ்(த்) தலைவன்
குறைபல கொண்ட தமிழருக்காய்க்
குவலயந்தன்னில்(த்) தொண்டாற்றி
நிறைபல கொண்டோன் பிறந்திலனேல்
நிறைவு இன்றேது தமிழருக்கு.

மறைமலை அடிகளுக்கு இன்று விழா
மறையாத தமிழினுக்குப் பொங்கு விழா
குறைபல களைவதற்கு என்று விழா
குற்றமுள்ள மனம் குத்தும் விழா
மறைமலை அடிகளுக்கு என்று விழா
மறைவாகத் தமிழனுக்கு எழுச்சி விழா
நிறைபல இழந்தின்று நெட்டுயிர்க்கும்
நிலவுத் தமிழ் மகளின் மாண்பு விழா.

சிறைபல கண்டவர் இங்கு உள்ளார்
சிந்தும் முத்துக்கள் பொறுக்கவுள்ளோம்
முறைமுறையாகச் சிறை செல்வோம்
முன்னேற்றம் இது முறைகேடில்லைக்
கறைகொள் மொழிகள் கனிதமிழைக்
கட்டி ஆள்வது முறையுயாமோ
பறைமுழங்கட்டும் போர்பறை முழங்கட்டும்
பகைவரின் இறுதிப் பறை முழங்கட்டும்.

ஆகாஷ வாணி போன்று அருந்தமிழ் அளிக்கும்
அதிகார வெறிகொள் இந்தியை எதிர்த்தோன்
ஆகாரம் ஒன்றுக்காய் அலைந்த தமிழரை
அன்றே எதிர்த்தவன் அவன்வழி எம்வழி
லக்சல சலுசல ஜாதிக சம்பத
எம்தமிழ் அளிக்கும் எத்தரின் சிங்களம்
இக்கதி எமக்கேன் இன்தமிழ் எம்மொழி
இன்றே ஒழிப்பீர் இன்தமிழ்ப் பகைவரை.

படிப்பகம்

padippakam



கன்னித் தமிழணங்கு கற்புடன் வாழ வேண்டும்
கண்டபிற மொழிகளையுங் கலத்தலாகாது
என்றும் தமிழிங்கு ஏற்றமுடன் வாழ வேண்டும்
எங்கும் எப்போதும் எல்லாந் தமிழாக வேண்டும்
முன்பிங்கு இருந்தாண்ட முத்தமிழே ஆளவேண்டும்
முயன்றால் யாரேனும் முதுதமிழை அழிப்பதற்கு
முன்னின்று எதிர்த்திடுவீர் முடியும்மட்டும் என்ற
முன்னோன் மறைமலை அடிகளுக்கு இன்று விழா.

விழா எடுத்து விடுவதால் விடிவு எமக்கு ஏற்படாது
வீரத்தைப் பேசுவதால் வீரராய் ஆகமாட்டோம்
விழா வுடைத் தலைவனின் வீரச் செயல்களை நாம்
விதந்து பாராட்டி விழுப்பம் அடையமாட்டோம்
விழாக்களிலே கேட்கின்ற வீர நெறிகள் தம்மை
வீழ்நாள் படாமல் விதந்து ஆற்றி நிற்பின்
விழாக்கள் வியனுலகில் வீரருக்கு அதுவன்றோ
வீர மரணம் ஒன்றே விழுமிய செல்வம் அன்றோ.

விழாக்கள் எடுப்பதற்கும் விழுமிய தகுதி வேண்டும்
வீரம் ஒன்றும் அறியா வீணர்கள் கூட இன்று
விழாக்கள் எடுக்கின்றார் விற்கின்றார் மானத்தை
விற்றே பசியாற்றி வீணறிக்கை எழுதிடுவார்
அழைப்பார் அமைச்சர்களை அலங்கார வளைவுவைத்து
அன்பு மனையாளையும் அளிப்பார் பதவி பெற
உலாக்கள் நடக்கையிலே உயர்பட்டம் பெறவென்று
விரிப்பார் பாவாடை விரைந்தணைப்பார் பள்ளியிலே.

பள்ளியில் அணைத்தென்ன பாவாடை விரித்தென்ன
பைந்தமிழன் எனக்கடிமை பரிதவிக்க அடிப்போம் என்று
உள்ளி அன்று அடித்தார்கள் உயர் பருத்தித் துறை தனிலே
ஊளையிட்டார் பலரும் அன்று உன்மத்தர் எதைக் கண்டார்
தள்ளி வைத்தீர் எமைநீரும் தமிழர் என்ற காரணத்தால்
தான் என்று கூறுகின்றார் தமிழர் முன்பு சொன்னவற்றை
எள்ளிநகை ஆடுகின்ற எட்டப்பர் கூட்டத்தை
எமன் உலகிற்கு அனுப்பிவிடும் எழில் பூக்கும் தமிழீழம்.

படிப்பகம்

padippakam



முற்போக்கு என்றிடுவார் மூடர் இங்கு ஏதறிவார்
முந்தானைச் சேலையிலே முடங்குவதே இவர் போக்கு
எப்போக்கும் கைக் கொள்வார் என்றும் தன் நலனுக்காய்
எவர் வாழ்வை என்றாலும் எட்டப்பர் அழித்தடுவார்
முப்போதும் உணவருந்த முதற்கடவுளாம் தாயை
முன்னின்று கொல்வதற்கும் மூடர்கள் துணிந்திடுவார்
எப்போக்கும் இவர்போக்கு எதுவும் சந்தர்ப்ப வாதம்
எட்டப்பர் இவர் என்றும் எம்மினின்றும் அழிய வேண்டும்.

தமிழிலே தூய்மை வேண்டும் தனித்தமிழ்த் தலைவன் கூற்று
தமிழரில்(த்) தூய்மை வேண்டும் தமிழரில் தலைவன் முதலாய்
தமிழரின் தொண்டன் ஈறாய்த் தூய்மையே வேண்டும் அதுவே
தமிழ்மகள் அரசு காணும் தனிவழி என்பேன் ஏற்பீர்.

தலைவரை மட்டும் நம்பித் தமிழினம் உறங்க வேண்டாம்
தலைவரும் எம்மைப் போலே தரணிவாழ் மனிதர் தானே
சிலையினை மட்டும் வைத்துச் சிலைகளாய் வாழவேண்டாம்
தலைவரோடு ஒத்து நின்று தமிழ்ப் போரிற் பங்கு கொள்வீர்.

நோகாமற் பிள்ளைப் பெற முடியாது
நொந்துதான் எல்லோரும் பெற்றுள்ளார்கள்
சாகாமற் பூமியிலே இருந்தவர் யார்
சாவதுமோ ஒருமுறை தான் ஆதலாலே
சாகாத தமிழுக்காய் உயிரை விடுவீர்
சளைக்காமல்(த்) தமிழ்ப் போரிற் பங்கெடுப்பீர்
ஆகாத தமிழர் உடல் வேக வைப்பீர்
அன்பாலே ஒன்றாவீர் அழகுதய சூரியனில்.

முத்தெனவே கவிதை மழை முத்தெனவே பொழிய வல்ல
எத்தனையோ கவிஞர்கள் எம் ஈழ நாட்டில் உள்ளார்
அத்தனையும் நோக்காமல் அடியேனை இங்கழைத்த
எழுத்தாளர் பேரவைக்கும் எழில்வங்கித் தமிழருக்கும்
இத்துணையும் என்கவிதை இன்முகங் காட்டி இங்கு
இதயத்திற் பதித்திட்ட இனிய தமிழ் அன்பருக்கும்
வித்தைகளின் தேவியாகி விரும்பு கவி யாக்க வரம்
விரைந்தளிக்கும் வாணிக்கும் விளம்பிடுவேன் என் நன்றி.

இக் கவிதை 17.07.1976 சனிக்கிழமை கொழும்பு வெள்ளவத்தை சரசுவதி மண்டபத்திலே இலங்கை வங்கி, எழுத்தாளர் பேரவையினர் நடாத்திய மறைமலையடிகளின் நூற்றாண்டு விழாவின் போது வாசிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



# தன் மானத் தமிழினமே
# தலை நிமிர்ந்து நில்லாயோ ?

தன்மானத் தமிழினமே தலை நிமிர்ந்து நில்லாயோ
தந்துள்ள இத்தலைப்பில்(த்) தயங்குமொரு முரண்பாடு
என்னவென் றறிந்திடவே எல்லோரும் விழைந்திடுவீர்
என்னவென் றியம்பிடுவேன் எல்லோரும் அறிந்திடவே.

தலை நிமிர்ந்து நின்றிடுவான் தன்மானம் மிக்குடையோன்
நிலை அவ்வாறு உள்ளவனை நிமிரடா என்ன மீண்டும்
நிலை ஒன்றும் ஏற்படாது நிலைமையிது புதுமை யல்ல
தலை கவிழ்ந்து நிற்கின்றாய் தன்மானம் உனக் கேது?

தமிழினமே இதை உணர்வாய் தலைநிமிர்ந்து நின்றிடுவாய்
இனியாதல் என்றுகூற ஏன்தானோ மனம் அஞ்சி(த்)
தமிழினத்தில் இன்றில்லாத் தன்மானந் தனை வலிந்து
இனிதழுத்திச் சொல்லுகின்றார் இருக்கட்டாம் உமைநிமிர்ந்து.

என்னவென்று நிமிர்ந் திருப்பாய் ஏதுனக்குத் தன்மானம்?
முன்னன்று மூவேந்தர் மூவரசு வைத் தாண்ட
தொன்மையுறு நாளதனில்(த்) தொகையுருவம் தன்மானம்
இன்றந்தத் தன்மானம் எள்ளளவும் உனக் குண்டா?

மந்திரிமார் வந்தவேளை வாழையோடு கமுகு நாட்டி
பந்தரிலே விளக்கேற்றிப் பாவாடை விரித் தணைத்து
முந்தியவர் முன்னின்று முப்பத் திரண்டும் காட்டி
அந்தியிலே அவர்மகிழ ஆரணங்கும் கொடுத் துதவும்...

சிந்தையிலேகூட மானம் சிறிதளவும் இல்லாமல்
மந்தைபோலே தாவுகின்ற மனமுடைய என் தமிழா
இன்றுனக்குத் தன்மானம் இருக்கிறதா எண்ணிப்பார்
அன்றிருந்த தமிழ்மக்கள் அருங்குணங்கள் உனக்குண்டா?

இன்றுனக்காய் உயிர்நீத்த இளைஞன் சிவகுமாரன்
மண்பிறந்த நாள் எனவே மக்களை நீ பள்ளிக்கு
என்றனுப்ப வேண்டா மென்று இயல்பாக மொழிந்திட்டால்
நன்றிதுவோ அவர்சிறுவர் நன்றோ அவர்க்கு அரசியலே?

படிப்பகம்

padippakam



என்றலைவாய் எள்ளளவும் எவருக்கும் தீமைசெய்யா
நல்லுரிமைப் போர்தன்னை நாச் சிறிதும் கூசாமல்
நின்றிறுப்பாய் அரசியல் என்று நீ பின்னர் ஏது செய்தாய்
என்றதையும் எண்ணிப்பார் எளிதே உன் நிலை உணர்வாய்.

அண்மையிலே மாநாடு அணிசேரா மகாநாடு
ஒன்றிங்கே நடந்ததனை ஓர்கணம் நீ எண்ணிப்பார்
என்றும் அரை உணவோடு எமக்காகச் சிறைவாடும்
எம்மிளைஞர் சிறைகளிலே இருந்திட்டார் விரதமொடு.

அன்றந்த வேளையிலே அவருக்காக வெளியிருந்த
தன்மானத் தமிழ்மறவா தயவுடனே ஏது செய்தாய்
அன்றிங்கு வந்திட்ட அயன்நாட்டுத் தலைவர்களை
சென்றங்கு சிங்களவர் சிரந்தாழ்த்தி வரவேற்கும்...

மன்றமதில் பாண்ட் இசைக்க மங்கையரை நீயனுப்பி
நின்றங்கு மகிழ்ந்திட்டாய் நினைத்துப்பார் இதுவென்ன
இன்றிங்கு யாமடிமை எனவே இது அரசியல் அன்று
என்றதுவே இதன் பொருளா எதையிங்கு உரைத்திடுவேன்!

கூலிக்கு மாரடிப்பாய் குள்ளநரி மன முடையாய்
நீலிக்கண்ணீர் வடிப்பாய் நீயோ தன் மான முள்ளாய்
வேலிக்குச் சண்டை செய்வாய் வெட்கமின்றி நம்பருடன்
நாளுக்கு நாளெங்கள் நாட்டின் எல்லை தன்னை...

காடைத்தனம் மிக்குள கயவர் சிங்களர் என்றும்
சாடையாக அல்லாமல்(த்) தள்ளி நன்றாய் வைக்கையிலே
பாடையும் கட்டிவைத்துப் பைந்தமிழ் அணங்கைத் தேடிப்
பீடைகொண்டு அலைகையிலே பித்தருன்னை உதைக்கையிலே...

கல்வியைத் தரப்படுத்திக் கயவருன்னை அழிக்கையிலே
எல்லையுள் நீ சமைக்கும் எழில்மிகு விழாக்களிலே
புல்லராம் காவல் நாய்கள் புகுந் துன்னை அழிக்கையிலே
சொல்லடா ஏதுரிமை சோம்பேறி நீ அடிமை!

padippakam



என்றுன்னை அழைக்கையிலே ஏதுமே செய்யாமல்(த்)
தன்மானம் சிறிதுமின்றித் தலைகுனிந்த தமிழா கேள்
உன்மானங் காப்பாற்ற உன்னால் இயலா விடினும் ஏன்
தன்மானம் மிக்குடைய தமிழரையே எதிர்க்கின்றாய்?

காட்டிநீ கொடுக் கின்றாய் கயமையே உன் உருவம்
வாட்டி யுன்னை வதைக்கின்ற வஞ்சகரின் ஆட்சிக்கு
ஆட்டு கின்றாய் உன் வாலை அடிமைவாழ்வு இனிப் போதும்
ஈட்டி நிற்பாய் உன் அரசை ஈழத்தமிழ் மண் மீதில்!

இனியாதல் நிமிர்ந் திருப்பாய் இன்பத் தமிழ் மகளுக்குக்
குனியாத வாழ் வமைப்பாய் குவலயத்தில் நீ இழந்த
தனியான உன் அரசைத் தாமதியாது இயற்றிடுவாய்
கனிவான தமிழ்பேசிக் காலமெல்லாம் வாழ்ந்திடுவாய்!

தன்மானம் மிக்குடையோன் தமிழன் என்று உலகுள்ள
எந்நாடும் உனைப் போற்ற எழில் பூத்த வாழ் வமைப்பாய்
இந்நாடு உன்னாடு இனிய தமிழ்ப் பொன்னாடு
எந்நாளும் இது உனக்கு என்றவகை செய்திடுவாய்!

இக் கவிதை இலங்கைப் பல்கலைக் கழகக் கட்டுப்பெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் கலைவழாவின் போதான கவியரங்கத்திலே 06.03.1977 படிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## தீதும் நன்றும் பிறர்தர வாரா

யாதும் ஊரே யாவரும் கேளிர்
யாது உம் ஊரே யாவர் உம் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா
தீதும் நன்றும் பிறர்தர எமக்குச்...

சீரும் சிறப்பும் திருவும் வாரா
யாரும் யார்க்கும் ஞாலத்தில் என்றும்
சீரில் அடிமை ஆகுதல் தீதே
சீரும் சிறப்பும் திருவும் பெற்றே...

பாரில் விளங்குதல் பயக்கும் நன்மை
யாரும் இவற்றை உணருதல் நன்றே
யாரும் தந்திட நமக்கெது வந்திடும்
நன்மையும் தீமையும் நாமே ஆக்குவோம்.

இரைப்பை பசித்தவர் இருந்தனம் இங்கே
அகப்பை பிடித்தவர் அந்நியர் அங்கே
கருப்பை சாத்திடக் கயவரும் உணர்த்துவர்
கலப்பை பிடித்தவர் கைகளை உயர்த்திடார்.

விருப்பைக் கொண்டிலர் வீணர் தம் முயற்சியில்
வெறுப்பைக் கொண்டனர் வியக்கும் எம்முயர்ச்சியில்
கறுப்பைக் காட்டியும் காதகர் திருந்திலர்
சிவப்பைக் காட்டியும் சீரிலர் ஏற்றிலர்.

நெருப்பை வைத்தனர் நீசரும் உதைத்தனர்
மதிப்பை இழந்தனர் மானத்தை இழந்தனர்
கருப்பை சுமந்தவள் கற்பினை அழித்தல் போல்
பொறுப்பை இழந்தனர் போர்த்தவர் சீருடை.

படிப்பகம்

padippakam



பெற்றனம் அன்று சுதந்திரம் இங்கே
பேச்சினில் மட்டுமே பெற்றதச் சுதந்திரம்
உற்றதா நன்மைகள் உலகிலே எமக்கும்
உயர்ந்ததா நன்மைகள் உண்மையை உள்ளிடில்.

மற்றவர் பிச்சையில் மந்தையாய் வாழ்ந்தனம்
மண்ணுள நாடெலாம் மடிப்பிச்சை ஏற்றனம்
உற்றதா வாழ்வெமக்கு உயர்ந்ததா எம்நிலை
உயர்வதும் தாழ்வதும் உள்ளதெம் கைகளில்.

ஏட்டுச் சுரைக்காய் எழும்பசிக் குதவுமோ
எழுதியே மகிழ்ந்தனம் ஏட்டிலே சுதந்திரம்
நாட்டு நிலைதனை நற்பொருளா தாரத்தில்
நன்னிலைக் குயர்த்தினால் நமக்கது சுதந்திரம்.

நாட்டை உயர்த்திட நாம் கடன் பெறுவதும்
நன்றது வாகுமோ நம்நிலை உயருமோ
காட்டி எம்பலம் கடினமா யுழைத்திடில்
ஈட்டும் உண்மையில் எம்மருஞ் சுதந்திரம்.

ஏர்கை ஏந்தியவர் எம்மிற் குறைந்தோர் என்று
எண்ணுவோர் இருக்கையிலே எப்படி உயருவோம்
கார்குழல் மங்கையர் காதலின் இளையவர்
யாரெனின் என்ன நற்றொழில் இயற்றுவோம்.

பார்தனிற் சாதியைப் பாடையிற் கட்டுவோம்
பண்ணுவோம் நன்மைகள் பல்தொழில் இயற்றியே
போர்கை தாங்கிப் பின் புறமுது கிடுதலின்
வீரராய் எதிர்த்து விழுந்திடல் நன்றே.

படிப்பகம்

padippakam



எதனையும் செய்குவோம் எமக்கது தெரிந்திடில்
எதனையும் செய்குவோம் எமக்கது நன்றெனின்
எதனையும் செய்குவோம் எம்மவர் ஒன்றாய்
எதனையும் செய்குவோம் இழுக்குள தவிர்த்து.

எதனையும் செய்குவோம் எம்நிலை உயர்ந்திட
எதனையும் செய்குவோம் எல்லோரும் உயர்ந்திட
எதனையும் செய்குவோம் எம்சுதந்திரத் திற்காய்
எதனையும் செய்குவோம் எம் தமிழ் வாழ்ந்திட...

என்றுமே உறுதியை எல்லோரும் கொண்டிடில்
நன்மையே விளைந்திடும் நானிலம் உயர்ந்திடும்
என்றுமே வாழ்குவோம் எழுகதிர் உளவரை
என்றுமே வாழ்குவோம் எம் அணி வென்றிடும்.

தாரணியில் எங்குதான் தமிழர்கள் வாழினும்
தாயவள் தமிழே தமிழர் சகோதரரே
ஓரணியில் நின்றென்றும் ஒற்றுமை பேணி
ஒளிர்பெற வாழ்வோம் என் தமிழ் நாடே.

யாரிங் குளரே யாமொன் றாயிடில்
யாவரெம் எதிரியே யாமொருவ ரெனில்
யாரிங் கெமையே நலங்கெட வெதிர்ப்பர்
நம்தமிழ் நாடே நல்லொளி வீடே.

சாதியை அகற்று சந்ததி வாழும்
சீதனம் நீக்கு சிறப்பெலாம் ஓங்கும்
பாதியே ஆணும் பாதியே பெண்ணும்
பக்குவம் உணரில் இக்கணம் உயர்வோம்!

படிப்பகம்

padippakam



பதினாலாவது கவிதை வரையிலேயுள்ளவை 25.11.1977 காலை 8:30 றகும் 9:00 றகும் இடையிலே இலங்கை வானொலியிலே ஒலிபரப்பப்பட்டது. ஐந்தாம் ஆறாம் கவிதைகள் தணிக்கை செய்யப்பட்டன. இக்கவியரங்கத்திற்கு திரு. வே. இளங்கோ அவர்கள் தலைமை வகித்தார். திரு. மாவை நித்தியானந்தன் அவர்களும் பங்குபற்றினார். இதன்போது முதற்கவியாகப் பின்வரும் கவிதை வாசிக்கப் பெற்றது.

*வானொலி அருகிலே வளர்மதி நிறைநாள்*
*பாவொலி கேட்டுறு பண்புடை நேயரே*
*தேனொலி தமிழிலே தெவிட்டாத கவிசொல்*
*மாணொலி தலைவ! மற்றிங்குற்றுத்*
*தானொலி வழங்கத் தரித்துள கவிஞ!*
*கானொலி கவினொலி காருறும் இடியொலி*
*வானொலி உளதெலாம் தானொலி தமிழே*
*யானொலி வணக்கம் நன்றதாய் ஏற்பீர்!*

---

இக் கவிதை தமிழ்நாடு சென்னை மாமல்லபுரம் வி.ஜி.பி. தங்கக் கடற்கரையிலே பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன் அவர்கள் தலைமையிலே 18.12.1977 ஞாயிறு மாலை நடைபெற்ற கவியரங்கத்திலே வாசிக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



# வேறு

படிப்பகம்

padippakam



# கனவுப் பூக்கள் நனவில் மலரட்டும்

கள்ளமிலா வுள்ளத்துதித்த கனவுப்பூக்கள் மலரும்நாள்
வெள்ளைக் கமலத்துறைவாணி விரும்பியேற்கு மிம்மலரை
அள்ளிச்சூடி மகிழ்ந்திடவே ஆசையுண்டு ஆனாலு மென்
பள்ளிவேலை பலவுண்டு பலனோவில்லைப் பங்குகொள்ள.

கலைவாணி அருளிடுவாள் கவிதைமழை பொழிந்திடுவீர்
மலைபோலே மருளுண்டு மண்ணுலகி லெம்மிடையே
நிலையாக அது நீங்க நீர் பொழிவீர் தமிழ்மகளும்
கலையோடு வாழவேண்டும் கவினுலக முள்ளமட்டும்.

புலவோரும் புரவலரும் போற்றி வளர்த்த தமிழ்மகளும்
புலனற்ற எம்மவராற் புகழிழந்து விட்டாள் காண்
நலனெல்லா மவள்பெற்று நாடரண் கொடி குடையோடு
நிலமதனிலே அரசோச்ச நீர் பொழிவர் கவிதை மழை.

கனவில் அரும்பியுள்ள கனவுப் பூக்கள்
நனவில் மலரட்டும் நறுமணம் வீசட்டும்
கனவில் வாழ்ந்துவரும் கன்னித்தமிழுலகம்
இனியும் உறங்கிடாமல் ஈழந் தமிழாகட்டும்!

மேற்படி கவிதை தமிழீழம் கோப்பாயைச் சேர்ந்தவரும், முகமே அறியாது தமிழ் மொழியினூடே அகமே அறிந்தவருமான சௌமினி, சிவம் ஆகியோரின் புதுக்கவிதைத் தொகுதியான கனவுப்பூக்கள் வெளியீட்டு விழாவுக்கு 09.03.1975 இலே அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டது.

படிப்பகம்

padippakam



## மங்கை சுடர் வாழ்க!

சுடர்மங்கை கரந் தவழ்ந்தாள்
சுவை பலவும் எமக்களித்தாள்
இடர்மிக்க இந் நாளில்
இதஞ் சேர்க்க மலர்ந்துள்ளாள்
சுடர்தொடின் சுட்டு விடும்
சுதந்திரன் பண்ணை பூத்த
மடக்கொடி இவள் தொட்டால்
மறைந்து விடும் அறியாமை.

காதற் சிறுகதைகள் கட்டுரைகள் கவிதைகள்
மாதர் தமக்கேற்ற மணியான கருத்துக்கள்
சாதல் ஒருமுறையே சமைப்போம் தமிழ்நாடு
காதல்(த்) தமிழ்வாழக் காண்போம் களமென்ற...

சிங்கத் தமிழருக்குச் சீர்மிக்க கருத்துக்கள்
பொங்கி வழிகின்ற பூரண மங்கையாகச்
சங்கம் வளர்த்ததமிழ் தரணியிலே வாழுமட்டும்
மங்காப் புகழுடனே மங்கை சுடர் வாழ்க!

26.04.1975 சுடர் இதழின் ஆசிரியருக்கு எழுதப்பட்ட மடல். தமிழரசுக்கட்சியின் ஏடான சுதந்திரன் நிறுவனத்திலே அன்றைய தமிழ் இளைஞர் பேரவையினரிற் சிலராலே சுடர் என்னும் திங்களேடு உருவாக்கப்பட்டது.

படிப்பகம்

padippakam



## சுதந்திரன் சுடர் வாழ்க!

பழிதனை என்றும் எமக் கென்று
பண்ணிடும் ஆட்சி தனை இன்று
இழிவுற நடத்தும் இம் மன்று
இழைத்திடும் இன்னல் களாலின்று...

அழிவுறுந் தமிழர் நிலை கண்டு
அனுதினம் அதற்காய் வழி கொண்டு
இழிநிலை தன்னைப் புறங் கண்டு
இதமுறு நிலை தனை எதிர் கொண்டு...

அலையுறு தமிழர் தமக் கின்று
ஆதாரம் என்றால் எது வென்று
நிலையுற நீண்டு நினை வொன்று
நின்றது மனத்தில் இது வென்று.

கவினுறு தமிழர் கவினோடு
களம்பல கண்ட புகழோடு
சிலைபெறு நெஞ்சத் துணிவோடு
சீரிய பண்பின் நிறைவோடு...

வழிவழி வந்த தன் மானமோடு
வாய்ந்த நல்லரிய அறிவோடு
பழியெனின் அஞ்சும் பாங்கோடு
பாரிலே முன்பெறு பழமையோடு...

என்றுமே தமிழன் புவி வாழ
ஏற்றது ஒன்றே தமிழீழம்
என்றுமே எண்ணி நாம் வாழ
ஏற்றுவோம் கொடியைத் தமிழ் வாழ.

படிப்பகம்

padippakam



இந்த நிலை தனைத் தமிழ் நெஞ்சு
ஏற்றுத் தம் எதிரிகள் படை அஞ்சு
கின்ற வகையிலே சிறை கொஞ்சக்
கிளர்ந்தெழு கின்றது இள நெஞ்சு.

இத்தனை தமக்கும் இன்று இங்கு
இருப்பதோ இதழ்கள் இரண் டொன்று
எத்தனை இடர்கள் எதிர் நின்றும்
எமக்கென உள்ளவை இவை இரண்டும்.

சுதந்திரன் சுடர் என்னும் இவை இரண்டும்
சூழ்கலி உலகிலே முதல் என்றும்
விதந்தரும் இன்னல்கள் பல கண்டும்
வீர நல் எழுத்தைத் தாம் கொண்டு...

தனக்கென வாழாச் சுடர் வாழ்க!
தமிழீழச் சுதந்திர இதழ் வாழ்க!
உனக்கென வாழும் தமிழ் வாழ்க!
உலகிலெம் தமிழ் ஈழம் வாழ்க!

இக் கவிதை தமிழரசுக்கட்சியின் இதழான சுதந்திரனையும் தமிழ் இளைஞர் பேரவையினரின் திங்களேடான சுடரையும் வாழ்த்தி ஐப்பசி 1976 இல் எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## பொங்கல்

கடுமிடர் மிக்குள காடெலா மழித்துக்
களனிகளாக்கிக் கவின் பயிர் வளர்த்துப்
படுபயன் அளிக்கும் பான்மைசேர் உழவர்க்குப்
பார்விளை பயிர் அறுவடைசெய்யும் நாளே — பொங்கல்

பிடியென நடைபயில் பெய்வளை தனக்குப்
பேதையின் அன்பர் பெட்டாங்கு அயல் தரத்
தொடியலை கரமதைத் தொட்டவன் பற்றித்
தொடலை யோடுதாலி தோட்சூடும் நாளே — பொங்கல்

கடிமணம் புரிந்துள காதலர் கன்னக்
கதுப்பிலே கள்ளுண்டு காலவரையின்றி
உடுதுகில் குலைந்திட ஊடியே கூடிவாய்
இதட் சுவை பருகும் இன்பம் நிறை நாளே — பொங்கல்

இடரிலா வகை சேர் இல்லறங் கண்டு
இன்ப நற் சுகமுற இருப்பவர் தமக்குப்
படரிலா வகை சேர் பண்புடை மக்கள்
பாரிலே வந்தின்பப் பான்மை சேர்த்திடு நாளே — பொங்கல்

வடுவிலா வகையில் வலிமை சேர் துறவறம்
தனையுடையவராகத் தரணியில் இருப்போர்க்கு
அடியவர்க்கு எளியவனாய் ஆண்டருள் புரியும்
இறைவனடிசேர்ந்து இருளறும் நாளே — பொங்கல்

தடியொடு ஊரெலாம் தாளற நடந்து
தாங்கிய தொன்னையில்(த்) தாருங்கள் ஐயமென்று
இடுபொரு ளேற்று இன்னுயிர் வாழ்வோர்க்கு
ஊனுயிர் என்பன உலகிலிரண்டாகும் நாளே — பொங்கல்

படிப்பகம்

padippakam



கொடுபனி தன்னிலும் கொழுந்தினைப் பறித்தே
கொடியவர் தம்மின் கொடும்பசி யாற்றிப்
படுபசி தன்னாற் பரிந்துயிர் துறக்கும்
பண்புயர் மலையகப் பாட்டாளிக்கு எந்த நாள் – பொங்கல்

கொடிகுடை யிழந்து கொடியவர்க்கு அடிமையாய்
குமுறிடுமுள்ளக் கொதிப்புடன் வாழ்வே
கொடுமையாய் இங்கே கொண்டுமே அழியும்
கோதறு தமிழருக்குக் கோளிலே எந்த நாள் – பொங்கல்

01. 01. 1976

படிப்பகம்

padippakam



## பைந்தமிழ்ச் சுவை தந்தோம்!

மானமென்றும் வீரமென்றும் உள்ளதெல்லாம்
மானிலத்தில் அழிந்தொழிந்த நிலையி லின்று
கூனல்பெறு தமிழ்நிலத்தின் துயர்கள் துடைக்கக்
குடையொன்று தமிழுக்கென்று ஆத லொன்றே
ஆனநல் வழியென்று அறிவால் இயம்பி
அதற்கான நெறிதன்னைச் சமைத்து நின்ற
தேனொழுகு தமிழ்மகளின் செல்வர் தம்மைச்
சிறைப் பிடித்தார் சிறுமதியின் ஆட்சியாளர்.

கூடு தன்னிற் பறவை நிலை எத்தனை நாள்
குவலயத்திற் குனிந்த நிலை எத்தனைநாள்
நாடு தன்னைத் தமிழுக்கென்று அமைக்கச் சென்று
நாடியுள்ளீர் விலங்கதனைக் கைகள் தம்மில்
ஈடு இல்லா இத்தியாகச் செம்மல்களே!
இப்புவியில் எதை அளிப்போம் கைம்மாறாகப்
பாடுபட்டு நாம் சமைத்த இந்த நூலின்
பைந்தமிழ்ச் சுவை தந்தோம் காணிக்கை!

இக் கவிதை இலங்கைப் பல்கலைக்கழகக் கட்டுபெத்தை வளாகத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டு மலரான **நுட்பம்** 1976 இன் முதற் பக்கத்திற்கென அதன் அவ்வாண்டின் ஆசிரியர் திரு. க. ஜெயேந்திரன் அவர்களிடம் கொடுக்கப்பெற்றது.

படிப்பகம்

padippakam



## என்றும் என் நினைவகலாய்

அண்ணன் எனக்கில்லை அவன் பார்ப்பான் என்றிருக்க
ஆசைத் தம்பியில்லை அஞ்சலண்ணா என்றணைக்க
மண்ணில் எனைநம்பி வந்த ஐந்து மலர்க் கொடிக்கும்
மாட்டிவிட வுள்ள மணாளர் எனுங் கொம்பர்
கண்ணின் இமைபோலக் காத்துநிற்பார் எனையும் என்று
கட்டியுனை முதற்கொடிக்கும் கட்டுண்டேனுன்னன்பில்
விண்ணில் ஏகிவிட்டாய் விரைவினிலே எமைப் பிரிந்தாய்
வீழ்கொடியள் ஆக்கிவிட்டாய் விளங்குமொரு பூவோடு.

சாணேற முழஞ்சறுக்கும் என்ற மொழிக்குச்
சார்பான சம்பவங்கள் கேட்டதுண்டு
ஆனாலும் ஓர்நல்ல கதையை வேண்டி
அடிக்கடியான் சிந்தித்த தன்மை கண்டோ
சாணேறி முழஞ்சறுக்க வைத்தாய் என்னைச்
சாதலிங்கு புதுமையல்ல ஆனாலும் நீ
நானேற முனைகையிலே நடுங்க வைத்தாய்
நல்லதுவோ இதுவுனக்கு நீதியாமோ?

என்ன தவறிழைத்தோம் ஏன்பிரிந்தாய் மூன்றாண்டில்
கன்னல் மழலையினைக் கருத்தகல விட்டகல
என்ன மனமுனக்கு எஃகோ கருங்கல்லோ
பின்னே உனைத் தொடர்ந்த பேதைனைப்பிரிந்தகல
என்ன அவசரமோ எவர்க்குதவ விழைந்தனையோ
உன்னை மைத்துணனாய் உவந்தேற்க உம்பருமே
எண்ணி அழைத்தனரோ எனக்கெதிரி ஆகினரோ
ஏதும் நானறியேன் என்றுமென் நினைவகலாய்.

வந்தாய் மைத்துணனாய் வளங்கொழிக்கும் என்றிருந்தேன்
வந்தவுடன் ஏகிவிட்டாய் வளமெக்கு இல்லையென்றோ
எந்தாய் தந்தையரும் ஏற்றுநின்றார் மகன் போலே
ஏற்றமைதான் குற்றமென்றால் ஏகுவதோ இவ்விரைவில்
அந்தோ இவ்வுலகில் ஆருமே இறப்பதுதான்
ஆனாலுமிப்படியோ அவ்வளவென்ன அவசரமோ
இந்தா இனிமேலும் இவ்வண்ணம் இயற்றிடாமல்
இறைவன் மலர்ப்பாதம் என்றும்' நிலைத்திடுவாய்.

---

22.03.1978 தனது 29வது வயதிலே அமரரான முதலாவது மைத்துணர் திரு. கி. பொன்னம்பலம் (சிவா) அவர்களின் பிரிவாற்றாது, 11.04.1978 அன்று எழுதப்பெற்றது.

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



## நாற்று
## கவிஞர் கந்தையா இராஜமனோகரன்

வட தமிழீழத்திலுள்ள சுதுமலை என்னும் ஊரிலே பரராஜசிங்கம் என எல்லோராலும் அறியப்பெற்ற திரு சதாசிவம் கந்தையா என்பவருக்கும் அவரது துணைவியார் மனோன்மணி அவர்களுக்கும் மூத்த மகனாகப் பிறந்தவரே இந்நூலின் ஆசிரியரான திரு கந்தையா இராஜமனோகரன் அவர்கள்.

இருபதாம் நூற்றாண்டின் எழுபதுகளிலே விதைத்த தன் கவிதைகளை இன்று தமிழீழத்திலிருந்து பெயர்த்து இங்கிலாந்திலே நடுகின்றார். எனவே நாற்று எனப் பெயரிட்டுள்ளார்.

தென்றலுக்குத் தாயாகி மண்ணுக்கு மலராகிப் பணி என்ற இசைக்கு யாழாகி மக்கள் உள்ளங்களில் மலர்ந்தவர் நீங்கள். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வாலிப மீசை முறுகிக் கறுக்கு முன்பே பல்கலைக்கழகத்தில் உங்கள் சிந்தனை மின்னல்களைத் திரட்டியிருக்கிறீர்கள், சிறந்த கவிஞனுக்குத் தேசத்தின் எதிர்காலம் திரையில்(த்) தோன்றுகிறது.

பண்பாடு பெற்றெடுத்த பாவலனே நாவலனே
பெண்பாடும் பொன்னரசி பிரிய தமிழ் மல்லிகையாள்
கண்பாடும் மூன்று முத்தும் கையினிலே பெற்றவனே
விண்பாடும் உன் கவிதை விளக்கில் துயில் கொண்டேன்.

- புலவர்மணி, மதுரகவி இளவாலை அமுது, இலண்டன்.

தெள்ளிய நல்விழைவு எஞ்ஞான்றும் இராசமனோகரர்க்குத் தமிழரை நெஞ்சில் எண்ணி உள்ளத்து எழுந்தவற்றை ஈழமண்ணில் விதைத்து நீரோடு உரமிட்டு வளர்த்து நாற்றாக்கி... இளமைப் பருவத்தே எழும் பல நினைவுகளைக் காதலுடை இனிய நற் பாக்களாய் இயற்றிப்பின், களம்புகுந்து தமிழர்நம் மண்ணுரிமை மொழிநலன் காக்கச் சமர்தொடுத்து உரிமை காத்தலை, எழிலொழுக வரலாறாய் எழுதிவைத்தார் பா வடிவில்...

- தமிழ்மணி அரங்க முருகையன், இலண்டன்.

இவரது படைப்பாற்றலை, புலப்பெயர்ச்சிக்கு முன், புலப்பெயர்ச்சிக்குப் பின் என வகுத்து நோக்கலாம். முன்னையது நாற்று எனும் கவிதைத் தொகுப்பாய் அமைவது. இராசமனோகரனின் படைப்பாற்றலின் சாட்சி.

- பண்டிதர் சு.வேலுப்பிள்ளை, நாவற்குழி, தமிழீழம்.

இலக்கியத் தேடல் இராசமனோகரனோடு இணைந்திருப்பது. வெளிச்சமாய் - மனதிற் பட்டதை மறைக்காமல் வெளியே சொல்லும் வெள்ளைத்தனம். வாழ்நாளெல்லாம் தமிழ், தமிழ்மண், தமிழினம் என வாழும் அவரைப் பெற்றவள் தாய் - வளர்த்தவள் தமிழ்.

- உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், சென்னை, தமிழ்நாடு.

ISBN
0 9545296 0 X

படிப்பகம்